பக்கங்கள் : 16+VI=22

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 27 ஞாயிற்றுக்கிழமை (11-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:229

## புத்தளத்தில் பௌத்த பிக்கு படுக்கையில் தீமூட்டிக் கொலை!

### நேற்று அதிகாலை வேளை சம்பவம்

கொழும்பு,ஜூலை11

புத்தளம் கொட்டுக்கட்சி என்னும் இடத்தில் நேற்று பௌத்த விகாரை ஒன்றைத் தீக்கிரையாக்கிய இனந்தெரியாதவர்கள் அந்த விகாரையின் விகாராதிபதியை தீ மூட்டிக் கொலை செய்திருக்கின்றனர்.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நள்ளிரவு வேளையில் விகாராதிபதி நித்திரையில் இருந்த சமயம் விகாரைக்குள் நுழைந்த இனந்தெரியாத நபர்கள் முதலில் விகாரைக்குத் தீமூட்டியுள்ளனர். அதன் பின்னர் 75 வயதுடைய விகாராதிபதியை உறக்கத்தில் வைத்தே

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட் வீச்சில் காயமடைந்த விகாராதிபதி காலமானார்

கொழும்பு,ஜூலை11

ஹிங்குராகொடைக்கு அருகில் உள்ள தியாபுபுல பௌத்த விகாரை மீது கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் படுகாயமடைந்திருந்த அந்த விகாரையின் விகாராதிபதி நேற்றுக்காலை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மரணமானார்.

80 வயதான இவர் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார் சிகிச்சை பயனளிக்காது நேற்று அவர் மரணமானார்.

கருணா குழுவைச் சேர்ந்த 14பேர் பயங்கர ஆயுதங்களுடன் இந்த விகாரையில் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்பது தெரிந்ததே.

அதன் பின்னரே விகாரைமீது குண்டு வீசப்பட்டது.

(ஐ-3)

# கிழக்குப் படுகொலைகளுக்கு இராணுவமே முழுப்பொறுப்பு!

## 'தென்றல்' சேவை ஊடாகப் பொய்ப் பிரசாரம் ரி.பி.சி. ஒலிபரப்புக் குறித்து புலிகள் கண்டனம்

மட்டக்களப்பு,ஜூலை11

**கிழக்கில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் படுகொலைகள் மற்றும் சூட்டுச் சம்பவங்களுடன் விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்தி, லண்டனிலிருந்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 'தென்றல்' ஒலிபரப்பு சேவை ஊடாக மேற்கொள்ளப்பட்டுவரும் விசமப் பிரசாரங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மீண்டும் தமது கடும் கண்டனத்தை வெளியிட்டிருக்கின்றனர்.**

**கடைசியாக மட்டக்களப்பு கல்லடியில் இடம்பெற்ற கிராம சேவையாளரது படுகொலை உட்பட இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெறும் சகல படுகொலைகளுக்கும் ஸ்ரீலங்காப் படைகளே முழுப்பொறுப்பு என்று விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல் பிரிவு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.**

லண்டனில் இருந்து 'தென்றல்' ஊடாக ஒலிபரப்பப்பட்டு வரும் ரி.பி.சி. ஒலிபரப்பு சேவை தமிழ் மக்களிடையே குழப்பத்தையும், பீதியையும் ஏற்படுத்தும் வகையில் விசமப் பிரசாரத்தை மேற்கொண்டுவருவதாக அந்த அறிக்கையில் புலிகள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்.

இதுதொடர்பாக மட்டு - அம்பாறை அரசியல்துறை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்த் தேசவிரோத சக்திகளால் லண்டனில் இருந்து ஒலிபரப்பப்படும் ரி.பி.சி. ஒலிபரப்பினை சிறிலங்கா அரசு தனது அரச ஊடகமான 'தென்றல்' ஒலிபரப்பு ஊடாக ஒலிபரப்பு செய்து வருவதும் தற்போது சமாதானத்தை பாதிக்கும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படை சிப்பாய் தாக்கப்பட்டார்!

அதிரடிப்படை சிப்பாய் ஒருவர் இளைஞர் குழுவொன்றினால் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் கொழும்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏறாவூர் அஷ்ரப் பாடசாலைக்கு முன்பாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஏறாவூரைச் சேர்ந்த ஜமால்தீன் சுபைதீன் என்ற அதிரடிப்படைச் சிப்பாயே படுகாயமடைந்தவராவார்.

கடந்த வியாழனன்று இரு இளைஞர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட தகராறைத் தீர்த்து வைக்க முற்பட்டபோதே கூரிய ஆயுதங்களான கத்தி, கோடரியால் இவர் தாக்கப்பட்டுள்ளார்.

மட்டககளப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ-3)

## கல்வியங்காட்டில் கிரனேட் வெடிக்கவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை11

நல்லூர் பொதுச்சந்தைக்கு அருகே வைரவர் ஆலயத்துக்கு பின்புறமாக உள்ள அரச மரத்தடியில் இந்தக் கைக்குண்டு ஒன்று நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் செயலிழக்கச் செய்யப்பட்டது.

கோயிலின் அருகிலுள்ள அரச மரத்தின் வேர்கள் அப்பகுதியில் உள்ள சிமெந்துச் சுவர்களை உடைப்பதைத் தடுப்பதற்காக வேர்களை வெட்டி அகற்றியபோது இந்தக் கிரனேட்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை வலியுறுத்தி ஐ.ஒன்றியம் அறிக்கை

கொழும்பு,ஜூலை11

இலங்கையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க சகல தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப்பீடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இலங்கையில் உள்ள சகல சமூகத்தினரும் தங்களுக்கும் தமது பிள்ளைகளுக்காகவும் சமாதானத்தை வேண்டி நிற்கிறார்கள். எனவே, நாட்டில் மேலும் வன்செயல்கள் நடைபெறாது தடுத்து யுத்த நிறுத்தத்தை அமுல் செய்வதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டுமெனவும் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

# மாகாணசபைத் தேர்தல் வாக்களிப்பு மிக மந்தம்

## தபால் மூல முடிவுகளின்படி ஆளுங்கட்சி முன்னணி

கொழும்பு,ஜூலை11

தென்னிலங்கையில் ஆறு மாகாண சபைகளுக்கு நேற்று நடைபெற்ற தேர்தலில் வாக்களிப்பு மிகவும் மந்த நிலைக்குச் சென்றிருக்கின்றது.

இலங்கையின் தேர்தல் சரித்திரத்திலேயே மிகவும் மந்தமான வாக்களிப்பு இது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் நிலவும் அரசியல் ஸ்திரத்தன்மை ஆட்சிக் குழப்பங்கள், பொருளாதார நெருக்கடி என்பனவே வாக்களிப்பில் மக்கள் ஆர்வம் கொள்ளாததற்குக் காரணம் என்று அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேல், தென், ஊவா, சப்பிரகமுவ, வடமத்திய, மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் ஒரே நாளில் நேற்று நடைபெற்றன.

நேற்றுக் காலை 7 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமான போதும் நண்பகல் வரை பெரும்பாலான வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் வாக்களிக்கச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலான வாக்களிப்பு நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

கொழும்பு நகர் பகுதியில் வாக்களிப்பு மிக மோசமான நிலையில் இருந்தது. நண்பகலுக்கு பின் ஓரளவு வாக்களிப்பு நடந்துள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### யுத்தநிறுத்த மீறல்கள்:

## கண்காணிப்புக் குழுவின் அறிக்கை அடுத்த வாரம்

கொழும்பு,ஜூலை11

கிழக்கில் உருவாகியிருக்கும் நெருக்கடி மற்றும் சமாதான முயற்சிகளை முன்நகர்த்துவதில் தோன்றியுள்ள சிக்கல்களுக்கு மத்தியில் யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறல்கள் தொடர்பாக விவரமான அறிக்கை ஒன்றை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு வெளியிட இருக்கிறது. இந்த அறிக்கை பெரும்பாலும் அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று தெரிகின்றது.

கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

கிழக்கில் இடம்பெறும் சம்பவங்கள், கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு போன்ற சம்பவங்கள் யுத்தநிறுத்த உடன்பாட்டுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளன என்று தெரிவிக்கப்படும் தகவல்கள் தொடர்பாகவே விவரமான அறிக்கை ஒன்றை கண்காணிப்புக் குழு அடுத்தவாரம் வெளியிடும்.

அறிக்கையை அளவிடுவதற்கு முன்பாக அந்தந்தப் பிரதேச கண்காணிப்பாளர்கள் நிலைமைகளை விரிவாக ஆராய்ந்து வருகின்றனர். அவற்றின் அடிப்படையிலேயே கண்காணிப்புக் குழுவின் அறிக்கை அமையவிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

### தமிழர் விழாவில் கலந்துகொள்வதற்காக

## கனடாவிலிருந்து சென்ற தமிழரை அமெரிக்க அதிகாரிகள் தடுத்தனர்

நியூயோர்க்,ஜூலை11

அமெரிக்காவில் நடைபெற்ற 17ஆவது தமிழர் விழாவில் கலந்துகொள்வதற்காக கனடாவில் இருந்து சென்ற தமிழர்கள் அமெரிக்க அதிகாரிகளால் தடுக்கப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

இதுதொடர்பாக அமெரிக்காவில் உள்ள தமிழ் அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்திருக்கின்றன என்று இணையத்தள செய்தி ஒன்று கூறுகிறது.

அமெரிக்க - கனேடிய எல்லையில் வைத்து அமெரிக்க அதிகாரிகளினால் தமிழர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் போல்ரிமோர் மாநிலத்தில் இம்மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகி 5ஆம் திகதிவரை 17ஆவது தமிழர் விழா சிறப்பாக நடைபெற்றிருந்தது. வழமைபோல் இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காகச் சென்ற கனேடியத் தமிழர்கள் பலரே இவ்வாறு எல்லையில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் இவ்வாறு மீள அனுப்பப்பட்டமைக்கு தகுந்த காரணங்கள் அமெரிக்க அதிகாரிகளினால் வழங்கப்படாத நிலையில் கனேடிய மற்றும் அமெரிக்கத் தமிழ் அமைப்புக்கள் தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இராமேஸ்வரத்திலிருந்து தாயகம் புறப்பட்ட 17 அகதிகள் கைது!

## வேட்டுக்களைத் தீர்த்துப் பிடித்தது இந்தியக் கடற்படை

இராமேஸ்வரம்,ஜூலை11

இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கு கள்ளத்தனமாகச் செல்ல முயன்ற படகை இந்தியக் கடற்படையினர் துப்பாக்கியால் வானத்தை நோக்கிச் சுட்டுப் பிடித்தனர். படகில் இருந்த 3 சிறுவர்கள், 6 பெண்கள் உட்பட 17அகதிகளும் 2 படகோட்டிகளும் கைது செய்யப்பட்டனர்.

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் இராமேஸ்வரம் வழியாக கடத்தல் படகுகள் மூலம் இலங்கை செல்வது தொடர்கிறது. இதனால், ராமேஸ்வரம் கடல் பகுதியில் கடற்படையினர் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றுமுன்தினம் நள்ளிரவில் தனுஷ்கோடி கடல் பகுதியில் இலங்கைப் படகு ஒன்று வேகமாகச் செல்வதைப் பார்த்த இந்தியக் கடற்படையினர், படகை நிறுத்தச் சொல்லி சிக்னல் கொடுத்துள்ளனர். படகு நிற்காமல் செல்லவே வானத்தை நோக்கி 14 முறை துப்பாக்கியால் சுட்டு கோதண்டராமர் கோயில் கடற்பகுதியில் படகை வளைத்துப் பிடித்தனர். படகில் அகதிகளும், அதிகளவில் பொருள்களும் இருந்ததால் படகைக் கைப்பற்றி இராமேஸ்வரம் கடற்படை முகாமிற்குக் கொண்டு வந்தனர். கடற்படைக் கொமாண்டர் மேனன், பிடிபட்ட அகதிகளையும், படகோட்டிகளையும் விசாரணை செய்தார். இதில் வவுனியாவைச் சேர்ந்த ராமு (வயது 39), ஆறுமுகம் (வயது 45), மனோன்மணி (வயது 35), மகாலெட்சுமி (வயது 40), பிரகாஷ் (வயது 13), கிளிநொச்சியைச் சேர்ந்த தமயந்தி (வயது 25), மாலினி (வயது 22) உட்படப் பிடிபட்ட 17 அகதிகளும் கும்மிடிப்பூண்டி அகதிகள் முகாமில் இருப்பதாகத் தெரிவித்தனர். மேலும் தக்கச்சிமடத்தைச் சேர்ந்த ஏஜன்ட் ஈஸ்வரன் என்பவரிடம் இலங்கை செல்வதற்காக படகுக் கட்டணமாக தலா 2 ஆயிரம் பணம் கொடுத்ததாகவும் கூறினர்.

அகதிகளுடன் பிடிபட்ட வவுனியாவைச் சேர்ந்த மாணவிகள் பிரபாவதி (வயது 16), டிலானி (வயது 18) ஆகிய இருவரும் கும்மிடிப்பூண்டி கே.எல்.கே. மேல்நிலைப்பள்ளியில் படித்து வருவதாகத் தெரிவித்தனர். விசாரணையைத் தொடர்ந்து அகதிகள் வைத்திருந்த 7 மொபைல் போன்கள், 6 தங்கச் செயின், தங்க வளையல்கள், மோதிரம், ஜவுளிகள் மற்றும் இந்தியப் பணம் ரூபா 10 ஆயிரம், இலங்கைப் பணம் ரூபா 3ஆயிரம் உட்பட பல்வேறு பொருள்களும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட படகும் 2 இயந்திரங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. (ஐ)

## மருத்துவபீட மாணவர்களுக்கு!

யாழப்பாணம்,ஜூலை11

யாழ். மருத்துவபீட மாணவர்களுக்கான விசேட கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பட விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு மருத்துவ மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (-3)

## ஆன்மீகச் சொற்பொழிவு

வடமராட்சி,ஜூலை11

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயிலின் பெரியாழ்வார் மடத்தில் பிரதி ஞாயிறு தோறும் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவு வரிசையில் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆசிரியர் இரா.திருமாறன், 'இராமாயணம் காட்டும் வாழ்வின் தத்துவங்கள்' என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார். (எ-173)

## பொதுக் கூட்டம்

கைதடி,ஜூலை11

கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் அதிபர் பி.முத்துலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-75)

# பட்டதாரி பயிலுநர்களுக்கு மீள் பரீட்சை நடத்தப்படும்

## பொதுச்சேவை ஆணைக்குழு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை11

வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய பட்டதாரிப் பயிலுநர்களுக்கு மீள்பரீட்சை நடத்தப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி ஆர்.வரதலிங்கம் இவ்வாறு அறிவித்துள்ளார் என மாகாண உள்ளூராட்சி உதவியாளர் சங்கச் செயலாளர் தெரிவித்தார். இது விடயமாகத் தமக்கு கடிதமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அரசின் முன்னுரிமைப் பணிகளை நிறைவேற்றுவதற்காக ஆள்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களுக்கான முதலாவது வினைத் திறமைகாண் தடைப்பரீட்சை நடைபெற்று அன்மையில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியிருந்தன.

மேற்படி பரீட்சையில் சித்தியெய்தத் தவறிய உள்ளூராட்சி உதவியாளர், அபிவிருத்தி உதவியாளர், பாடசாலை முகாமைத்துவ உதவியாளர் ஆகியோருக்கு மீளவும் வினைத்திறமைகாண் பரீட்சை நடத்துமாறு உள்ளூராட்சி உதவியாளர் சங்கம் மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் ஊடக பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரைக் கடிதம் மூலம் கோரியிருந்தது.

இதற்கு அமையவே இப்பரீட்சையை விரைவில் நடத்துவதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விரைவில் பதவி உறுதிப்படுத்தப்பட்டு தரம் 2பதவி நிலை அலுவலர்களாக தரம் உயர்த்தப்படவுள்ளனர்.

பதவி உறுதிப்படுத்துவதற்கான விவரங்களை அனுப்பாதவர்கள் எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக அவற்றை அனுப்பிவைக்கவேண்டும். மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திருமதி க.சிவசிதம்பரம் அனைத்து உள்ளூராட்சி சபை மற்றும் திணைக்களங்களை கடிதம் மூலம் கேட்டுள்ளார். (எ-185)

# திருட்டுகளுடன் தொடர்புடைய நபர் பொலீஸாரிடம் சிக்கினார்

## திருடப்பட்ட தங்க நகைகள் பலவும் மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூலை11

யாழ். நகரப் பகுதியில் அண்மைக் காலமாக இடம்பெற்றதாகக் கூறப்படும் பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் ஒருவரை யாழ். குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலீஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர். அவரிடமிருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

யாழ். அரியாலைப் பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய நபர் ஒருவர் குறித்து அப்பகுதி மக்கள் யாழ். பொலீஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்தனர். இதனையடுத்து அப்பகுதிக்கு விரைந்த யாழ். பொலீஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஐ.பி.விக்கிரமரத்ன தலைமையிலான குழுவினர் சந்தேகநபரைக் கைதுசெய்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து அவரால் விற்பனை செய்யப்பட்ட தங்க ஆபரணங்கள் சுன்னாகம் , யாழ்ப்பாணம், சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை நகரப் பகுதிகளிலுள்ள நகைக் கடைகளிலிருந்து கைப்பற்றப்பட்டன.

பொலீஸாரினால் கைப்பற்றப்பட்ட ஆபரணங்களின் பெறுமதி ஒரு லட்சம் ரூபாவிற்கு மேற்பட்டது என மதிப்பிடப்பட்டுள்ளது.

சங்கிலி, கைச்சங்கிலி, தோடு, காப்பு மற்றும் ரேப் றெக்கோடர் என்பன சந்தேகநபர் வழங்கிய வாக்குமூலத்தின் பிரகாரம் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆபரணங்களில் பெரும்பாலானவை உருக்கப்பட்ட நிலையிலேயே காணப்பட்டன.

இதேவேளை -

இந்நபருடன் மேலும் பலர் தொடர்பு வைத்திருப்பது தெரியவந்திருப்பதாகவும் மேலதிக விசாரணைகளை யாழ். குற்றத் தடுப்புப் பிரிவு பொலீஸார் மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)



யாழ். நகரப் பகுதியில் பல லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் ரேப் றெக்கோடர் என்பவற்றைத் திருடியவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரை யாழ். பொலீஸார் நேற்றுக் கைதுசெய்தனர். மீட்கப்பட்ட நகைகளுடன் யாழ். பொலீஸ் நிலையக் குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த் ஐ.பி.விக்கிரமரத்ன மற்றும் சக பொலீஸாரையும் படத்தில் காணலாம்.

# 4 மாதங்களில் வவுனியாவில் 15 சிறுவர் துஷ்பிரயோகங்கள்

வவுனியா,ஜூலை11

வவுனியா மாவட்டத்தில் கடந்த நான்கு மாதங்களுக்குள் சுமார் 15 சிறுவர்கள் பல வகையான துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு மையம் தெரிவித்துள்ளது.

சிறுவர் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டமை, வீட்டுவேலைக்கு அமர்த்தப்பட்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகக் கடந்த மார்ச் மாதம் 6 முறைப்பாடுகளும், ஏப்ரல் மாதம் 6 முறைப்பாடுகளும், ஜூன் மாதம் 3 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாகவும் -

பாதிக்கப்பட்டவர்களில் 9 பெண்களும், 6 ஆண்களும் அடங்குவர் எனவும் -

வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.இரகுநாதபிள்ளை தெரிவித்தார்.

இம்முறைப்பாடுகளில் 7 முறைப்பாடுகள் நலன்புரி நிலையத்திலிருந்தும், 4 முறைப்பாடுகள் மீள்குடியமர்த்தப்பட்ட கிராமங்களிலிருந்தும் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் சிறுவர் தொடர்பாகவும், அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும், அவற்றுக்கான தீர்வு தொடர்பாகவும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு மையம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

'யுனிசெவ்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் வைத்தியகலாநிதி கேதீஸ்வரன் தலைமையில் இந்த மையம் இச்செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (4-201-164)

# ஆசிரியர் வாண்மை விருத்தி செயலமர்வு நேற்று ஆரம்பம்

வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரிய நிலையங்கள் இணைந்து நடத்தும் ஆசிரிய வாண்மை விருத்திச் செயலமர்வு நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமானது.

இரு தினங்கள் நடைபெறும் இச்செயலமர்வில் நேற்றைய நிகழ்வு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி தனபாலன், வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன், அம்பாறை ஆசிரிய நிலைய முகாமையாளர் காமினி, வடக்கு - கிழக்கு மகாண கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த எம்.முருகுப்பிள்ளை ஆகியோர் உட்பட நூற்றுக்கணக்கான ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இவ்விருநாள் செயலமர்வில் ஆசிரிய வாண்மையும் தொழில் வழிகாட்டலும், விளையாட்டு மூலம் ஆரம்ப கணித கற்றல் உத்திகள், செயலாய்வும் செயற்பாடுசார் பாடத் திட்டமிடலும், வினைத்திறன் மிக்க கற்றலின் பிரதிபலிப்புகள், குழுவாக்கல் உத்திகள், மாணவர்கள் எதிர்நோக்கும் உளவியற் சவால்கள், மகிழ்ச்சிகரமான கற்றல், புத்துணர்வூட்டல் நுட்பங்கள், கற்றல் - கற்பித்தல் ஊடகமாக பொம்மலாட்டம், நவீன கற்றல் - கற்பித்தல் துணைச் சாதனங்கள் போன்ற ஆசிரிய வாண்மைக்கு வலுவூட்டல் அறிவுத் தொகுதிகளுடனான செயற்பாட்டு அமர்வுகளும் இடம்பெறுகின்றன. (4-202-203)

## லயன்ஸ் நிர்வாகிகளின் பதவியேற்பு வைபவம்

அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகிகளின் பதவியேற்பு வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் புதிய தலைவராக லயன் ஆர்.கிருஷ்ணனும், செயலாளராக லயன் அ.அருந்தவநேசனும், பொருளாளராக லயன் எஸ்.யோகசிங்கமும் பதவியேற்கவுள்ளனர்.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக 306 'பி' வலயம் 2இன் மாவட்ட செயலாளர் எஸ்.ஞானராஜா கலந்துகொள்வார்.

விழாவில் விசேட செயற்றிட்டமாக இடைக்காடு தொடக்கம் சிறுப்பிட்டி வரையான பாடசாலைகளைச் சேர்ந்த தரம்5(2003) புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளிற்கு மேல் பெற்றவர்களுக்கு அன்பளிப்பு பொருள்கள் வழங்கப்படவுள்ளன. (எ-72)

# கொள்ளைக் கோஷ்டியைத் தேடி நெல்லியடி பொலீஸ் வலைவிரிப்பு

கரவெட்டி,ஜூலை11

வடமராட்சி கப்புது பகுதியில் குழந்தையைப் பணயம் வைத்து வெளிநாட்டில் இருந்து வந்த குடும்பத்தினிடம் இருந்து பணம் மற்றும் பொருள்களைக் கொள்ளையடித்த திருட்டுக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையை நெல்லியடிப் பொலீஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்தத் திருட்டுக் கோஷ்டியைச் சேர்ந்த எஸ்.சீக்கியன், எஸ்.மனோ ஆகிய இரு நபர்களை பொலீஸார் ஏற்கனவே கைது செய்திருந்தனர்.

இந்தத் திருட்டுக் குழுவில் மேலும் சிலர் இடம்பெற்றிருந்திருக்கலாம் என்ற தகவலை அடுத்து அவர்களைத் தேடிப் பொலீஸார் வலை விரித்துள்ளனர்.

வடமராட்சி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் டி.பிரேமரத்தினவின் பணிப்பின் பேரில் நெல்லியடி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பா.தர்மதாஸவின் உத்தரவின் படி குற்றவியல் பிரிவுப் பொறுப்பதிகாரி பொ.பா.ஜெயவீர, தலைமையில் கான்ஸ்டபிள்களான அபயரத்ன சமிந்த, ஜுனைட்மன், நிமல், லோகநாதன், தர்மப்பிரிய, ஜோன்சன், ஆனந்த, ஜெயசேகர ஆகியோர் கொண்ட குழு இத்திருட்டுக் கோஷ்டியைக் கைதுசெய்யும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (ஐ-3-70)

உதயன்

## புலிகள் மீது குற்றம் சுமத்த அருகதை - தகுதி - உண்டா?

சுமார் இரண்டரை வருடங்கள் நீடித்த அமைதிக்காலத்தில் - சமாதானவேளையில் - திடீர் அதிர்வாகக் கொழும்பு கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் கடந்த புதன்கிழமை தற்கொலைக் குண்டு வெடித்திருக்கின்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வைக்கப்பட்ட இலக்கு இது என்றும், விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் பரவலாகப் பிரசாரப்படுத்தப்பட்டு வருகின்றது.

அது தவறு என்று சொல்வதோ அல்லது சரி என்று சொல்வதோ எமது நோக்கமல்ல.

அதேபோன்று ஒன்றோ, பலவோ - மனித உயிர்களுக்கு உலைவைக்கப்பட்ட - அந்தச் செயற்பாட்டுக்கு நியாயம் கற்பிப்பதோ அல்லது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வைக்கப்பட்ட இலக்குத்தான் அது என்றால் அது சரி என வாதிடுவதோ எமது எண்ணமும் அல்ல.

ஆனால், இந்தச் சம்பவங்களையொட்டி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அவரது கட்சியினரும் தெரிவித்த சில கருத்துக்கள் அவதானிக்கப்பட வேண்டியவை என்பதால் அவற்றைச் சுட்டிக்காட்ட விளைகிறோம்.

தம்மிடம் மன்னிப்புப்பெறும் கீழ்நிலையில் தலைவர் வே.பிரபாகரன் இருப்பது போலவும், அவருக்கு மன்னிப்பு வழங்கும் உத்தம கௌதம புத்தர் போன்ற உயர்நிலையில் தாம் இருக்கிறார் என்பது போலவும் கற்பனை பண்ணிக்கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்ட கருத்தை, தற்கொலைக் குண்டுத்தாக்குதல் பற்றிய அதிர்ச்சித் தகவலை அறிந்து ஏற்பட்ட கலக்கத்தில் வெளியிடப்பட்டவை எனக்கருதி ஒதுக்கிவிடுவோம்.

"போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இறுக்கமாகக் கடைப்பிடிக்கிறோம் எனக்கூறிவரும் புலிகள், தென்னிலங்கையில் கரும்புலித் தாக்குதலை நடத்த முயற்சிப்பதும் குண்டுகளை வெடிக்கவைப்பதும், புலிகள் எந்தத் திசையில் பயணிக்க விரும்புகின்றார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது" - என்று டக்ளஸ் தேவானந்தாவின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) மேற்படி குண்டு வெடிப்புத் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

மேற்படி தற்கொலைக் குண்டுத்தாக்குதலை விடுதலைப் புலிகள் இயக்கமே நடத்தியது என அடித்துக் கூறுகின்றது ஈ.பி.டி.பி.

தாங்களே அதனை நடத்தினார்கள் என்பதை புலிகள் இதுவரை ஒப்புக்கொள்ளாவிட்டாலும் - ஒரு வாதத்துக்கு - ஈ.பி.டி.பியும் தென்னிலங்கை அரசும் அதன் தரப்புகளும் கூறுவதுபோல - புலிகளே அதைச் செய்தார்கள் என்று வைத்துக்கொள்வோம்.

அத்தகைய நிலையில் அந்தச் சம்பவத்தைச் சுட்டிககாட்டி, புலிகள் யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு உடன்பாட்டை மீறிவிட்டார்கள் என்று குற்றஞ்சுமத்தும் அருகதை - தகுதி - ஈ.பி.டி.பிக்கு உண்டா என்பதே கேள்வி.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி சம்பந்தப்பட்ட இருதரப்பும் (அரசும், புலிகளும்) பரஸ்பரம் நம்பிக்கைதரும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

அதுமட்டுமல்ல, வடக்கு - கிழக்கில் அரசுப் படைகளையும் புலிகளையும் தவிர வேறு எவரும் அயுதங்களுடன் செயற்படவே முடியாது. தமிழ்க்குழுக்கள் - துணைப்படைகள்கூட - புரிந்துணர்வு ஒப்பந்தப்படி வடக்கு - கிழக்கில் ஆயுதங்களுடன் தலைகாட்ட முடியாது.

ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் இந்த ஏற்பாடுகளுக்கு மாறாக, கிழக்கில் கருணா குழு அராஜகம் புரிந்து வருகின்றது; ஆயுதங்களுடன் அலைகின்றது; ஆள்களைக் கொல்லுகின்றது; போராளிகளை அழிக்கின்றது. ஒட்டுமொத்தத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கே வேட்டுவைக்கும் - மோசம் செய்யும் - 'திருப்பணியை' முன்னெடுக்கின்றது.

இத்தகைய கருணா குழுவுக்கு அரசுத்தரப்போ அல்லது அதன் அங்கமோ அல்லது வேறு அணிகளோ உதவி, ஒத்தாசை செய்தால் அவையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மாறாகவே செயற்படுகின்றன என்றுதான் அர்த்தம்.

கருணா ஏதோ ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்கு வழி தெரியாதவர் போலவும் அவருக்குத் தாம்தான் வழிகாட்டி - குரு - போலவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறலாம்.

ஆனால், கருணா தான் இன்று கிழக்கில் வன்செயல் அராஜகங்களுக்கு மூலகாரணம் என்பது வெளிப்படை; வெள்ளிடைமலை. அவரது செயற்பாடுகள் முழுவதுமே யுத்தநிறுத்த ஏற்பாடுகளுக்கு முரணானவையும் அதற்கு அழிவு ஏற்படுத்துபவையுமாகும்.

அத்தகையவரோடு எத்தகைய தொடர்பு வைத்திருந்தாலும் - புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு வேட்டுவைப்பவரை ஊக்குவிக்கும் வகையில் எந்த நடவடிக்கை எடுத்தாலும் - அதனையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முரணான செயற்பாடாகத்தான் கொள்ளவேண்டும்; அர்த்தப்படும்.

அதுவும் இலங்கை அரசில் ஓர் அமைச்சராக இருந்துகொண்டு, கருணாவுடன் தொடர்புவைத்திருப்பதன் மூலம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் - முறிக்கும் - நடவடிக்கையைத்தான் செயகிறார்.

அமைச்சர் என்ற முறையில் அல்லாமல் தனது கட்சி நிலைப்பாடு அடிப்படையில் கருணாவுடன் தாம் தொடர்பு வைத்திருக்கிறார் என அமைச்சர் டக்ளஸ் நொண்டிச் சாட்டுக்கூறலாம்.

ஆனால், கருணாவுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருப்பதன் காரணமாகப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அழிப்பதற்கு வழிசெய்யும் அமைச்சர் தேவானந்தா, அதை மீறும் வகையில் புலிகள் குண்டைவெடிக்க வைத்தார்கள் என்று குற்றஞ்சுமத்துவதற்கு அருகதையற்றவர் என்பது மறுக்க முடியாததல்லவா?

# இரா.சம்பந்தனும் கஜேந்திரகுமாரும் அமெரிக்க பிரதிநிதிகளுடன் சந்திப்பு

வாஷிங்ரன்,ஜூலை11

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேநதிரகுமார், இரா.சம்பந்தன் ஆகியோர் அமெரிக்காவுக்கு விஜயஞ்செய்து அங்கு அமெரிக்க அரசியல் பிரமுகர்கள் சிலரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உதவிச் செயலர் கிறிஸ்ரீனா றொக்கா, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் டொனால்ட் ஹான்டட் ஆகியோரை இவர்கள் சந்தித்தனர்.

இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் டெசிடா ஸ்காவர் தலைமையில் வாஷிங்ரனில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றிலும் இவர்கள் இருவரும் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

இதன்போது -

இலங்கை அரசும் அதனைச் சார்ந்தவர்களும கிழக்கு மாகாணத்தில் ஸ்திரமற்ற ஒரு நிலையை உருவாக்கியுள்ளனர். இதனால், போர்நிறுத்த உடன்படிக்கைக்கு ஆபத்து ஏற்படும் நிலைகாணப்படுகின்றது.

- என்று இரா.சம்பந்தனும் கஜேந்திரகுமாரும் சுட்டிக்காட்டினர்.



நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார், இரா.சம்பந்தன் மற்றும் இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதரும் சர்வதேச கற்கைகள் நிலையத்தின் தெற்காசிய நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளருமான டெசிடா ஸ்காவர் ஆகியோர்.

அத்துடன், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர சமாதானத்துக்காக தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபு அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும், இவர்கள் அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கு சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

தற்போதைய அரசு இரட்டைத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றது. ஒருபுறம் சமாதான விரும்பிகள் போலத் தம்மைக்காட்டிக்கொள்ளும் ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது அரசும் மறுபுறம் திரை மறைவு நடவடிக்கைகள் மூலம் கிழக்கில் ஸ்திரமற்ற நிலையை தோற்றுவித்திருக்கின்றனர்.

இந்த நிலைமையானது சமாதானத்துக்கான சாத்தியப்பாடுகளை இல்லாதொழித்துவிடும். - இவ்வாறு அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(4)

# மாவைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு விசேட ஏற்பாடுகள்

## திருவிழாவின் முன்னேற்பாட்டுக் கலந்துரையாடலில் தீர்மானம்

கொக்குவில்,ஜூலை11

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் கலந்துகொள்ளும் பக்தர்களின் நன்மைகருதி விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத்தின் உற்சவ ஒழுங்குகள் தொடர்பான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல் அண்மையில் வலி.வடக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் கலாநிதி க.குணராஜா தலைமையில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே மேற்கண்ட தீமானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நிறைவேறறப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

★ வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவையினை இம்முறையும் வழமைபோல் நடத்துவதுடன் எதிர்வரும் 22 ஆம் திகதியிலிருந்து அடுத்தமாதம் 14 ஆம் திகதி வரை தினமும் காலை 7.30 மணிமுதல் மாலை 7.30 மணிவரை பஸ்சேவை நடைபெறும். அதேபோல், அடுத்தமாதம் 15 ஆம் திகதியன்றும் காலை 6.30 மணியிலிருந்து போக்குவரத்துச் சேவையை நடத்துதல்.

★ ஆலயச் சுற்றாடலில் துப்புரவுப் பணிகளைச் செய்வதற்கு வசதியாக வலி.வடக்கு பிரதேச சபையைச் சேர்ந்த ஐந்து ஊழியர்கள் தினமும் துவிச்சக்கர வண்டியில் ஆலயப்பகுதிக்குச் சென்றுவர அனுமதியளித்தல்.

★ கோயில் வீதியிலுள்ள மலசல கூடங்களைத் துப்புரவு செய்தலும், ஈ, நுளம்பு ஆகியவற்றுக்கான மருந்துகளை விசிறுதலும்.

★ ஆலய வீதியில் தற்காலிக முதலுதவிச் சேவையினை வழங்குதல் வீடியோ, புகைப்படக்கருவிகள், கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றை ஆலயப் பகுதிக்கு எடுத்துச்செல்லத் தடைவிதித்தல்.

★ ஆலயத் தொண்டர் சபையைச் சேர்ந்த தொண்டர்களின் பெயர் விவரங்களைச் சமர்ப்பித்து முன்கூட்டியே அனுமதி பெறுதல்.

★ தீர்த்தத் திருவிழா அன்னதானப் பிரிவினரில் 15பேரை திருவிழாவின் முதல நாள் இரவு தங்குவதற்கு அனுமதித்தல். காவடி செல்வதற்கு அனுமதி வழங்கல்.

★ விசேட தினங்களாகிய கொடியேறறம், ஐந்தாம் திருவிழா, 18 ஆம் திருவிழா, தேர், தீர்த்தம் ஆகிய திருவிழாக் காலங்களில் மட்டும் சேந்தாங்குளம் வீதியூடாகப் போக்குவரத்துச் சேவையை நடத்துதல்.

★ பக்தர்களது தனிப்பட்ட வாகனங்கள் உட்செல்வதற்கு அனுமதிக்கப்படுவதுடன் சோதனைச் சாவடியில் பலத்த சோதனைக் கெடுபிடிகள் இல்லாமல் பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளுதல்.

இக்கூட்டத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீ சு.து.சண்முகநாதக்குருக்கள், வலி. வடக்கு பிரதேசசபை செயலாளர் செ.செலவரட்ணம், வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை முகாமையாளர் க.பாலசிங்கம், தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க தலைவர் சி.சிவமகாராசா, தெல்லிப்பழை பொது சுகாதாரப் பரிசோதகர் ந.சச்சிதானந்தம், 515 படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள், காங்கேசன்துறை, தெல்லிப்பழை பொலீஸ் பிரிவைச் சேர்ந்த பொலீஸ் அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் இம்மாதம் 22 ஆம் திகதியிலிருந்து அடுத்தமாதம் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-76)

# கொடிவார நிதி சேகரிப்பில் யாழ். சமுர்த்தி அலுவலர் முதலிடம்

வலி.வடக்கு,ஜூலை11

சர்வதேச புகைப்பிடித்தல் எதிர்ப்பு வாரத்தினையொட்டி இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் நடத்தப்பட்ட கொடிவாரத்தின்போது யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சோனகதெரு தெற்கு (ஜே/86) பிரிவில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரான சி.சிறீதரன் 36 ஆயிரத்து 749 ரூபா 50 சதத்தை உண்டியல் மூலம் சேகரித்து நிதி சேகரிப்பில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த க.செந்தூரன் 23ஆயிரத்து 281 ரூபா 50சதத்தைச் சேகரித்து இரண்டாம் இடத்தினையும், கரவெட்டி பிரதேச செயலகத்தைச்சேர்ந்த கே.யோகநாதன் 20 ஆயிரத்து 230 ரூபா 50 சதத்தை சேகரித்து மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளனர்.

இவ்வாறு சேர்க்கப்பட்ட நிதியானது அவ்வப் பிரதேச செயலாளர் பிரிவில் பலவேறு அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-86-31-117)

# வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்கு மூலதன நன்கொடை நிதி கிடைத்தது

வலி.தெற்கு,ஜூலை11

வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்குரிய 2003ஆம் ஆண்டு, 2004ஆம் ஆண்டுககளுக்கான மூலதன நன்கொடை நிதி கிடைக்கப்பெற்றுள்ளதாகப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி எஸ்.சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவவிரு ஆண்டுகளுக்கும் தனித்தனியாக ஒரு லட்சத்து 23ஆயிரத்து 348ரூபா நன்கொடை நிதி கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் -

சனசமூக நிலையங்கள், மாதர் - சிசு பரிபாலன நிலையங்கள், நூலகங்கள் என்பனவற்றின் அபிவிருத்திகளுக்கென இப்பணம் பங்கிட்டு வழங்கப்பட உள்ளதாகவும் -

நன்கொடை நிதி வங்கிகளுக்கு அனுப்பப்பட்டவுடன் உரிய நன்கொடை பெறும் நிலையங்கள் அவற்றைப் பெற்றுக் கொளளமுடியும் எனவும் - அவர் தெரிவிததார்.

(எ-152)

**நாளை**

ஆனி 28
திங்கட்கிழமை
(12.07.2004)
திதி : தசமி
பகல் 8.21 வரை.
நட்சத்திரம்: பரணி
பகல் 9.48 வரை.
சுபநேரம்: 11.59 - 01.29
ராகுகாலம்: 07.29 - 8.59
(பழைய நேரப்படி)

# காலபோகநெற்செய்கைக்கு அனுமதி வழங்கப்படுமென படைத்தளபதி உறுதி

## தென்மராட்சி தெற்குப் பகுதியில்

சாவகச்சேரி,ஜூலை11

தென்மராட்சி தெற்கு - தனங்கிளப்பு, மறவன்புலோ பகுதிகளை உள்ளடக்கிய விவசாய நிலத்தில் இவ்வருடம் காலபோக நெற்செய்கைக்கு விவசாயிகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்று யாழ். இராணுவத் தளபதி சுசில் சந்திரபால உறுதியளித்துள்ளாரென மறவன்புலோ விவசாயிகள் சம்மேளன தலைவர் மா.லீலாவினோதன் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் சுமார் ஆயிரம் ஏக்கர் விளைநிலம் - படையினரின் மிதிவெடி மற்றும் கண்ணிவெடி அகற்றும் பொறியியல பிரிவினரால் வெடிபொருள்கள் அகற்றப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளதாகவும் -

தற்பொழுது சில பாதைகள் மீளவும் பரிசீலிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இக்காலபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள சாவகச்சேரி நுணாவில் பகுதி விவசாயிகள் சாவகச்சேரி தணங்களப்பு வீதியைப் பாவிக்க முடியாது என்றும் -

அதற்குப் பதிலாக நுணாவில் - வைரவர் கோயிலடிப் பகுதியிலிருந்து வயல் வெளிக்குச் செல்லப் படையினரால் அமைக்கப்பட்ட பாதையையும் நுணாவில் கொலலங்கிராய் வயல்வெளிப் பாதையையும் பயன்படுத்தமுடியும் என்றும் படைத்தளபதி மேலும் தெரிவித்தார் என்று கூறப்பட்டது. (-4-117)

**உதயவாக்கு**

உடலில் அணியும் உடையை விட மேலானது முகத்தில் தோன்றும் மலர்ச்சி.

# மருதங்கேணிப் பகுதி பாடசாலைமட்ட கட்டுரை, கவிதைப் போட்டி முடிவுகள்

வடமராட்சிகிழக்கு,ஜூலை11

கரும்புலிகள் தினத்தையொட்டி தமிழீழ கல்விக் கழகமும் வடமராட்சி கிழக்கு கரும்புலிகள் அரசியல் துறையும் இணைந்து மருதங்கேணி கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்திய போட்டிகளில் கட்டுரை, கவிதைப் போட்டிகளில முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவியரின் விவரம் வருமாறு:

**கட்டுரை**

தரம் 4, தரம் 5: அ.சுகன்ஜா (செம்பியன் பற்று றோ.க.த.பாடசாலை), செ.கஸ்றோ (கடைக காடு றோ.க.த.க.பாடசாலை), தே.நிரோஜினி (தாளையடி றோ.க.த.க.), லொ.சுமித்திரா (வெற்றி லைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்)

தரம் 6, தரம் 7: பொ.பிறேமசுஜி (உடுத்துறை மகாவித்தியாலயம்), கு.கஜவதனி (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை), அ.அனற்பிறின்சியா (தாளையடி றோ.க.த.க.).

தரம் 8, தரம்9: வே.அகிலேஸ்வரன் (உடுத்துறை மகாவித்தியாலயம்), யோ.சுகிர்தா (ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை), கு.யுதிபா (தாளையடி றோ.க.த.க. பாடசாலை).

தரம் 10, தரம்11: செ.ஜெயதிலீபன் (உடுத்துறை மகாவித்தியாலயம்), பெ.டென்சியா (வெற்றி லைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்), பி.செல்வபிரான்சினி (மருதங்கேணி இந்து த.க.)

தரம் 12, தரம்13: ஜெ.ஜெயவதி (உடுத்துறை மகாவித்தியாலயம்), ம.விமல்ராஜ் (ஆழியவளை சி.சி.த.க)

**கவிதை**

தரம் 10, தரம்11: க.கனீஸ்வரன் (உடுத்துறை மகாவித்தியாலயம்), மு.நாகேஸ்வரன் (வெற்றி லைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்), பெ.ஜெயதாஸ் (தாளையடி றோ.க.த.க),

தரம் 12, தரம் 13: ஜெ.கஜேந்திரன் (உடுத் துறை மகாவித்தியாலயம்), கே.சத்தியவதி (ஆழியவளை சி.சி.த.க).

(ஓ-182)

# கொரிய மருத்துவர் திருமலையில் மரணம்!

திருகோணமலை, கப்பல்துறை கிராமத்தில் கடந்த 5 ஆம் திகதி திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்ட மாவட்ட ஆயுர்வேத வைத்திய சாலையில் கடந்த 3 தினங்களாகக் கடமையாற்றிவந்த கொரிய நாட்டு மருத்துவர் ஒருவர் கடந்த வியாழனன்று மாரடைப்பால் மரணமானார்.

மேற்படி வைத்தியசாலையில் விசேட மருத்துவ சிகிச்சையினை வழங்கும் பொருட்டு கொரிய நாட்டிலிருந்து வருகை தந்த 20 பேரைக் கொண்ட மருத்துவர் குழுவின் தலைவர் 'லீ' (வயது35) என்பவரே இவ்வாறு மரணமானார்.

வைத்தியசேவையை வழங்குவதற்காக அலஸ் தோட்டப்பகுதியிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் இக்குழுவினர் தங்கியிருந்தனர் எனவும்,-

சம்பவதினம் காலை குழுவிலுள்ள ஏனைய உறுப்பினர்கள் லீயின் அறைக்குச் சென்று பார்த்த வேளை அவர் அங்கு இறந்த நிலையில் காணப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(4-201)


## தவறிவிட்டது

New model 150 பல்சர் மோட்டார் சைக்கிளிற்குரிய வரி அட்டை, ஆவணங்கள், காப்புறுதிப்பத்திரம் என்பன 08.07.2004 அன்று மாலை 6.30 மணியளவில் உரும்பிராய் பகுதயில் தவறிவிட்டன. கண்டெடுத்தவாகள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்).

திரு.கு.குணதீபன்
51, பெரிய தம்பிரான் வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.T.P.:077-6365914.

## விற்பனையாகின்றது

மன்மதன்,ஏய.....மற்றும்
புதியபாடல்கள் ஓடியோCD
மொத்தமாக கொள்வனவு செய்ய விரும்பினால் உங்கள் வாசல் தேடிவந்து வி[illegible]கம் செய்வோம்.

தொடர்பு: 0776 176523, 0712 511 [illegible]
ஸ்ரீவிநாயகர் வீடியோ
(34009)(17) வழக்கம்பரை,சுழிபுரம்.


# மாணவியின் நேர்மைக்குப் பாராட்டு!

தென்மராட்சி,ஜூலை11

வீதியில் கண்டெடுத்த தங்க அட்டியலை கிராம அலுவலர் மூலம் உரியவரிடம் ஒப்படைத்த மாணவி பாடசாலையில் வைத்துக் கௌரவிக்கப்பட்டார்.

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவியான குணராசா நிரோதா என்பவர் சுமார் 25ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க அட்டியலை மீசாலை புத்தூர் சந்திப் படை முகாமுக்கு அருகில் கண்டெடுத்து மந்துவில கிழக்கு கிராம அலுவலரிடம் ஒப்படைத்தார். கிராம அலுவலர் அதனை உரியவரிடம் சேர்ப்பித்தார். பிரஸ்தாப மாணவியின் நேர்மையைப் பாராட்டி வீரசிங்கம் வித்தியாலய மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வில் மந்துவில் கிழக்கு கிராம அலுவலர் வ.வேல்முருகு மாணவிக்கு கற்றல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கினார்.

(4-117)

## பரதநாட்டிய அரங்கேற்றம்

செல்வி அமுதினி மோகன்ராஜின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர் நியூஸிலாந்து நாட்டில் தற்பொழுது வசித்து வருகிறார்.

இவர் ஸ்ரீமதி ரேணுகா கேதீசனின் மாணவி யாவார்.

(10-201)

## சமய சந்நிதிகளில்

கோப்பாய்,ஜூலை11

கோப்பாய் மத்தி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி தேர்த்திரு விழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

(10-72)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை11

ஸ்ரீ கதிரமலை சிவன் ஆலய ஸ்ரீ சொர்ணாம்பிகை தேவி அம்பாளின் பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி மாலை 7 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் காலை 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(10-201)

★ ★ ★

வலி.வடக்கு,ஜூலை11

ஏழாலையம்பதி புங்கடி புவனேஸ்வரி அம்பிகை ஆலய பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி தேர்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

(10-86)

★ ★ ★

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி (வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில்) ஆடிப்பூர தேவி பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(10-15)

★ ★ ★

கோவிலாக்கண்டி அம்பலத்தார் அடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதனையொட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்காப்புச் சாத்துதல் இடம்பெறும்.

(10-201)


## திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

இந்தியாவில் பத்மஸ்ரீ சோபாநாயுடு அவர்களிடம் பயின்று, ஐரோப்பிய நாடுகளில் பல ஆற்றுகைகளை நிகழ்த்திய

செல்வி
**வினோதா தம்பிப்பிள்ளையின்**
**குச்சுப்புடி நடன நிகழ்வும்**

*மற்றும்*

**பல்வேறு நடனங்களும்**

காலம்: நாளை (12.07.2004) திங்கட்கிழமை
நேரம்: மாலை 7.00 மணி
இடம்: திருமறைக்கலாமன்ற அரங்கு

பிரவேசம்: இலவசம்

கலை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இன்று மூன்றாவது நாளாக
திருமறைக்கலாமன்றம் தயாரித்து வழங்கும்
**ஞானசௌந்தரி**
(இசை நாடகம்)

மன்ற அரங்கில்
மாலை 7.00 மணிக்கு
அன்பளிப்பு: 30/=

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.021-222-2393 (சி36118)(37-16-18) திருமறைக்கலாமன்றம்.



## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன வாடிக்கையாளராகிய
**ஆறுமுகம் சிவராஜா**

(உரிமையாளர்,மல்லிகா மிக்ஷர் மாளிகை,யாழ்ப்பாணம்,மானிப்பாய்)

அவர்களின் மறைவினால் துயரில் மூழ்கியிருக்கும் அன்னாருடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவர்களது துயரில் நாமும் பங்குகொள்வதோடு, கண்ணீர் அஞ்சலியைக்காணிக்கையாக்கி ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ஜெகன் களஞ்சியம்,*
*285, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.* (33999)(42)
உரிமையாளரும்,
ஊழியர்களும்,


## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் கதிர்காமநாதன்



(B.Sc., S.L.P.S-I, S.L.E.A.S.)

நல்லூர், செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும் இல.85, சிவன்கோயிலடி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் கதிர்காமநாதன் (ஓய்வுபெற்ற அதிபர்,நல்லூர் கொத்தணி பாடசாலைகள்) நேற்று (10.07.2004) சனிக்கிழமை சிவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (முதலியார்)- மனோன்மணி அவர்களின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான வெற்றிவேல் (விவசாய போதனாசிரியர்) -அன்னபூரணி அம்மாள் அவர்களின் மருமகனும் சவுந்தரநாயகி அவர்களின் அன்புக் கணவரும் பத்மநாதன் (ஜேர்மனி), கணேசநாதன் (உடற்கல்வி போதனாசிரியர், யாழ். பல்கலைக்கழகம்), சயந்தநாதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்), நரேந்திரநாதன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), திருமதி கலைவாணி சிவதாசன் (கொழும்பு) ஆகியோரின் தகப்பனாரும் திருமதி மரியோன் (ஜேர்மனி), திருமதி ஞானசக்தி (விரிவுரையாளர், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி), திருமதி புனிதவதி (M.L.T., யாழ் போதனா வைத்தியசாலை), திருமதி நளினா (முன்னாள் விரிவுரையாளர், திறந்த பல்கலைக்கழகம், கொழும்பு, ஆஸ்திரேலியா), சிவதாசன் (கணக்காளர், Fergasam Garment Industries Pvt Ltd., கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் மற்றும் திருமதி இமயவல்லி விக்னராஜா (கொழும்பு), சிதம்பரநாதன் (Ret. மாநகரசபை உத்தியோகத்தர், கனடா), லோகநாதன் (Ret. உத்தியோகத்தர் Lake House, Colombo), காலஞ்சென்ற இராமநாதன் (Ret. மாநகரசபை உத்தியோகத்தர்), இலங்கைநாதன் (பொறியியலாளர்,கனடா) நல்லைநாதன் (இலங்கை மின்சாரசபை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மற்றும் காலஞ்சென்ற சடாட்சரம் (Mechanical Forman), தவமணி, சிவகாமி அம்மை, விக்னேஸ்வரன் (Ret.யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்) ஆகியோரின் மைத்துனரும் ஆதவன் (ஜேர்மனி), விசாளினி (யாழ். இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை), அபிராமி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 13.07.2004 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 (புதியநேரம்) மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.85, சிவன்கோயிலடி,*
*திருநெல்வேலி.*
T.P.0777 365161, 0777 917690
(34004)(34-16-18)

திருமதி க.சவுந்தரநாயகி (மனைவி),
க.கணேசநாதன் (மகன்).

### திருமதி தேவரத்தினம் யோசப்

இளவாலையைச் சேர்ந்த திருமதி தேவரத்தினம் யோசப் 2004.07.09 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஞானப்பிரகாசம் யோசப் (இளைப்பாறிய தபாலதிபர்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி ஞானப்பிரகாசம் ஆகியோரின் அன்பு மருமகளும் திருமதி ஒலிவர் ஞானரத்தினம் (ஆசிரியை - யா/இளவாலை கன்னியர் மட மகாவித்.) அவர்களின் அன்புத் தாயாரும் ஜெ.இ. ஆனந்தராஜா (உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, சுன்னாகம்) அவர்களின் அன்பு மாமியாரும் சவிரிமுத்து (இளைப்பாறிய பிரதம லிகிதர், இறைவரித் திணைக்களம்), பிரான்சிஸ் (இளைப்பாறிய முகாமையாளர் - தொழிற் பகுதி, சிமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி திரேசா, Dr. எட்விஸ், இம்மானுவேல், திருமதி றோசலின், திருமதி சிசிலியா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெஸ்லின், சியாமளின் (மாணவிகள், யா/இளவாலை கன்னியர்மட மகாவித்.), சுபராஜ் (மாணவன்-யா/புனித ஹென்றியரசர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் நாளை (2004-07-12) திங்கட்கிழமை காலை 10மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரதான வீதி,*
*இளவாலை.*
(34005)(26-16-18-37)

தகவல்:
ஜெ.இ.ஆனந்தராஜா.


## Study at Bangalore University in பிருந்தாவன் கல்லூரி

**(Formerly NATIONAL FIRST GRADE COLLEGE)**

Recognised by Government & affiliated to Bangalor University
2 nd Cross, Bhoopasandra, RMV Extn 2 nd
stage, Bangalore 94 India
E.mail: info@brindavancollege.Com., enquiry@BRINDAVAN College.com.
WWW.brindavancollege.com

பதிவு, உடனடி பிரவேச அனுமதிக்கான நேர்முகப்பரீட்சை ஜூலை 14ஆம் திகதி கொழும்பு ஹில்ரனில் (அதிபர்/பொறுப்பாளரால் நடத்தப்படும்).

★ பி.எஸ்.சி.நுண்ணுயிரியல்
★ உயிர்த்தொழில்நுட்பவியல்
★ மரபணுவியல்
★ கணனி விஞ்ஞானம்
★B.C.A.
★ B.Com.
★ B.B.M.
★ எம்.எஸ்.சி.உயிர்தொழில்நுட்பவியல்
★ நுண்ணுயிரியல்
★ மரபணுவியல்
★ M.C.A.
★ M.B.A.

தொலைக்காட்சி "ஐ" அலைவரிசையில் காலம் 11.07.2004, 13.07.2004, நேரம்: இரவு 10.30

**Company Secretarial Services (Pvt)LTD.**
#285C-1/1, Stanley Tillakaratne Mwjubilee Post, nugegoda.
Tel:011-2854438/0777-387273
E.mail. Yapadd@ sol.lk.
(சி36113)(37-16-18)

**Furher details**
Mr.Gunawardena
011-2811524
Mr.Gunasekera
038-2232657, 038-2234154

# முகமது ஒமர் உயிருடன் உள்ளார்; ஆப்கான் அதிகாரி அதிர்ச்சித் தகவல்!

ஸ்பின்போல்தக்,ஜுலை11

ஆப்கானிஸ்தானில் தலிபான் தலைவர் முல்லா முகமது ஒமர் தலைமறைவாக உயிருடன் உள்ளார் என்ற தகவல் வெளியாகி உள்ளது:

ஆப்கானிஸ்தானில் அல் - கெய்டா தீவிர வாதிகள் ஒசாமா பின்லேடன் தலைமையில் பயிற்சி பெற்றனர். அவர்களுக்குத் தலிபான் தலைவரான முல்லா முகமது ஒமர் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார். 2001 செப்ரெம்பர் 11ஆம் திகதி நியூயோர்க் நகரில் அல் - கெய்டா தீவிரவாதிகள் பயங்கரத்தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து ஒசாமா பின்லேடனை ஒப்படைக்கும்படி அமெரிக்கா முல்லா முகமது ஒமரிடம் கேட்டது. அதற்கு மறுத்த முல்லா முகமது மற்றும் ஒசாமா பின்லேடன் ஆகியோர் தலைமறைவாயினர். தற்போது ஒமர் தலைமறைவாக ஆப்கானில் இருக்கிறார் என்ற தகவல் வெளியாகி உள்ளது.



இது குறித்து ஆப்கானிஸ்தானின் தென் பகுதிப் பாதுகாப்புத் தலைவர் அப்துல்லா லக்மனி கூறியதாவது:

தலிபான் தலைவரான முல்லா முகமது ஒமர் ஒரு கண்ணை இழந்தவர். அவர் இன்னும் உயிரோடு தான் உள்ளார். கந்தகார் நகருக்கு வடக்கே 80கி.மீ. தொலைவில், முல்லாவின் மெய்க்காப்பாளர் முல்லா முஜாகித் என்பவர் கடந்த வாரம் பிடிபட்டார். கடந்த திங்கட்கிழமை எங்கள் முன்னிலையில் அவர் முல்லாவுடன் செயற்கைக் கோள் தொலைபேசி மூலம் உரையாடினார்.

ஆனால், அதன்பிறகு முல்லாவைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியவில்லை. நாங்கள் முயற்சி செய்யும் போதெல்லாம் இணைப்புத் துண்டிக்கப்படுகிறது. முல்லா முகமது காபூல் நகரில் இருந்து 2001 நவம்பரில் தப்பினார். தலைமறைவாக உள்ள தலிபான்களின் பாதுகாப்பு அமைச்சர் முல்லா ஒபைதுல்லாவுடன் முல்லா முஜாகித் எங்கள் முன்னிலையில் தொலைபேசியில பேசினார். இவ்வாறு அப்துல்லா லக்மனி கூறினார்.

ஆனால், தலிபான்களின் தகவல் தொடர்பாளர் லத்தீப் ஹகிமி கூறுகையில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஆப்கானிஸ்தானில் அதிபர் தேர்தல் நடப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதைத் தடுத்தே தீருவோம். ஒமருடன் முஜாகித் நெருக்கமாக இருந்தார். ஆனால், முஜாகித்துடன் ஒமரும், ஒபைதுல்லாவும் தான் பேசினார்கள் என்பதை உறுதிப்படுத்த எந்த ஆதாரமும் இல்லை. அவருடன் வேறு யாரேனும் பேசி இருக்கலாம். என்றார். (ஒ)

## ஈராக்கில் பல்கேரியர் கடத்தல்

துபாய், ஈராக்கில் பணிபுரிந்து வந்த பல்கேரிய நாட்டவர் இரண்டு பேர் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

ஈராக்கில் உள்ள அமெரிக்கக் கூட்டணிப் படைகளை வெளியேறக் கோரி வெளிநாட்டவர்களைப் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்று கொன்று வருகின்றனர். சதாம் ஆதரவு தீவிர வாதிகள் இதுவரை மூன்று பேரைப் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்று தலைகளைத் துண்டித்துக் கொன்றுள்ளனர். ஒரு சிலரை இனனும் தங்கள் பிடியில் வைத்துள்ளனர். முஸ்லிம்களாக இருந்தால், அவர்களை இந்தத் தீவிர வாதிகள் சகோதரர்களாகக் கருதி விடுவித்து விடுகின்றனர்.

## ரொக்கட் தாக்குதலில் குழந்தை பலி!

பக்தாத்,ஜுலை11

ஈராக்கின் மத்திய பக்தாத் நகரில் உள்ள 'ஹோட்டல்' ஒன்றின் மீது கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட 'ரொக்கெட்' தாக்குதலில் அவ் விடுதியின் அருகில் வீடொன்றிலிருந்த 6 வயதுக் குழந்தை பலியானது; மேலும் மூவர் காயமடைந்தனர்.

அமெரிக்கர்கள் உட்பட வெளிநாட்டவர்கள் தங்கும் 'சாதீர்' என்ற ஹோட்டலை இலக்கு வைத்து நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்குத் தாக்குதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, கடந்த வாரமும் இப்பிரதேசத்தில் வெளிநாட்டவர்கள் தங்குகின்ற மேலும் இரு ஹோட்டல்கள் கிளர்ச்சியாளர்களின் ரொக்கெட் தாக்குதல்களுக்கு இலக்கானமை குறிப்பிடத்தக்கது. (ஒ-201)

# ஆப்கானிய அதிபர் தேர்தலை ஒக்ரோபரில் நடத்தத் திட்டம்

காபூல்,ஜுலை11

ஆப்கானிஸ்தானில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 9ஆம் திகதி அதிபர் தேர்தல் இடம் பெறும் என்று தேர்தல் ஆணையாளர் நேற்று அறிவித்தார்.

அதிபர் தேர்தலைக் கடந்த மாதம் நடத்த முன்னர் திட்டமிட்டப்பட்டிருந்தது. ஆனால், பாதுகாப்புக் குறைபாடு மற்றும் வாக்காளர்களைப் பதிவு செய்வதில் தாமதம் ஆகிய காரணங்களால் தேர்தல் இருதடவைகள் பிற்போடப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் இடம்றெும் பிரதான தேர்தல் இதுவாகும். அமெரிக்க ஆதரவுடன் பதவி வகிக்கும் ஹமீட் கர்சாய் தனது நிலையை ஸ்திரப் படுத்துவது இத்தேர்தல் முடிவிலேயே தங்கியுள்ளது.

தற்போது இடைக்கால அதிபராக உள்ள கர்சாய் இத்தேர்தலில் வெற்றிபெற வாய்ப்பு அதிகம் உள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனாலும், ஒரு பெண் உட்படப் பதின்மூன்றுபேர் அதிபர் தேர்தலில் தாம் போட்டியிடப் போகின்றனர் என்று இப்போதே அறிவித்துள்ளனர்.



ஆப்கானில் தேர்தல் பிரசாரச் சுவரொட்டி

இதேவேளை வேட்பாளர்களுக்கும், வாக்காளர்களுக்கும் பாதுகாப்பில்லாத சூழ்நிலையில் அதிபர் தேர்தலை நடத்திமுடிப்பது சாதாரண காரியமில்லை என்று தேர்தல் ஆணையாளர் ஷகிம்ஷா தெரிவித்துள்ளார்.

அதிபர் தேர்தல் சுமுகமாக இடம்பெற்றால் தேர்தல் அடுத்த வருடம் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் இடம் பெறலாம் என்று எதிர்பார்க்கபபடுகிறது. (ஒ)

### இஸ்ரேலின் தடுப்புச்சுவருக்கு எதிரான

# சர்வதேச நீதிமன்றத் தீர்ப்பு தவறு என்கிறது அமெரிக்கா

மேற்குக்கரைப் பிரதேசத்தில் பலஸ்தீனப் பகுதியைச் சுற்றி இஸ்ரேல் அமைத்துவரும் தடுப்புச்சுவர் சட்டவிரோதமானது என்று ஹேக் நகரில் உள்ள ஐ.நாவின் சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமை தவறானது என்று அமெரிக்கா கூறியுள்ளது.



இஸ்ரேலின் தடுப்புச் சுவர்

பலஸ்தீனத் தீவிரவாதிகள் இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல்களை நடத்துவதைத தடுக்கும் நடவடிக்கை என்ற பெயரில் இஸ்ரேல் பலஸ்தீனப் பகுதிகளுக்கும், இஸ்ரேலுக்கும் இடையே சுவர் எழுப்பி வருகிறது. இதற்குப் பலஸ்தீனர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக நெதர்லாந்தின் ஹேக் நகரில் செயற்படும் சர்வதேச நீதிமன்றம் விசாரணை நடத்தியது. விசாரணையின் முடிவில் இஸ்ரேலின் தடுப்புச்சுவர் அமைக்கும் நடவடிக்கை பலஸ்தீனத்தை இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் இணைப்பதற்கு நிகரான ஒன்று என்றும், பலஸ்தீனர்களின் சுயாட்சி உரிமையை மீறும் செயல் எனவும் சர்வதேச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது. இது பலஸ்தீனர்களுக்குக் கிடைத்த வெற்றி என்று பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் வரவேற்றுள்ளார். இதேவேளை, இந்தத் தீர்ப்பு ஏற்க முடியாத ஒன்றென்று இஸ்ரேல் கூறியுள்ளது.

இந்த நிலையிலேயே இஸ்ரேலின் நெருங்கிய நட்பு நாடான அமெரிக்கா சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்புத் தவறானதென்று தெரிவித்துள்ளது.

தீர்ப்புக் குறித்துக் கருத்து வெளியிட்ட அமெரிக்க இராஜாங்க அமைச்சின் பேச்சாளர் ரிச்சார்ட் பௌச்சர் -

பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகளை இத்தீர்ப்புப் பாதிக்கும் என்றும்-

தடுப்புச்சுவர் அமைக்கும் விடயம் அரசியல் விவகாரமே தவிர அது சர்வதேச நீதிமன்றத்தால் கவனிக்கப்படவேண்டிய விடயமல்ல என்றும் - தெரிவித்தார். (ஒ)

# சனிக்கிரகத்தின் வளையங்கள் பற்றிய தெளிவான படங்களை 'காசினி' அனுப்பியது

நியூயோர்க்,ஜுலை11

அமெரிக்காவின் நாஸா விண்வெளி நிலையத்தால் சனிக்கிரகத்தை ஆராயவென அனுப்பப்பட்ட காசினி விண்கலம் கடந்த வாரம் கிரகத்தை நெருங்கியது. அது அங்கிருந்து அற்புதமான புகைப்படங்களையும் அனுப்பி வருகின்றது.

இப்போது சனிக்கிரகத்தின் புகழ்பெற்ற வளையங்கள் தொடர்பான உண்மையான - தெளிவான - புகைப்படங்களைக் காசினி அனுப்பியுள்ளது.

அந்தப் படங்களில் இருந்து சனிக்கிரகத்தைச் சுற்றியுள்ள வளையங்களில் சிலவற்றில் திடீர் குலுக்கங்களும் வளைமுகடுகளும் காணப்படுகின்றமை தெரியவந்துள்ளது.

சனிக்கிரகத்தைச் சுற்றியுள்ள வளையங்கள் இரண்டுக்கிடையிலான பகுதியையும் காசினி படம் எடுத்து அனுப்பி வைத்துள்ளது.

இந்த வளையங்கள் பனியினால் ஆக்கப்பட்டுள்ளன என்று தெரிகிறது. ஆனாலும், இது சிலவேளைகளில் தவறாகவும் இருக்கலாம். அவை வேறு கடினமான பதார்த்தம் எதனாலாவது ஆக்கப்பட்டிருக்கலாம். இதற்கு 'டேற்' (தூய்மையற்ற பொருள்) என்று விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர். அத்தகைய பொருள்கள் சனியைச் சுற்றியுள்ள துணைக் கோள்களிலும் காணப்படுகின்றன.

சனியைச் சுற்றியுள்ள வளையங்கள் எத்தகைய பொருள்களால் ஆக்கப்பட்டுள்ளன என்பது குறித்து விஞ்ஞானிகள் தற்போது ஆராய்நது வருகின்றனர்.

சனியைப் பற்றிய மேலும் பல புகைப்படங்களையும், தகவல்களையும் காசினி தொடர்ந்து அனுப்பி வருகின்றது. இன்னும் பல அரிய தகவல்களை அதுவிரைவில் அனுப்பி வைக்கும் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர்.(எ-க)

## உலக அரங்கில்

# மும்பை தொடர் குண்டுவெடிப்பு; 11 பேருக்கு ஆயுள்தண்டனை

மும்பை,ஜுலை11

இந்தியாவின் மும்பை நகரில் 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்களில் குற்றஞ்சாட்டப்பட்ட பாகிஸ்தானியர் ஒருவர் உட்பட 11 பேருக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1998 ஜனவரியிலும், பெப்ரவரியிலும் மும்பையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ரயில் நிலையங்கள் மற்றும் ரயில் பாதைகளில் தொடர்ந்து குண்டுகள் வெடித்தன. இதில் பலர் கொல்லப்பட்டனர்.

இதுதொடர்பாக இரு பாகிஸ்தானியர்கள் உட்படப் 12 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் மீது மும்பை நீதிமன்றம் ஒன்றில் வழக்குத் தொடரப்பட்டது. கைதுசெய்யப்பட்டவர்கள் பாகிஸ்தானின் உளவுநிறுவனமான 'ஐ.எஸ்.ஐ.' இன் தூண்டுதலின் பேரில் மும்பையில் ரயில் நிலையங்கள், ரயில்பாதைகள் ஆகியவற்றில் தொடர்ந்து குண்டுகளை வெடிக்கச் செய்தனர் என்று அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒரு பாகிஸ்தானியரைத் தவிர மற்ற 11 பேரும் குற்றவாளிகள் என்று வழக்கை விசாரித்த நீதிபதி வி.எல். ஆச்சால்யா தீர்ப்பளித்தார். அவர்களுக்கான தண்டனையை நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்டார்.

இவ்வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட பாகிஸ்தானியரைப் பாகிஸ்தானுக்கு நாடுகடத்தும்படி நீதிபதி உத்தரவிட்டார். (ஒ)

## இந்தியாவில் பட்ஜெட் சமர்ப்பிப்பு

புதுடில்லி,ஜுலை11

இந்தியாவில் ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஆயிரங்கோடி ரூபாவை ஒதுக்குவதாக அறிவித்துள்ள இந்தியாவின் புதிய நிதியமைச்சர் சிதம்பரம், நாட்டின் பொருளாதாரத்தை வேகமாக முன்நகர்த்துவதற்கும் திட்டமிட்டிருப்பதாக அறிவித்துள்ளார். இந்தியாவின் புதிய காங்கிரஸ் கட்சி அரசின் முதலாவது நிதிநிலை அறிக்கையை கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ப)

# சதாம் சிறைவைப்பு சட்டவிரோதம் என்கிறார் அமெரிக்கச் சட்டத்தரணி

வாஷிங்ரன்,ஜுலை11

அமெரிக்கக் கூட்டுப்படையினரால் சிறைப் பிடிக்கப்பட்டுள்ள ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் சிறைக்காவல் சட்டவிரோதமானது என்று அமெரிக்க உச்சநீதிமன்றம் அறிவிக்க வேண்டும் என்று அமெரிக்கச் சட்டத்தரணி கர்டிஸ் டோப்ளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சதாம் ஹுசைனுக்காக வாதிடும் சட்டத்தரணிகள் குழுவில் இடம்பெற்றுள்ள ஒரே அமெரிக்கர் டோப்ளர்.

அடிப்படை உரிமைகள் ஏதும் அளிக்கப்படாமல் சதாம் ஹுசைனின் மீது ஈராக்கின் புதிய அரசு விசாரணை நடத்தி வருகிறது.

டிசெம்பரில் கைது செய்யப்பட்ட சதாமைப் பார்க்க தனக்கோ அல்லது மற்றைய சட்டத்தரணிகளுக்கோ அமெரிக்க அதிகாரிகள் இதுவரை அனுமதி அளிக்கவில்லை.

போர்க் கைதியாகச் சிறைவைக்கப்பட்டுள்ள சதாமின் மீது எத்தகைய குற்றச்சாட்டுகள் பதிவாகி இருக்கின்றன என்று தெரியவில்லை. இந் நிலையில் யாருடனும் தொடர்புகொள்ள முடியாத சூழ்நிலையில் சதாம் சிறை வைக்கப்பட்டுள்ளார். மரண தண்டனையை எதிர்நோக்கும் சூழலில் அவர் உள்ளார் என்று டோப்ளர் சொன்னார்.

சதாமுக்கு ஆதரவாக வாதிட பெல்ஜியம், பிரிட்டன், பிரான்ஸ், ஜோர்தான், லெபனான், லிபியா மற்றும் துனிசியா உள்ளிட்ட நாடுகளின் 20 சட்டத்தரணிகள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் இணைந்து பணியாற்றத் தாமாகவே முன்வந்தவர் டோப்ளர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் போர் ஏற்படாது தடுப்பதில் அரசு-எதிர்க்கட்சிக்குப் பெரும் பங்குண்டு

## யுத்தம் வெடித்தால் சிங்களவருக்கே அதிகளவு பாதிப்பு

**மீண்டும் யுத்தம் உருவாவதைத் தடுக்கும் விதத்தில் அரசும் எதிர்க்கட்சிகளும் செயற்பட வேண்டும் என்கிறது "ராவய" வார இதழின் ஆசிரியர் தலையங்கம். அதன் தமிழாக்கம் இது.**

சமாதானப் பேச்சுகள் பின்தள்ளப்பட்டு நாடு மீண்டும் யுத்தமொன்றினை நோக்கி மெல்ல மெலலத் தள்ளிச் செல்லப்படுவதாகத் தோன்றுகின்றது. யுத்தமொன்றினை ஆரம்பிப்பதே இன்றைய தனது அரசியல் ஸ்திரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கான சிறந்த மார்க்கம் எனத் தற்போதைய அரசு கருதக்கூடும். அதேவேளை, அரசியல் சூழ்நிலை காரணமாக சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருப்பதாகத் தோன்றிய போதிலும், ஜே.வி.பியினரின் கடும் அழுத்தம் காரணமாக யுத்தமொன்றை நோக்கி நகர்ந்து செல்வதைத் தவிர, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு ஜனாதிபதிக்குக் கிட்டக்கூடுமெனக் கருதமுடியவில்லை.

உருவாகியுள்ள பொருளாதாரச் சிக்கல் நிலைக்கு மேலதிகமாக மீண்டும் யுத்தம் ஒனறைநோக்கி நாடு தள்ளப்படுமானால், அதன் காரணமாக ஏற்படவுள்ள இழப்புக்கள் சாமானியமானவையாக அமையப்போவதில்லை.

சாதாரணமாக யுத்தத்தின் குணாதிசயங்களின்படி யுத்தமொன்றின் பின்னரான தற்காலிக அமைதிநிலை தொடர்ந்து நீடிக்காது. மீண்டும் யுத்தம் ஆரம்பமாகும் தருணங்களில் அது மிகத் தீவிரமானதொன்றாக அமைவது வழக்கமாகும். 1971ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜே.வி.பியினரின் முதலாவது கிளர்ச்சியைவிட 1989ஆம் ஆண்டில் இடம்பெற்ற அவர்களது இரண்டாவது கிளர்ச்சி மிகத் தீவிரமானதாக அமைந்தமையை இதற்கோர் உதாரணமாகக் கொள்ளமுடியும்.

பெரும் அழிவுகளையும், இழப்புக்களையும் நாட்டுமக்கள் சந்திக்க நேர்ந்தமையே யுத்தத்தின் மூலம் இதுவரை நாடு ஈட்டிக்கொண்ட பலாபலன்கள் எனக் குறிப்பிட இயலும். வடககு - கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த பொதுமக்களுக்கு மட்டுமே யுத்த அவலங்களின் சுமை பெருமளவான தாக்கத்தை இதுவரை ஏற்படுத்தியுள்ள காரணத்தாலோ என்னவோ தென் பகுதிச் சிங்களப் பொதுமக்கள் தற்போது கூட யுத்தம் தமக்குக் கசப்பானதொன்றெனக் கருதுவதாகத் தோன்றவில்லை.

ஆனால், மீண்டுமொருமுறை யுத்தம் ஆரம்பிக்கப்படுமானால் அதன் இறுதிவெற்றி எத்தரபபிற்குக் கிட்டினாலும் அது தென்பகுதிச் சிங்களப் பொதுமக்களுக்குப் பெரும் அழிவுகளையும், அவலங்களையும் விளைவிக்கும் ஒன்றாக அமையப்போவதைத் தவிர்க்க எவராலும் இயலாதுபோய்விடும்.

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் நிலைமை குறித்துப் பொதுமக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்கான அரசின் உத்தியாக இந்தயுத்தம் அமையக்கூடுமாயினும், நாட்டுக்கும் நாட்டின் பொதுமக்களுக்கும் இதனால் பெரும் இழப்புக்கள் ஏற்படுமேயன்றி, எதிர்பார்க்கும் சாதகமான பலன் எதனையும் ஈட்டிக் கொள்வதற்குக் காரணமாக அது அமையப் போவதில்லை.

அரசு மீண்டும் யுத்தமொன்றில் ஈடுபடுவதெனத் தீர்மானிக்குமாயின், அதனால், தம்மால் ஈட்டிக்கொள்ளக்கூடிய அரசியல் ஆதாயங்களைக் கருத்திற்கொள்ளாது, அரசின் தவறான முடிவைத் தாமும் உற்சாகப்படுத்தும் வகையில் செயற்பட்டு, அரசை யுத்தத்தைநோக்கி வேகமாகத் தள்ளிச்செல்லும் நோக்குடன் செயறபடாது, அவ்வித யுத்தநிலைமையொன்று உருவாவதைத் தவிர்ப்பதற்குத் தமது அதிக பட்ச சக்தியைப் பயன்படுத்த முனைவதே இந்தத் தருணத்தில் எதிர்க்கட்சிகளின் முக்கிய பொறுபபாக அமையவேண்டியது அவசியமாகும்.

இவ்விடயத்தில் அரசு குறிப்பிட்டதோர் உறுதியான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கத் தூண்டுதலளிக்கும் பணியின் பெறுமதியை எதிர்க்கட்சிகள் உணர்ந்துகொண்டு செயற்பட்டால் மட்டுமே அதுசாத்தியமாகும்.

**தமிழில்: வீயெஸ்ரி**

இன்றைய நிலையில் நாடு, மீண்டுமொரு பொதுத்தேர்தலை உடனடியாகச் சந்திப்பதென்பது மிக மிகச் சிரமமானதொன்றாகும். எனவே, பொதுத்தேர்தல் ஒன்றுக்கான தருணம் வரும்வரை தற்போதைய அரசு சிரமம் எதுவுமின்றி நிர்வாகத்தை மேற்கொள்ளும் விதமான சூழ்நிலையை உருவாக்க வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சிகளைச் சார்ந்ததாகும். மீண்டும் யுத்தமொன்றில் ஈடுபடுவதைத் தவிர்த்து, சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான பொருத்தமான சூழ்நிலையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் எதிர்க்கட்சிகளும் தம்மைப் பங்குதாரர்களாக ஆக்கிக் கொள்ளவேண்டியது மிகமிக அவசியமாகும்.

சமாதானம் மற்றும் ஜனநாயக புனரமைப்புக்கான செயற்றிட்டத்துக்காக அரசுடன் பொதுவான இணக்கப்பாடு ஒன்றினை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் கால அட்டவணை ஒன்றினைத் தயாரித்துச் செயற்றிட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச்செல்ல அரசுக்கு ஆதரவும் அனுசரணையும் வழங்கும் வகையிலான நடைமுறையைக் கடைப்பிடிக்க எதிர்க்கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து செயற்படுதல் அவசியமாகும். ★

### சரசாலை - கோணாவளை வீதியைப் புனரமைக்கக் கோரி அரச அதிபருக்கு மகஜர்

கொடிகாமம்,ஜூலை11

சரசாலை - கோணாவளை விவசாய வீதியைப் புனரமைத்துத்தருமாறு கோரி அப்பகுதி பொதுமக்கள் சமுர்த்தி அதிகார சபைக்கும் யாழ். அரச அதிபருக்கும் மகஜர் அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சரசாலை - கோணாவளை விவசாய வீதியை அறுநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்துகின்றன. அவ்வீதி மழை காலங்களில் வெள்ளநீர் தேங்கி நிற்பதனால் இப்பாதையினூடாக விவசாய பயன்பாட்டிற்குரிய ஊர்திகளோ, விவசாயிகளோ பயணிக்கமுடியாத சூழ்நிலை காணப்படுகிறது. ஆகவே, இவ்வீதியைச் செப்பனிடுவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சரசாலை வடக்கு முன்பள்ளி பாலர்பாடசாலை பிரதான வீதியான சாவகச்சேரி - பருததித்துறை வீதியில் உள்ளூர் சிறார்களின் பாதுகாப்புக்காக வாயிற்கதவுடன் 200 அடிநீளமான சுற்றுமதில் அமைத்துத்தரவும் ஆவனசெய்யுமாறும் கேட்டுக்கொள்கிறோம் - இவ்வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-74-31)

### சிரமதானம்

நீர்வேலி, ஜூலை11

வலி.கிழக்குப் பிரதேச சபையினர் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக் கிழமை மேற்படி பிரதேச சபையின் தலைமைச் செயலகம் நீர்வேலி, அச்சுவேலி உப அலுவலகங்கள் உள்ளிட்ட பகுதிகளில் சிரமதானம் மேற்கொள்ளவுள்ளனர்.

(ஒ-110)


## நன்றி நவிலல்

10-07-2004 அன்று நடைபெற்ற எமது குடும்ப விளக்கு

**அமரர் சண்முகம் சிவப்பிரகாசம்**

அவர்களின் இறுதிச்சடங்கிலும் இரங்கல் வழிபாட்டிலும் கலந்துகொண்டும் தொலைபேசிமூலம் அனுதாபத்தைப் பகிர்ந்துகொண்ட மற்றும் சகல வழிகளிலும் எமது துக்கத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி-36279)(26-34-14) - மனைவி, மக்கள்.

## ஆட்டுக்கடா விற்பனைக்கு

இரண்டு பெரிய ஆட்டுக்கடாக்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
20, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி. (33966)

**Registered Pharmacist available**

Jaffna District only - Contact
Mr. **K.Seevaratnam**
*Suthumalai South,*
*Registrar Lane,*
*Manipay Post office.*
(33992)(34-14)

## விசிற்ரோக். நெற்

இன்று முதல் விசேட கழிவில்

**Net 2 Phone**
**Go 2 call**
**Delta three**

76/=

மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.

315A, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
☎ 222 6637
222 7387.
(33988)(26-34-14)

## மணப்பெண் அலங்காரம்

மணப்பெண் அலங்காரம், பேசியல், தலை அலங்காரம், திருமணம் மற்றும் சகல வகையான கேக், புகைப்படம், வீடியோப் படம்பிடித்தல் ஆகியவை சிறந்தமுறையில் செய்துதரப்படும்.

(33474) தொடர்பு: துனா - T.P.:0777316453

## இசை ரசிகர்களுக்கு!

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின்
**சாகித்தியம் இசைக்குழு**
வழங்கும் இதய சங்கமம்

பல சுவையான பக்திப் பாடல்கள், புதிய, பழைய மற்றும் ஹிந்திப் பாடல்கள், புரட்சிப் பாடல்கள், சகோதர மொழிப் பாடல்களை நீங்கள் விரும்பியவண்ணம் கேட்டும், பார்த்தும், ரசித்தும் மகிழ எம்மோடு தொடர்புகொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:
**யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம்**
31/1பி, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 222 7336.
(33979) (26-34-14)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் ஸ்ரீதாரண வருஷ ஆனிமாதம் 30 ஆம் நாளில் (14.07.2004) புதன்கிழமை காலை 8.24 மணி தொடக்கம் 10.13மணி வரையுள்ள சுப நேரமதில் சிங்கலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,



எமது புதல்வன் திருநிறை செல்வன்
**இந்திரகுமாரன்**
அவர்களுக்கும்

எமது ஏக புதல்வி
**பங்கயநசெல்வி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணையுடன் நல்லைநகர் கச்சேரி நல்லூர் வீதியில் அருள்வாரி வழங்கும் மூத்த விநாயகர் ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

திரு.திருமதி இ. சண்முகநாதன் (சின்னராசா)
"ஞானதீபம்"
பத்திரகாளி கோவிலடி,
சுழிபுரம்.
T.P: 0777-238597

திரு. ஆ. சின்னத்துரை
கதிர்காமசுவாமி கோவிலடி,
காரைநகர்
இல.134, கச்சேரி நல்லூர் வீதி,
(கிட்டு பூங்கா முன்பாக)
நல்லூர்.

குறிப்பு:
*இவ் அழைப்பிதழை மணமகன் வீட்டாரின் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்*

(33942)


## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் சிவராஜா

(உரிமையாளர், மல்லிகா மிக்சர் மாளிகை, யாழ்ப்பாணம், மானிப்பாய்)

வேலணை, சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொணட ஆறுமுகம் சிவராஜா அவர்கள் 07.07.2004 அனறு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் றோசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் தேவிகாராணியின் பாசமிகு கணவரும் தெய்வீகராஜாவின் (சணா) அன்புத் தந்தையும் மாணிக்கராஜா (ஆஸ்திரேலியா), செல்வராணி, மல்லிகாதேவி, நவரட்ணராஜா (ஆஸ்திரேலியா), நித்தியலக்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்னலட்சுமி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற குலசிங்கம் (குலம் கிறீம் ஹவுஸ்) மற்றும் மனோகரன் (மல்லிகா ஸ்ரோர்ஸ், மானிப்பாய்), பிரான்சிஸ் (கனடா), இரத்தினஜோதி, இந்திரஜோதி (கொழும்பு), இராஜினிதேவி (கொழும்பு), ஆனந்தஜோதி, காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சறோஜினிதேவி, கிருபாதேவி, இந்திராணி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் முகுந்தராஜா, மோகனராஜா, பிரிதிவராஜா, மைதிலி ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் மோகனபிரகாஸ், சிவாஜினி, கஸ்தூரி, லக்சி, துளசி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீப், சாலினி ஆகியோரின் பாசமிகு குட்டி அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-07-2004) ஞாயிற்றுக் கிழமை 10மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
- குடும்பத்தினர்.

*மல்லிகா மிக்சர் தொழிலகம்,*
*சுளாவடி,*
*ஆனைக்கோட்டை.*

(33941)(26-34-14)

# யாழ். சிறைச்சாலைக்கு மேலும் காவலரை நியமிக்கவேண்டும்

## ஆணையாளருக்கு அத்தியட்சகர் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூலை11

யாழ். சிறைச்சாலையில் கைதிகளுக்குப் பாதுகாப்பு வழங்கப் போதுமான உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு கோரி சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.சிவசுந்தரம் சிறைச்சாலை ஆணையாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் பல்வேறு காரணங்களுக்காகக் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்பேரில் தடுத்துவைக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் யாழ். சிறைச்சாலையில் கைதிகளின் தொகை அதிகரித்துள்ளது.

குறிப்பிட்ட ஒரு கட்டட வசதியினைக் கொண்ட இச்சிறைச்சாலையில் அதிக எண்ணிக்கையில் கைதிகள் பராமரிக்கப்படுகின்றனர்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் 33ஆண் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும், 4 பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் மட்டுமே யாழ். சிறைச்சாலையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இங்கு அதிகரித்துள்ள சிறைக்கைதிகளைச் சிறந்தமுறையில் காவல் செய்வதற்குத் தற்போதுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை போதுமானதல்ல.

எனவே, யாழ். சிறைச்சாலைக்கு மேலதிகமாக 52 ஆண் பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும், 10 பெண் உத்தியோகத்தர்களையும் உடனடியாக நியமிக்க ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன் - இவ்வாறு அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (ஒ-13)

### 2 வருடங்களாகத் தேடப்பட்டவர் மக்களால் மடக்கப்பட்டார்!

25 இற்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்களின் பேரில் தேடப்பட்டுவந்த சந்தேக நபர் ஒருவர் கொடிகாமம் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த நபர் கடந்த இரண்டு வருடகாலமாகப் பொலீஸாரால் தேடப்பட்டுவந்தவராவர். கச்சாய் தெற்கைச் சேர்ந்த சந்தேக நபர், இரவுவேளை பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

(ஒ-74)

### நவக்கிரக விக்கிரகங்கள் திருட்டு!

தென்மராட்சி,ஜூலை11

மட்டுவில் கல்வம் சிவன்கோயிலில் நவக்கிரகச் சிலைகள் இரவோடிவாகத் திருடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த வியாழன், சனி ஆகிய விக்கிரகங்களே திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## சமுர்த்தித் திட்டச் செயற்பாட்டுக்கான மதிப்பீடு வலி.வடக்கில் நிறைவு

தெல்லிப்பழை,ஜூலை11

சமுர்த்தித் திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கான ஆரம்பக் கட்ட மதிப்பீட்டுப் பணிகள் வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக வலி.வடக்குப் பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

குடாநாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுவந்த நிவாரண உதவிகள் நிறுத்தப்படுவதற்கான அறிவிப்புகள் கிடைக்கப்பெற்றவுடன், அதற்குப் பதிலீடாகச் சமுர்த்தித் திட்டத்தை அமுல்படுத்தும் பொருட்டுக் குடாநாட்டின் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் சமுர்த்தித் திட்டத்திற்குள் உள்ளடக்கப்படக்கூடிய தகுதியான குடும்பங்களைக் கண்டறியும் ஆரம்ப மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம், வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் இப்பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

அடுத்துவரும் இரு மாதங்களில் நிவாரணக் கொடுப்பனவுகள் நிறுத்தப்படுவதைத் தொடர்ந்து சமுர்த்திச் செயற்பாடுகள் நடைமுறைக்கு வருமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-150)

## பண்டத்தரிப்பு வைத்தியசாலையில் பிரசவ விடுதி விரைவில் திறக்கப்படும்

வலி.தென்மேற்கு,ஜூலை11

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையின் பிரசவ விடுதியை விரைவில் திறப்பதற்கு யாழ். சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

யாழ். சுகாதாரச்சேவைப் பதில் பிரதி மாகாணப்பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரம், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சிவலிங்கம் ஆகியோர் சமீபத்தில் இந்த வைத்தியசாலைக்கு விஜயஞ்செய்து பிரசவ விடுதியை நேரில் பார்வையிட்டு அதனைத் திறப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடினார்கள்.

இதனையடுத்து, பிரவச விடுதிக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் தளபாடங்களும் இவ்வாரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இங்கு கடமையாற்றுவதற்காகக் குடும்ப நல சுகாதார அலுவலர் ஒருவரும் விரைவில் நியமனம் செய்யப்படவுள்ளார் என்று தெரிய வருகின்றது. (ஒ-135)

### கைவிடப்பட்ட வாகனங்கள் நீதிமன்றில்

தென்மராட்சி,ஜூலை11

தென்மராட்சிப் பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் பொலீஸாரால் மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களும், சைக்கிள்களும் சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவற்றினை ஆதாரம்காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு அதன் உரிமையாளர்களை நீதிமன்றப் பதிவாளர் செ.விக்னேஸ்வரமூர்த்தி கோரியுள்ளார்.

எம்.டி. 90, சுப்பர் கப், ஸ்கூட்டர் ரக மோட்டார் சைக்கிள்களும், பெண்கள் ஆண்களுக்கான சைக்கிள்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## குடாநாட்டில் 12 இடங்களில் மழைநீர் சேகரிப்புத் தாங்கிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை1

இலங்கை மழைநீர் சேகரிப்பு மையம், மழைநீர் சேகரிக்கும் மாதிரித் தாங்கிகளை அமைப்பதற்கு யாழ். குடாநாட்டில் 12 இடங்களைத் தெரிவுசெய்துள்ளது.

சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டி, கோப்பாய், சங்கானை, காரைநகர், ஊர்காவற்றுறை, நயினாதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு ஆகிய 12 இடங்களே இந்த மாதிரி மழைநீர்த் தாங்கிகள் அமைக்கத் தெரிவுசெய்யப்பட்ட இடங்களாகும்.

இதுதொடர்பான கருத்தரங்கும் கண்காட்சியும் எதிர்வரும் 16ஆம் திகதி நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ். செயலகப் பிரதித் திட்டமிடற் பணிப்பாளர் என்.சிவபாதசுந்தரம் கலந்துகொள்ளவுள்ளார்.

உதவி விவசாயப்பணிப்பாளர் எஸ்.சின்னத்துரை, அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் மற்றும் திட்டமுகாமையாளர் கே.ஸ்ரீஸ்காந்தராஜா ஆகியோர் இக்கருத்தரங்கில் கருத்துரைகளை வழங்குவர்.

இதேவேளை, இந்த மாதிரி நீர்த்தாங்கிகளை அமைக்கும் தொழிலாளர்களுக்கான பயிற்சிநெறி எதிர்வரும் 17ஆம் திகதிமுதல் 21ஆம் திகதிவரை திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிகளைப் பொறியியலாளர் சனந்த டி சில்வா வழங்குவார். (ஒ-5-ரி)




கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் ஆரம்பிக்கப்பட்டது. செயலகத் திறப்புவிழா நிகழ்வில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், சட்டத்தரணி சிவபாலன், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.கஜேந்திரன், ஜோசப் பரராஜசிங்கம், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், வண.பிதா கருணாரட்ணம், மனித உரிமை ஆர்வலர் கலாநிதி மாலதி ஆகியோர் ஏனையோருடன் சேர்ந்து செயலகத்துக்கு முன்பாக நின்று எடுத்துக்கொண்ட படம் இது.

## போரால் பாதிக்கப்பட்டோரில் மேலும் பலர் இனங்காணப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஜூலை11

இலங்கையில் கடந்த இரண்டு தசாப்த காலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக நேரடியாகப் பாதிக்கப்பட்ட மேலும் 15ஆயிரம் பேர் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

டென்மார்க் அரசு மற்றும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இயங்கும் குடும்பப் புனர்வாழ்வுத் திட்டம் மேற்கொண்ட ஆய்விலேயே இத்தகவல் பெறப்பட்டதாகக் குடும்பப் புனர்வாழ்வு நிலையத் திட்ட இணைப்பாளர் ஏ.எஸ்.பூவேந்திரன தெரிவித்தார்

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

2002ஆம் ஆண்டு யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட பின்னர் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களில் உள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் 15ஆயிரம் பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் - யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் 1994 முதல் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் உடல், உள, பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டோர் இனங்காணப்பட்டுப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளனர் என்றும் - அவர் தெரிவித்தார். (ஒ-13)

## சுகாதாரச் சீர்கேட்டால் குளிர்பான நிலையம் மூடப்பட்டது

கரவெட்டி,ஜூலை11

கரவெட்டியில் குளிர்பான நிலையம் ஒன்று சுகாதாரச் சீர்கேடு காரணமாக மூடப்பட்டது.

சுகாதாரப் பரிசோதகர் இந்தக் குளிர்பான நிலையத்தில் திடீர்சோதனை நடத்தியபோது சுகாதாரச் சீர்கேடு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனால், கடை மூடப்பட்டதுடன் தயாரிப்பு உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுப் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டன. இதுதொடர்பாக விசாரணை நடத்திய நீதிமன்றம், கடை உரிமையாளருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. (ஒ-70)

## கட்டாக்காலி நாய்களை ஒழிக்க வலி.வடக்கில் விசேட திட்டம்

தெல்லிப்பழை,ஜூலை11

வலி. வடக்குப் பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட எல்லைக்குள் கட்டாக்காலி நாய்களைப் பிடித்தழிக்கும் விசேட செயற்றிட்டமொன்றைப் பிரதேச சபை மேற்கொள்ளவுள்ளதாகப் பிரதேச சபைச் செயலாளர் செ.செல்வரத்தினம் தெரிவித்தார்.

அடுத்துவரும் இரு வாரங்கள் இச்செயற்றிட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. எனவே, வளர்ப்பு நாய்களின் உரிமையாளர்கள் நாய்களுக்கான உரிமத்தகடுகளைப் பெற்று, அவற்றின் கழுத்தில் அணிவிக்குமாறு கோரப்படுகின்றனர். தவறும் பட்சத்தில் வளர்ப்பு நாய்கள் பிடிக்கப்படும்போது அவற்றைத் தண்டப்பணம் செலுத்தியே மீளப்பெற வேண்டியேற்படுமெனவும் அவர் தெரிவித்தார்.(ஒ-150)

## சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட ச.ச. நிலையங்களுக்கு நன்கொடை

தென்மராட்சி,ஜூலை11

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 16 சனசமூக நிலையங்களுக்கு இவ்வருடத்திற்குரிய நன்கொடைக் கொடுப்பனவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக நிலையத்தின் வருடாந்த கூட்ட அறிக்கை, கணக்கு அறிக்கை, வங்கிப் புத்தகம் ஆகியவற்றுடன் நிலையத் தலைவர் அல்லது பொருளாளர் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளுமாறு நகரசபை செயலாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார்.

மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் அண்மையில் நகரசபைக்குச் சனசமூக நிலைய நன்கொடை நிதியை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-117)

## சமுர்த்திப் பயனாளிகளுக்கு வலி.கிழக்கில் கடன்திட்டங்கள்

வளலாய்,ஜூலை11

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கு நுகர்வுக்கடன், விவசாயக்கடன், சுயதொழில் கடன் போன்ற திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

சமுர்த்திப் பயனாளிகளுக்கான கடன் திட்டத்தின்படி, 2ஆயிரத்து 500ரூபாவுக்கு மேலும், பங்குக் கணக்கில் 500ரூபாவும் வைத்துள்ள சிறுகுழுவொன்று 5ஆயிரம் ரூபாவைக் கடனாகப் பெறமுடியும். சிறுகுழுக்களின் சேமிப்புக்களை அதிகரிக்கும் பட்சத்தில் 5ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபாவரை சிறுகுழுப் பயனாளியொருவர் கடனாகப் பெறமுடியும்.

மேலும் சமுர்த்தி அதிகார சபையினால் வழங்கப்படும் நிதியிலிருந்து தெரிவுசெய்யப்படும் பகுதிகளுக்கு வீதிப் புனரமைப்பு, கால்நடைவளர்ப்பு மற்றும் விவசாயக் கிணறு புனரமைப்பு ஆகியவற்றுக்கான நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

(178)

## புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு ஜூலை மாத இறுதியில் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ள முன்னோடிப் பரீட்சையில் பங்குபற்ற விருப்பமுள்ள மாணவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

**GURUKULA PUBLICATIONS**
53/8, Kirulapone Avenue, Colombo - 05.
(சி-36278)(34-19-21-14) 0777 656908.



**காரைநகர், பாலாவோடை, ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில்**

## உதவி மனேஜர் தேவை

மேற்படி கோவிலுக்கு உதவி மனேஜர் தேவை. இப்பதவிக்கு விண்ணப்பங்களைத் கீழே கொடுக்கப்பட்ட தகுதியுடையவர்கள் கலர்ப் படம் ஒன்றுடன் விண்ணப்பிக்கலாம்.

இந்து சமய கோவில் விதிமுறைகள் – பூஜைகள், திருவிழாக்கள், அனுஷ்டானங்கள் அறிவும் அனுபவமும் தேவை.

காரைநகரை வசிப்பிடமாக உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வயது எல்லை 25 இற்கு மேலும் 60இற்குள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

நேர்மை, ஒழுக்கம், நேரம் தவறாமை, மதுப்பழக்கம் அற்றவராயும் இருத்தல் வேண்டும்.

எழுத, வாசிக்க, கணக்கு (Accounts) அனுபவமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சம்பளம் negotiable.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் அல்லது கார் ஓடத்தெரிபவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பவும்.

தலைவர், அறங்காவலர்சபை,
**பாலாவோடை ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில்**
98, விவேகானந்த மேடு, கொழும்பு - 13.
(42-21-19-14) (C/36281)


## இலவசச் சீருடைகளைப் பெறுமாறு அறிவுறுத்து

வலி.தெற்கு,ஜூலை11

வலிகாமம் தெற்கு பிரதேசசெயலகத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் இவ்வருடத்திற்குரிய இலவசச் சீருடைகளை உடனடியாகத் தத்தம் கிராமசேவையாளர்களிடம் சென்று பெற்றுக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பகுதி பாடசாலை மாணவரின் பெற்றோரை வலி.தெற்கு உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.ஆர். ஜெயப்பிரகாசம். கேட்டுள்ளார். (எ-152)

## வெங்காயச் செய்கைக்கு நிதியுதவி

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வெங்காயச் செய்கையினை மேற்கொள்வதற்கு சமுர்த்தி சந்தைப்படுத்தல் பிரிவினால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சமுர்த்தித் திட்டத்தில் இணைந்த வெங்காயச் செய்கையில் ஈடுபடும் ஐந்து பயனாளிகளுக்குத் தலா ஒன்பதாயிரம் வீதம் வழங்குவதற்கான நிதி சமுர்த்தி சந்தைப்படுத்தல் பிரிவினால் பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைககப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-161)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

வலி.தெற்கு,ஜூலை11

வலிகாமம் தெற்கு பிரதேசசெயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், பிரதேச விவசாயக் குழுக்கூட்டம் என்பன் எதிர்வரும் 13ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சி.திருவாகரன் தலைமையில் காலை 10 மணிக்கு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும், 11மணிக்கு விவசாய குழுக்கூட்டமும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.(எ-152)





யாழ் நகரில் புதிய உதயம்

## K.K.போன் சேவிஸ்

இல.01, நவீன சந்தை மேல்மாடி, மக்கள் வங்கிக் கிளைக்கு அருகில் யாழ்ப்பாணம்.

அனைத்துப் போன்வகைகளும் SIM காட் Kit காட் மற்றும் உதிரிப்பாகங்களை மலிவாகவும் தரமாகவும் பெற்றுக் கொள்வதோடு போன்பழுது லொக் உடைத்தல் போன்றவற்றை துரித கதியில் பெற்றுக்கொள்ளவும்

உத்தரவாதத்துடன் பற்றறிகளை பெறவும் நாடுங்கள்.

K.K.போன் சேவிஸ்

(33118)


## வாழ்வியல் கல்லூரியின் சான்றிதழ் வழங்கல்

சுன்னாகம் வாழ்வியல் கல்லூரியில் கல்வி கற்றுப் பயிற்சி நெறியிணைப் பூர்த்திசெய்தவர்களுக்குச் சான்றிதழகள் வழங்கப்படவுள்ளன.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் மூன்று மணிக்குச் சுன்னாகம் புனித திரேசம்மா ஆலயத்தில இந்த நிகழ்வு இடம் பெறும்.

யாழ்ப்பாணம் ஆயா மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்குவார்.

வாழ்வியல் கல்லூரி மாணவர்களின் நடனம், நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெறும். (எ-152)

## பணிநயப்பு வைபவம்

சுழிபுரம்,ஜூலை11

மக்கள் வங்கியின் வடபிராந்திய உதவி முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ள துரைசிங்கம் ரகுவின் பணிநயப்பு வைபவம் ஒன்று இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (எ-28)

## முன்பள்ளி மெய்வன்மைப் போட்டி

வலி.வடக்கு,ஜூலை11

வண்ணார்பண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய பரிபாலன சபையினால் நிர்வகிக்கப்படும் காமாட்சி முன்பள்ளி மாணவர்களின வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் ந.கலாவர்ணன் தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார். (எ-86)

## ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் சோமையா சுப்ரமணியம்

தோற்றம் 01-12-1939 | மறைவு 24-06-2003

ஒளியாக எமக்கு
வழிகாட்டி விட்டு
வளியாகச் சென்றது ஏன்?
நெஞ்சில்
நெடிதாக நீளும்
நினைவோடு - உங்கள்
குடிவாழும்! - உங்கள்
நினைவெங்கள்
நெஞ்சுள்ளவரை நின்று
உறவாடும்!

குருநிழலில் கேட்ட
சத்சங்கம் சாந்தி தரும்!
பூவுலகின் சேவை
திருவுலகில் வாழ்வு தரும்!

அன்புறவில்; பாச
அரவணைப்பில் உங்கள்
உயருள்ளம் கண்டோம்!

ஓராண்டு நிறைவில் - கண்ணில்
நீராடும் நினைவுகளில்........

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (33825)(42-19-14-21)

*அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## வாழ்த்துகின்றோம்



மக்கள் வங்கி வடபிராந்திய
உதவி முகாமையாளராகப் பதவிஏற்றுப் பணிகள்
பலபுரிந்துவரும் எங்கள் மண்ணின் மைந்தன்

**திரு.து.ரகு**

அவர்கள் மேலும் பல்வகைச் சிறப்பும் பெற்று வாழ உளமார வாழ்த்துகின்றோம். அவர் வாழ்வு வளம்பெற வழக்கம்பரை முத்துமாரி அமபாள் பாதத்தை வணங்குகின்றோம். இன்று (11. 07. 2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப.5 மணிக்கு வழக்கம்பரை அம்பாளுக்கு விசேட பூசை வழிபாடுகள் செய்து அன்பரை உபசரித்து மகிழ்கின்றோம்.

*வழக்கம்பரை,*
*சுழிபுரம்.* (சி-36108)(34-21-19-14)

- **அன்பர்கள்.**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 12 - 06 - 1934 | உதிர்வு 16 - 06 - 2001

அமரர் **மாணிக்கன் சிங்கன்**

திதி: 11.07.2004

பாசத்தின் உறைவிடமாய் எம்மிளிய சற்குருவாய்
பகலிரவாய் எமை வளர்த்து புகழ் காத்த சிங்கமே!
பார்போற்றும் நிலைதந்து நீங்கா நிலை பெற்றாய்
பல்லாண்டு காலங்கள் எம்நினைவில் வாழ்ந்திடுவாய்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்:

கலைமகள் வீதி,
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

- **குடும்பத்தினர்.**

(33980)(34-21-19-14)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 04 - 06 - 1929 | மறைவு 11 - 06 - 2004

திருமதி **செல்லத்துரை சரஸ்வதி** (சின்னம்மா)

எங்கள் அன்புத் தெய்வமே! அன்னையே!
மாவை நகரினில் பிறந்து கைதை நகரினில் இல்லறம்
அமைத்து எம்வாழ்வுக்கு ஒளியாகத் திகழ்ந்த குலதெய்வமே!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (11. 07. 2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"செல்வமஹால்"*
*கைதடி வடக்கு, கைதடி.* (33976)(34)

- **குடும்பத்தினர்.**

## பதினைந்தாவது ஆண்டு நினைவலைகள்



மலர்வு 02 - 11 - 1939 | உதிர்வு 28 - 06 - 1989

அமரர் **கந்தையா குலேந்திரா**
(S.L.A.S.)
(உதவி அரசாங்க அதிபரும், வலி.கிழக்கு பிரதேசசபை விசேட ஆணையாளரும்)

திதி: 11-07-2004

பார்போற்ற பவனிவந்த உத்தமரே!
சீர்பெற்ற பெருவாழ்வு வாழ்ந்தீர் - நீர்
பாசநேசத்தை பிரிக்க காலன் கவர்ந்து ஈரைந்தோடு
ஐந்தாண்டு இன்று.

- மனைவி கு.சிவஈஸ்வரி,
மகன் கு.சிவேந்திரம்,
சகோதரங்கள்.

'ஈஸ்வரி வாசா'
நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில். (33924)(21-19-14)

# விளையாட்டு நிகழ்வுகள்

## ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்தை மானிப்பாய் பரீஸ் வி.க. வென்றது



யாழ்.மத்திய விளையாட்டுக் கழகம் நடத்திய வி.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழகம் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 37.1ஓவர்களில் 109 ஓட்டங்களைப்பெற்றது. அணியின் சார்பில் டினேஸ் 26 ஓட்டங்களையும் ஜொனிற்றன் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பரீஸ் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் ரி.ஜெயதீபன் 3 விக்கெட்டுக்களையும் கிசோக்குமார் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பரீஸ் விளையாட்டுக்கழகம் 14 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 110 ஓட்டங்களைப்பெற்று வெற்றியீட்டியது. அணியின் சார்பில் ராஜ்குமார் 31 ஓட்டங்களையும் பார்த்திபன் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும் பெற்றனர். யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் கிருஸ்ணராசா 23 ஓட்டங்களைப் பெற்றார். (10)

## தேசியமட்ட சதுரங்கப் போட்டிக்கு தெரிவான வீரர்களின் விவரம்

யாழ்ப்பாணம்,ஜுலை11

யாழ்ப்பாணம் சதுரங்கச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தேசிய இளைஞர் சதுரங்க சம்பியன் தெரிவுக்கான மாவட்ட மட்டப்போட்டி அண்மையில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இதில் தெரிவுசெய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

**12 வயது ஆண்கள்**

என்.லவலோஜன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), மா.வருணபாலன் (யாழ். இந்துக் கல்லூரி), வி.விதுசன் (யாழ். இந்துக்கல்லூரி).

**12 வயது பெண்கள்**

ந.கௌஷிகா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), பா.மாதங்கி (யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சு.பிரியங்கா (உடுவில் மான்ஸ்).

**14 வயது ஆண்கள்**

சோ.விஷ்ணுசந்தர் (ஹாட்லிக் கல்லூரி), ஜெ.பிரதாபன் (யூனியன் கல்லூரி), நா.வர்மன் (யாழ். இந்துக் கல்லூரி).

**14 வயது பெண்கள்**

ஜெ.டென்சிகா (உடுவில் மான்ஸ்), இ.பவதாரணி (புத்தூர் சோமஸ் கந்தக் கல்லூரி), ந.சகித்தா (உடுவில் மான்ஸ்).

**16 வயது ஆண்கள்**

சி.கோபிகணேஷ் (யாழ். இந்துக்கல்லூரி), சி.வல்லவகுமரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), சி.சுலக்ஷன் (யாழ். இந்துக் கல்லூரி).

**16 வயது பெண்கள்**

செ.வாணிசிறி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), ஜெ.குயின்சிகா (உடுவில் மான்ஸ்), பு.சுகன்யா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி).

**18 வயது ஆண்கள்**

மா.யூட்ஜெனி (சென்.ஜோன்ஸ் கல்லூரி).

**18 வயது பெண்கள்**

சி.வித்தியாரணி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி).

**20 வயது ஆண்கள்**

ஜெ.நிவேதன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), நா.ஐங்க ரேசன் (யாழ். இந்துக்கல்லூரி), ம.கலாரூபன் (யாழ். இந்துக்கல்லூரி).

**20 வயது பெண்கள்**

ந.சாளின் (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), அ.யூடா மரீனி.

இவர்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் கண்டியில் நடைபெறவுள்ள தேசிய மட்ட சதுரங்கப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதற்காக 'கரி கஸ்பரோவ்' சதுரங்க அக்கடமியினரால் இவர்களுக்கு விசேட பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன. (-10-201)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜுலை11

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தில் அங்கம் வகிக்கின்ற அனைத்து மத்தியஸ்தர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் இன்று காலை 9 மணியளவில் மத்தியஸ்தர் சங்கப்பணிமனையில் நடைபெறவுள்ளது.

அனைத்து மத்தியஸ்தர்களையும் தவறாது இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10-190)

## ஒருநாள் போட்டித் தர வரிசையில் ஆஸி.அணி தொடர்ந்தும் முதலிடத்தில்

லண்டன்,ஜுலை11

சர்வதேச கிரிக்கெட் சபையினால் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அணிகளின் தர வரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி ஆஸ்திரேலியா அணி தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது. மூன்றாவது இடத்தில் இருந்த இலங்கை அணி நாலாவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா 136புள்ளிகள், தென் ஆபிரிக்கா 113புள்ளிகள், நியூஸிலாந்து 112 புள்ளிகள், இலங்கை 110 புள்ளிகள், இந்தியா 107 புள்ளிகள், பாகிஸ்தான் 106 புள்ளிகள் -

மேற்இந்தியத் தீவுகள் 102 புள்ளிகள், இங்கிலாந்து 101 புள்ளிகள், சிம்பாப்பே 62 புள்ளிகள், கென்யா 28 புள்ளிகள், பங்களாதேஷ் 2 புள்ளிகள். (10)

## (விளையாட்டு நிகழ்வுகள்)

கைதடி,ஜுலை11

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கைதடி மத்தி வளர்மதி கல்விக் கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இனறு நடைபெறவுள்ள ஆட்டம் வருமாறு:-

☆ மாலை 5 மணி - கைதடி மின் னொளி வி.க. எதிர் கைதடி குமரநகர் வி.க.(-10-75)

★ ★ ★

திருகோணமலை,ஜுலை11

மூத்த தளபதி லெப்.சீலன் நினைவாகத் திருகோணமலை மாவட்டத் தமிழீழ விளையாட்டுத் துறையின் ஆதரவில் எதிர்வரும் 14ஆம், 15ஆம் திகதிகளில் திரு கோணமலை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கம், திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டரங்கில் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளது. (10-ரி)

★ ★ ★

வடமராட்சி கிழக்கு,ஜுலை11

கரும்புலிகள் தினத்தையொட்டி மருதங்கேணிக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற பாடசாலைகளுக்கு கரும்புலிகள் நினைவுக் கேடயங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை, உடுத்துறை மகா வித்தியாலயம், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கனிஷ்ட மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் கரும்புலிகள் நினைவுக் கேடயங்களைப் பெற்றன.

### விளையாட்டு

மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற கரும்புலிகள் தின நிகழ்வின்போது, கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் நினைவுக்கேடயங்களை வழங்கினார்.

தமிழீழ கல்விக் கழகமும் வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் அரசியல்துறையும் இணைந்து இப்போட்டிகளை நடத்தின. (-10-182)

★ ★ ★

வடமராட்சி கிழக்கு,ஜுலை11

கரும்புலிகள் தினத்தையொட்டி வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் அரசியல்துறையினரால் தரை, கடல் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இப்போட்டிகளில் ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம் 37 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் 24 புள்ளிகளைப பெற்று இரண்டாமிடத்தினையும் கட்டைக்காடு புனித மரியாள் விளையாட்டுக் கழகம் 19 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றன.

11 விளையாட்டுக் கழகங்கள் இப்போட்டிகளில் பங்குபற்றின. (-10-182)

★ ★ ★

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

செம்பியன்பற்று வடக்கு சென்.பிலிப்நேரியார் விளையாட்டுக் கழகம் இரண்டாவது இடத்தைப்பெற்றது. (-10-182)

★ ★ ★

வடமராட்சி கிழக்கு,ஜுலை11

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் தாளையடி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

இரண்டாவது இடத்தைக் குடத்தனை செல்வா விளையாட்டுக்கழகம் பெற்றது.

பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் தாளையடி சென். அன்ரனீஸ் விளையாட்டுச் கழகம் வெற்றீயீட்டி சம்பியனாகியது. இரண்டாவது இடத்தை மாமுனை கலைமகள் விளையாட்டுக் கழகம் பெற்றது. (10-182)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை11

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:-

☆ மாலை 4.15 மணி - கொய்யாத்தோட்டம் வி.க.எதிர் சென்.நீக்கிலஸ் வி.க.

☆ மாலை 5.15 மணி - றோயல் வி.க. எதிர் பாடும்மீன் வி.க.

(-10-190)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை11

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்துக்கான இறுதியாட்டம் இன்று காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியும் யாழ்.பற்றீசியன் அணியும் மோதவுள்ளன. (10)

## தெரிவு அணிக்கு சென்.பற்றிக்ஸ் மாணவன்

யாழ்ப்பாணம்,ஜுலை11

ஹொங்கொங் நாட்டில் நடைபெறவுள்ள ஆசிய கனிஷ்ட பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ள இலங்கை அணியைத் தெரிவு செய்வதற்கான தெரிவு அணியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் எஸ்.திவாகரன் இடம்பெற்றுள்ளார்.

இவர் அகில இலங்கை பாடசாலைகள் மட்டத்தில் நடைபெற்ற 'சன்ஸ்ரார்' கிண்ணத்துக்கான இறுதிப்போட்டியில் சிறந்தவீரராகத் தெரிவு செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (10-190)



நாளையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் வவுனியாவில் நடைபெறவுள்ள வடக்கு - கிழக்கு மாகாண மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ள தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 17 வயதுக்குட்பட்ட அணியைப் படத்தில் காணலாம். கல்லூரியின் 19 வயதுக்குட்பட்ட அணியும் இப்போட்டியில் பங்குபற்றுவதற்குத் தெரிவாகியுள்ளது. (10)

## இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வலுவான நிலையில் ஆஸி.அணி

கெய்ன்ஸ்,ஜுலை11

ஆஸ்திரேலிய - இலங்கை அணிகளுக்கு இடையே ஆஸ்திரேலியாவின் கெய்ன்ஸில் நடைபெற்றுவரும் இரண்டாவதும் இறுதியானதுமான டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி தனது முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 517 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி முதல்நாள் ஆட்ட முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 370 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மத்தியு ஹைடன் 117 ஓட்டங்களையும் அணித்தலைவர் பொண்டிங் 22 ஓட்டங்களையும் ஜஸ்ரின் லாங்கர் ஆட்டமிழக்காமல் 159



ஓட்டங்களையும், டேமியன் மாட்டின் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இரண்டாவது நாளான நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, 147 ஓட்டங்களுக்கு மிகுதி 8 விக்கட்டுக்களையும் இழந்தது ஜஸ்ரின் லாங்கர் 162 ஓட்டங்களையும டேமியன் மார்ட்டின் 97 ஓட்டங்களையும் டெரன் லீமன் 50 ஓட்டங்களையும் பெற்றனர் இலங்கை அணியின் சார்பில் உப்புல்சந்தன 109 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் எல்.மலிங்க 149 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஜயசூரிய 13 ஓட்டங்களுடனும் சங்கக்கார 74 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். (10)

## ஆசிய கிண்ணத்தை இந்தியா வெல்லுமாம்


சென்னை,ஜுலை11



இந்தியா, பாகிஸ்தான், இலங்கை உட்பட 6 நாடுகள் பங்கேற்கும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி இலங்கையில் எதிர்வரும் 16 ஆம் திகதி தொடங்குகிறது. இந்தப்போட்டிக்கான கிண்ணத்தை அறிமுகம் செய்யும் விழா சென்னையில் நடந்தது. இதில் வேகப் பந்து வீச்சாளர் பதான், யுவராஜ்சிங், கும்ப்ளே ஆகியோர் கலந்துகொண்டனர்.

விழாவில் கலந்துகொண்ட கும்ப்ளே ஆசியக் கிண்ணத்துக்கான இந்திய அணி சிறப்பான அணி எனவும் கிண்ணத்தை நிச்சயம் வெல்லுவோம் எனவும் தெரிவித்துள்ளார். (10)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## ஜேமிஸ் குணரத்தினம்

12-07-1942 24-05-2003

மாதங்கள் பல ஓடி மறைந்தாலும்
எம் அன்புத் தெய்வமே! - உம்
நினைவுகள் என்றுமே நீங்காது எம்மைவிட்டு!
வருடங்கள் பல கடந்து போனாலும்
கனவுகளோடு எம்மிடையே வாழ்ந்திருந்தீர் - அது
மலரும் நேரம் எம்மைவிட்டு தொலைதூரம்
சென்றுவிட்டீர்

உங்கள் ஆத்மா சாந்தி அடைய
என்றென்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

முத்துக்கிருஸ்ணர் வீதி,
சுன்னாகம்.
குடும்பத்தினர்.
(33968)(29-11-16)


UNIVERSITY OF LONDON DEGREES
STUDY IN COLOMBO
GO TO LONDON AFTER YEAR 1 FOR BSc CIS
GUARANTEED JOBS FOR GRADUATES
FREE PERSONAL DEVELOPMENT PROGRAM
INDIVIDUAL GUIDANCE AND CARE FOR ALL STUDENTS
TOP CLASS FACULTY
INSTITUTE HEADED BY HARVARD SCHOLAR

ASARIM, Aquinas South Asian Regional Institute of Management, a specialized institute within 50 year old Aquinas College of Higher Studies in Colombo offers lectures for University of London degree courses. If you have sat for A/L exams and are awaiting results or have passed A/L or higher exams or have other Certificates or Diplomas, and have Rs. 140,000 to start a 3-year degree program, You are cordially invited for an

INFORMATION EVENING AT CENTRAL COLLEGE, JAFFNA
18th July 2004 AT 4:00 PM

Degrees offered: BSc Banking & Finance, BSc Accounting & Finance, BSc Business, BSc Information Systems & Management, BSc Computing & Information Systems, BSc Economics & LLB

Aquinas South Asian Regional Institute of Management
990, Maradana Road, Colombo 8
Phone: 4611150-1 E-mail: admin@asarim.org

ASARIM
Aquinas South Asian Regional Institute of Management
990, Maradana Road, Colombo 08.
Tel. 4611150, 4611151 Email: admin@asarim.org
Web: www.asarim.org


# அறிவித்தல்

**தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்**
**கிராமிய வங்கி - கொடிகாமம்**

மேற்படி வங்கியின் 01.01.2003 - 31.12.2003 காலப் பகுதியின் கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனால், வங்கியின் வாடிக்கையாளர்கள் தங்கள் கணக்குகளின் 31.12.2003 திகதி முடிவிலுள்ள மீதிகளை எதிர்வரும் 12.07.2004-17.07.2004 வரையான திகதிகளில் காரியாலய நேரத்தில் சரிபார்த்து உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றேன்.

தென்மராட்சி கிழக்கு,
ப.நோ.கூ.சங்கம்,
கொடிகாமம்.
08.07.2004.

சிசபாரத்தினம்
சிரேஷ்ட கணக்காய்வாளர்
(கூட்டுறவுப் பரிசோதகர்).


## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் 13.07.2004 - 16.07.2004 வரை
*முன்கூட்டியே பதிவு செய்யவும்*

இளைஞர்களே!
★ சக்தி குறைவு ★ஞாபக மறதி ★பயம்
★ ஆளுமைக்குறைவு ★நடுக்கம் ★நித்திரை குறைவு
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீங்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச்சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்று பூரணசுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)
(சி-36258)(29-11-16)



## RTR பெண்கள் அழகுக்கலை பயிற்சி நிலையம்



புதிய பிரிவுகள் ஆரம்பம் 15.07.2004
வியாழக்கிழமை காலை 10 மணி.

- மணப் பெண் அலங்காரம் (இந்து, கிறிஸ்தவம்)
- பேஷியல்
- தலையலங்காரம்
- கண்ணிமை சீர்செய்தல்
- கேக் ஐசிங்
- மட்பாண்ட அலங்காரம்
- சாறி, சாறி பிளவுஸ், பஞ்சாபி வேலைப்பாடுகள், முத்து ஆபரண வேலைப்பாடு, துணியிலான பொம்மைகள் போன்ற பயிற்சிவகுப்புகள்.

பயிற்சி முடிவில் இலவச முக ஒப்பனை (Hurbel) செய்து கொடுக்கப்படும்.

*சங்கீதம், நடனம், வயலின் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.*
உங்கள் அனுமதிகளை முன்கூட்டியே பதிவுசெய்யவும்.
மணப்பெண் அலங்காரம், கேக் ஐசிங், வீடியோ, புகைப்படம், பந்தல், வான்சேவை போன்றவற்றிற்கு ஓடர்கள் பெற்றுக்கொள்ளப்படும்.
★ வேலை செய்யும் பெண்களுக்கு நேரம் ஒதுக்கித்தரப்படும்.
குறைந்த செலவில் தரமானமுறையில் பெற்றிட நாடவேண்டிய ஒரேஇடம்.

**RTR**
பெண்கள் அழகுகலை பயிற்சி நிலையம்
பிரதான வீதி, மானிப்பாய். (ஆஸ்பத்திரி அருகில்)
T.P- 0777 677079
(33984)(30-29-11-16)





இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு
மறுசீரமைக்கப்பட்ட,
மறுசீரமைக்கப்படாத
உயர்ரக

மெஸிபர்கியூஷன் 240
MASSEY FERGUSON 240

எந்த வேளையிலும் எத்தனை ட்ரக்டர்களையும்
வாங்கி வரக்கூடிய இலங்கையின்
மிகப்பெரிய ட்ரக்டர் நிறுவனம்

JCB 3CX

தேவ் டிரக்டர்ஸ்
Dave Tractors

196, கண்டி ரோட், யக்கல. (லங்லோ அருகில்)
தொடர்புகளுக்கு: 033-2226010 (மும்தாஸ்)
0777-783863 (செய்ன்)


## உடுவில் பகுதியில் சிரமதானம்

வலி.தெற்கு,ஜூலை11

சூழல் பாதுகாப்பு வாரத்தையொட்டி உடுவில் கமநல சேவை நிலைய ஊழியர்கள் கடந்த வாரம் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

நிலைய சுற்றாடலைச் சுற்றியுள்ள பகுதிகளில் காணப்படும் செடிகொடிகள், பற்றைகள், முட்கள் போன்றவற்றை வெட்டி அழித்தும் நிலைய எல்லைப் பகுதிக்குள் வளர்ந்துள்ள புற்களை அகற்றியும் சிரமதானப் பணி மூலம் துப்புரவு வேலைகளில் அவர்கள் ஈடுபட்டனர்.

கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சோதிநாதன் தலைமையில் விவசாய போதனாசிரியர் ச. சிவனேசன் மற்றும் நிலைய உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனங்களின் உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பெரும்தொகையானோர் இந்தச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (ஓ-152)


## சாரதி பயிற்சி நிலையம்

பெண்களுக்கு பெண் பயிற்றுவிப்பாளர்கள்.
மாணவர்களுக்கு ஒருநாளில் அனுமதிப்பத்திரம்.
தூரஇடங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள்.

**அச்சலா லர்ணர்ஸ்**
100/B ஹில் வீதி, தெகிவளை.
தொ.இல: (011) 5533228-9
Mobile: 0777-388422/0777-797429


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் **செல்லத்துரை சாந்தமூர்த்தி**
**(திருஞானம்)**

*கருவறை நாள் முதலாய்*
*கண்ணின் மணியென எமைக் காத்தீர்!*
*பெருமித வாழ்வதனில்*
*அருங்கலை நயங்கள் கற்றிட வழிவகுத்தீர்!*
*ஒருதின நிகழ்வினிலே*
*எம்மை விட்டு ஏன் பிரிந்தீர்?*
*திருஞான எழிலுருவே! திசை எது?*
*வழி எது? தெரியாமல் தவிக்கின்றோம் ஐயா!*

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (12.07.2004) திங்கட்கிழமை நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்நிகழ்வுகளில் கலந்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| ராஜேஸ்வரி | | (மனைவி) |
| பகீரதன் ஜெயஸ்ரீ | | (இந்தியா - மகன்) |
| வளர்மதி ரவிச்சந்திரன் | | (லண்டன் -மகள்) |
| சாந்தி சுரேஸ் | | (லண்டன் - மகள்) |
| ராஜமலர் பரஞ்சோதி | | (இலங்கை -மகள்) |
| வீரசுதன் மனோ | | (கனடா - மகன்) |
| காண்டீபன் | | (லண்டன் - மகன்) |
| பேரப்பிள்ளைகள்: | திலீபன் | (இலங்கை) |
| | சுபாஜினி | (இலங்கை) |
| | சரண்யா | (இலங்கை) |
| | ஆர்த்திகா | (லண்டன்) |
| | கீர்த்தனா | (கனடா) |
| | கௌதம் | (லண்டன்) |

மற்றும் உற்றார், உறவினர் நண்பர்கள்.

" மனோகரா தேயிலை இல்லம்"
கொண்டற்கட்டை,
வல்வெட்டித்துறை.
(33774)(29-11-16)


## STUDY IN INDIA

### Garden City College affiliated to UNIVERSITY of BANGALORE

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. (Computer Science) | 3 Year | Maths, Physics & Statistics |
| B.Sc. (Fashion & Apparel Design) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Sc. (Microbiology) | 3 Year | Chemistry and Biology |
| B.Sc. (Genetics) | 3 Year | Chemistry, Physics, Biology, Zoology, Botany |
| B.Sc. (Biotechnology) | 3 Year | Chemistry, Physics, Biology |
| BCA. (Bachelor of Computer Applicants) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BBM. (Bachelor of Business Management) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BHM. (Bachelor of Hotel Management) | 4 Year | Pass in All Subjects in any discipline |
| B.A. (Journalism) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Com (Computers) | 3 Year | Pass in All Subjects in any discipline |

### SSM College of Engineering affiliated to ANNA UNIVERSITY (Chennai)

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.E. Information Technology | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Computer Science and Engineering | 4 Year | Pass In All Subjects with Maths & Physics |
| B.E. Electronics and Communication Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Mechanical Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Information Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Computer Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Apparel and Fashion Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| M.S.C. Information Technology | 5 Year | Pass in All Subjects in any discipline |

Partial SCHOLARSHIPS for students with average of 75 marks in A/L exam

Mr. K.Jegaeswaran (B.Sc, Dip. in Edu.)
(Chemistry Teacher - J/Vembady Girls High School)
ANDRA, K.K.S Road,
Telephone :- 021-4590268 or 9

# இந்த வார இராசி பலன்

## 11.07.2004 – 17.07.2004

| | | | |
|---|---|---|---|
| | ரா. சந். | வெ. | சூ. சனி |
| | இராசிச் சக்கரம் | | செவ். புதன் |
| | | | வியா. |
| | | கே. | |

**மாற்றம்:**

11.07.2004இல் அச்சுவினி 4ஆம் மேடத்தில் சந்திரன் நிற்கும்.

அரசியல் நெருக்கடி தோன்றும். சமாதானப் பேச்சுகள் தொடர்பாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் உலக நாடுகள் அழுத்தங்கள் கொடுக்கும். சில இடங்களில் அழிவுகள் நிகழும். பொது வேலைநிறுத்தமொன்றிற்குத் திட்டமிட்டுச் செயலாக்கம் உருப்பெறும். இந்தியா திட்டமிட்டு வரைவிலக்கணம் போடும். இந்தியாவின் வடக்கில் வன்செயல்கள் நடக்கும். மத்தியகிழக்கு நாடுகளில் வன்முறைகள் திட்டமிட்டு நடக்கும். இந்து, பசுபிக், அரபிய நாடுகளில் திடீர் மழை, காற்றழுத்தங்கள், உஷ்ணநிலை மாறும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

கற்பனை அதிகம். புத்தி சாதுரியச் செயற்பாடுகள், ஆலய தரிசனம், அளவுக்கதிகமாகப் பொருள்செலவு ஏற்படுதல், பொருள் வரும், குடும்பத்தில் கலகம் ஏற்படுவதை உங்கள் சாதுரியத்தால் தடுக்க இடம் உண்டு. கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து கெட்ட நடவடிக்கைகளைச் செய்து வரல், நாலு பேர் உங்களைப் பற்றி நல்லது கெட்டதைப் பேசுவார்கள். கடற்றொழில், பத்திரிகைத் தொழில் செய்பவர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், வெள்ளி.*

### இடபம்

சலிப்புத்தட்டும், சூழலில் வாழுவதாக அடிக்கடி கற்பனை செய்வீர்கள். கோபத்தைக் குறையுங்கள். எல்லோருடனும் அன்புடன் பழக முயலுங்கள். காதல் கிரகமாக வெள்ளி உதயத்தில் ஆட்சி செய்வதனால் கட்டுமீறிப் போகாமல் உங்களையே நீங்கள் கட்டுப்படுத்தி வாருங்கள். உறவினரை அன்புடன் மதித்து வாருங்கள். அவர்களால் பல உதவிகள் கிடைக்கும். நீங்களும் கலகலப்பாக இருப்பீர்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- புதன், வெள்ளி.*

### மிதுனம்

பிறர் செய்யும் குற்றங்களை அளவுடன் மன்னித்து விடுங்கள். உதயத்தில் சூரியன் உன்னதமாக இருக்கின்றார். உள்ளதை, கண்டதை கண்டபடி சொல்லி பிறரின் வெறுப்பைத் தேடுவீர்கள். பொருளால், கலக்கம் வரும். வரும்பொழுது எதையும் நான் கொண்டுவரவில்லை என மன ஆறுதல் அடையுங்கள். நண்பர்களால் இலாபம் வரும். தொழில் முயற்சி அதிகரித்து மனம் சாந்தியாகிப் பணம் வரும். உங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்யுங்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- புதன், வெள்ளி.*

### கடகம்

கருணை உள்ளம் படைத்த நீங்கள் பிறருக்கு உதவி செய்து வாருங்கள். மனத்திடம், வாக்குச்சித்தி, காரியனுகூலத்தை ஏற்படுத்தும். வஞ்சகசிந்தனை ஒருவரை வளரவிடாது என்பதைத் தெரியாதவரா நீங்கள்? எதிர்ப்பாலாருடன் சினேகிதபூர்வமாக இருங்கள். மாமன், ம... சகோதர வழியினர் வெளிநாடுகளிலிருந்தால் உதவி கேட்டுப் பாருங்கள். கைகால் விறைப்பு வந்தால் சும்மா இருக்காமல் வைத்திய உதவிகளை நாடி நன்மை அடையுங்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- புதன், வெள்ளி.*

### சிங்கம்

உங்கள் பலத்தைப் பிறர் அறிவார்கள். திட்டமிட்டுச் செயற்பட்டு நல்லபெயர் வரும். மருந்து, விருந்து என ஓடியாடித் திரிவீர்கள். சொந்தம் உறவாடும். தூரத்திலிருக்கும் உறவொன்று ஆறுதல் மடல்கள் வரையும். பித்தம் கொதிக்கும். வயிற்றில் வருத்தம். பொருள் ஒன்றை இழந்துவிடுவீர்கள். ஊக்கத்தைப் பொறுத்துத் தொழிலில் வியாழ பகவான் கருணை பொழிவார்.

*அதிர்ஷ்டநாள்கள் :- புதன், வெள்ளி.*

### கன்னி

சட்டத்தால் எதனையும் சாதிக்கமுடியும் என அடிக்கடி எண்ணுகின்றீர்கள். உண்மைதான். வருவாய்க்காகப் போராடுவீர்கள். சொந்தச் சகோதரர்கள் உதவி செய்வார்கள். புதிய திட்டம், பொறுப்புகள் வரும். சளித்தொல்லை, உஷ்ணக் காய்ச்சல் என்பன வரும். பொருள் வரும். சிறிசுகளின் தொல்லை அதிகமிருக்கும். குருத்தொழில் செய்பவர்களுக்கு நல்ல வரவேற்பு முன்னேற்றம் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், வெள்ளி.*

### துலாம்

சக்திக்கு மீறிய துணிவு வரும். குடும்பப் பொறுப்பால் ஓடியாடித் திரிந்து சகோதரர்களுக்கு நன்மை செய்வீர்கள். நெஞ்சு, நாரிநோ கொடுக்கும். மேலதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். மாணவர்கள் புதிய திட்டமிட்டுச் சித்தி அடைவார்கள். தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். சட்டத்துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், வெள்ளி.*

### விருச்சிகம்

கவர்ச்சியாகப் பேசி மகிழ்ச்சியாக இருப்பீர்கள். புதிய பொறுப்பு வரும். துணிவுடன் செயற்பட்டு வெற்றியைத் தேடி வீறுநடை போடுவீர்கள். எதையும் நிதானமாகச் செயற்பட்டு நன்மை அடைவீர்கள். பொருள் சிறப்புக் கொடுக்கும். சலவருத்தம், வாய்வுத்தொல்லை வருத்தும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். தூரதேசப் பிரயாணங்களைப் பிற்போடுங்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி.*

### தனுசு

உங்கள் திட்டமிட்ட செயல்கள் திட்டமிட்டு நடக்க இடமுண்டு. தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் ஊக்கத்துடன் உதவிகள் செய்வார்கள். அன்னியர் உதவி கிடைக்கும். அதிக பிரயாணங்கள், மக்கள் நெருக்கடிகள் ஏற்பட இடமுண்டு. சூரியனின் பார்வையால் உதவிகள் கிடைக்கும். ஆனால், கைக்குவரக் காலதாமதமாகும். கால் உளைவு கொடுக்கும். சிலருக்குத் திடீரென உத்தியோக விடயமாகப் பிரயாணங்கள் ஏற்பட்டு நன்மை கொடுக்க இடம் உண்டு.

*அதிர்ஷ்டநாள்கள் : ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி.*

### மகரம்

திட்ட இருக்கும் நண்பர்களின் உதவிகளால் உங்கள் நிலைப்பாடு தொழில் ஸ்தானத்தில் மாறச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். பணவரவு உண்டு. முன்னர் திட்டமிட்ட செயலாக்கங்கள் நடைமுறைப்படுத்தச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். பொருள் இழப்பு அல்லது மறந்துபோக இடம் உண்டு. புதிய சோதனை, புதிய பதவிக்கு முயற்சிகள் எடுக்கச் சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- ஞாயிறு, திங்கள்.*

### கும்பம்

நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். காற்றுள்ளபொழுது தூற்றிக்கொள்ளவும். பக்கத்தில் விநாயகர் ஆலயத்தில் அடிக்கடி பூசைசெய்து கோவிலுக்கு முன்பாகப் படையல் வைத்து வழிபட்டு ஏழைகளுக்குத் தானம் கொடுத்து வழிபாடுசெய்து வரவும். படித்தவர்கள் தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருவர். நீங்களும் பங்குகொண்டு செயற்படுவீர்கள். குருபீடத்தவர்கள் நன்மை அடைவார்கள். கால் வருத்தம் தொல்லை தரும்.

*அதிர்ஷ்ட நாள்கள் : ஞாயிறு, திங்கள்.*

### மீனம்

வீடு சிறப்படையும். பொருள் வளம் பெருகும். தொழில்விடயமாக அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படும். நண்பர் ஒருவருக்கு உதவுவீர்கள். கலகலப்பாக இருப்பீர்கள். தொழில்விருத்தியாகும். மாணவர்கள் நன்மை அடைவார்கள். இனஜனங்கள் உதவுவார்கள். புதிய திட்டம் வெற்றி தரும். சளி, கைகால் பிடிப்பு, சல வருத்தம் வைத்தியம் செய்யவும். கடற்றொழில், குருத்தொழில் செய்பவர்களுக்கு இக்காலத்தில் நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- ஞாயிறு, திங்கள்.*

**மகாதேவா ஜோதிடம்**

---

# மனித மனங்களில் நல்லொழுக்கம் பேணி பரலோகப் பேரின்பம் பெறுவோம்

**ஞாயிறு நற்பிரசாதம்**

வாழ்க்கை வாழ்வதற்கே. பொய்யான வாழ்க்கை, போலியான வாழ்க்கை, ஊரை ஏமாற்றுதல், உலகை ஏமாற்றுதல், இல்லதை இல்லதென்றும், உள்ளதை உள்ளதென்றும் கூறாதபடி நீதியற்ற காரியத்தை நியாயப்படுத்த முனைதல், முகத்தாட்சணிய வாழ்க்கை என்பன நீடிக்கும் வரை, மனித குலத்தை ஏமாற்றுகின்றவர்களாகவும் - ஏமாறுகின்றவர்களாகவும் நாம் வாழமுடியும்.

கடவுள் நமக்கு ஒவ்வொரு நாளும் நல்தொரு காலைப் பொழுதைத் தந்துகொண்டிருக்கிறார். ஆனால், இக்காலை வேளையோ வறுமை, நோய், கடன் தொல்லைகள், பாலியல் வக்கிரகத்தின் அதிர்ச்சித் தகவல்கள், ஏற்றத் தாழ்வுகள், கணவர் - மனைவியரிடையே ஒப்புரவு இல்லாமை, பிள்ளைகள் மத்தியில் மனக்குழப்பங்கள், கீழ்ப்படியாமை, முறையற்ற ஆன்மீகத் தேடலின் சஞ்சலம் இவைகளால் கலக்கமுறும் மனிதர்கள்தான் எத்தனை எத்தனை.

இநநிலையிலேதான், விரதங்களின் மகிமையையும் வேதங்களின் வெளிப்பாடுகளையும் சரியாகக் கண்டறிந்து, கடைப்பிடித்து நாம் நம்பியிருக்கின்ற சிவலோக தரிசனத்தையும் நித்திய பரலோக தரிசனத்தையும் சுவர்க்கத்தையும் அடைய வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

விரதம் என்றும், உபவாசம் என்றும் கூறிக்கொள்ளும் மனிதர்களாகிய எமது வெளியான ஆசாரங்களின் மூலம் நாம் நம்பியிருக்கின்ற பேரின்பத்தை அடையமுடியுமா?

கடவுள் ஜீவாதிபதி. ஒவ்வொரு ஜீவன்களுக்கும் அதிபதியானவர் - உரித்துடையவர் - சொந்தக்காரன் - அவரை அடைவதற்குரிய வழிதான் உபவாசம். ஒறுத்தல், விரதம் இவைகளைக் கடைப்பிடிக்கும் மனிதர்களை நோக்கி, வேதங்கள் விளம்புவதைக் கேட்போம்.

பரிசுத்த வேதாகமம் (சங்கீதம்: 15:1-2) "கர்த்தாவே யார் உம்முடைய கூடாரத்தில் தங்குபவன், யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுபவன். உத்தமனாய் நடந்து நீதியை நடப்பித்து மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்.

மனிதன் நீதியாய் நடந்துகொண்டால் மட்டும் போதாது. இந்தக் கொடுமைமிக்க பூமியில் நீதியை நடப்பிக்கின்றவனாகவும், மனிதராகச் சத்தியத்தை (உண்மையை)ப் பேசுகின்றவனாகவும் இருத்தல் அவசியமாகின்றது.

அவனே பரலோக ராஜ்ஜியத்தின் சொந்தக்காரன் என்பதையே நமக்கு வெளிப்படுத்துகின்றது.

ஏசாயா 58ஆம் அதிகாரம் "இதோ வழக்காடவும், வீண் சண்டையிடவும் கொடும் கையால் தாக்கவுமே நீங்கள் நோன்பிருக்கிறீகள. இன்று போல் நீங்கள் உண்ணா நோன்பிருந்தால் பரலோகத்தில் உங்கள் குரல் கேட்கப்படாது.

விரதங்களின் மகிமையையும் வேதங்களின் வெளிப்பாடுகளையும் மூடிமறைத்து நாம் நம்பியிருக்கின்ற பரலோக வாழ்வையும் நித்திய ராஜ்ஜியத்தின் மகிமையையும் இழந்தவர்களாகின்றோமா அன்பிற்குரியவர்களே!

**சகோதரன்**
**க.திருவம்பலம்**

எங்கு நோக்கினும் இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள், கோயில்கள், மசூதிகள், விகாரைகள் அழகுறக் கட்டி எழுப்பப்படுவதைக் காணுகின்றோம். ஆனால், மனித மனங்களிலுள்ள நல்லொழுக்கங்களோ கட்டி எழுப்பப்படுவதைக் காணமுடியவில்லை.

கடவுள் எங்கும் நிறைந்தவர். எட்டுத் திசையும் பதினாறு கோணமும் எங்கும் ஒன்றாய் முட்டித் ததும்பி நிற்கும் மூலமூர்த்தி.

இவரைக் கட்டிவிட்டதாகக் கலக்கமுறும் பட்டினத்தடிகள் தம் பாடலில், *எட்டுத் திசையும் பதினாறு கோணமும் எங்கும் ஒன்றாய் முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாம் கட்டிச் சுருட்டி தம் கக்கத்தில் வைப்பர். கருத்தில் வையார். பட்டப் பகலை இரவென்று கூறிடும் பாதகரே* என்றார். சித்தர் பாடல்கள் பக்கம் 121, பாடல் இலக்கம் 118.

எனவே, விரதங்களின் மகிமையையும் வேதங்களின் வெளிப்பாடுகளையும் சரியாகக் கண்டறிவோம்; கருத்தில் வைப்போம்; பேரின்பப் பெருவாழ்வு வாழ்வோம்; அன்பு மயமான இவ்வுலகில் சர்வமதங்களிலும் நல்லிணக்கம் காண்போம். நலமுடன் வாழ்வோம். ✣

---

**ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும்**

# பல்தேச இளைஞர் நாடாளுமன்றில் பேச்சாளராக ஈழத்தமிழ் மாணவன்

யாழ்ப்பாணம்,ஜூலை11

உலகின் 113 நாடுகளைச் சேர்ந்த 300 இளைஞர்கள் பங்குபற்றும் பல்தேச இளைஞர் நாடாளுமன்ற அமர்வு கடந்த 5ஆம் திகதி முதல ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகின்றது.

இந்நாடாளுமன்ற அமர்வில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குமாரவடிவேல் குருபரன், ஒக்ஸ்பாம் அமைப்பின் புலமைப்பரிசில் பெற்றுப் பங்குபற்றுகிறார். இவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவன் ஆவார்.

இவர் சமாதானத்தின் குரல் என்ற தேசிய இளைஞர் அமைப்பின் இணைப்பாளருமாவார்.

கடந்த ஜூன் மாதம் சிங்கப்பூரில் மேற்படி அமைப்பினால் நடத்தப்பட்ட செயலமர்வில் மையப் பேச்சாளருள் ஒருவராகவும் (Keynote Speaker) அனுசரணையாளருள் ஒருவராகவும் (Facilitator) அழைக்கப்பட்டிருந்தார்.

அத்துடன் இந்திய நகரான பூனேயில் மகிந்திரா ஐக்கிய உலகக் கல்லூரியினால் இவ்வாண்டு ஜூன் மாத இறுதிப்பகுதியில் நடத்தப்பட்ட இளைஞர் மாநாட்டிற்கும் அதிதிப் பேச்சாளராக (Guest Speaker) அழைக்கப்பட்டிருந்தார்.

சிங்கப்பூர், பூனே மாநாடுகளில் பங்குபற்றிய குருபரன் இப்போது ஆஸ்திரேலியாவில் நடைபெறும் பல்நாட்டு இளைஞர் நாடாளுமன்றத்தில் பேராளராகப் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.

பல்தேச இளைஞர் நாடாளுமன்றம் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகர மண்டபத்தில் நியூசவுத் வேல்ஸ் பிரதமர் பொப் கார் அவர்களால் கடந்த திங்கட்கிழமை சம்பிரதாய பூர்வமாகத் தொடக்கிவைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வுக்கு ஆஸ்திரேலியப் பூர்வக் குடியினர்களது தலைமைத்துவ மையத்தின் பிரதம இயக்குநர் மார்க யெட்டிகோ போல்சன் தலைமை வகித்தார்.

5ஆம் திகதி ஆரம்பமான இந்த நாடாளுமன்ற அமர்வு நாளை முடிவடைகிறது.

இந்த அமர்வு சிட்னி சென். ஜோசெப் கல்லூரி அரங்கில் நடைபெறுகிறது.

கல்வி மேம்பாடு, எயிட்ஸ், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், தொழில்வாய்ப்பு, மனித உரிமைகள் போன்ற மனித குலம் எதிர் நோக்கும் பலதரப்பட்ட பொதுப்பிரச்சினைகள் பற்றி இந்த நாடாளுமன்றம் விவாதித்துக் கொண்டிருக்கிறது.

மேலும், தாம் சார்ந்த பல்வேறு சமுதாயச் சூழல்களில் பயன்தரு மாற்றங்களை ஏற்படுத்த உதவக்கூடிய பயிற்சிகளும் பேராளர்களுக்கு வழங்கப்படுகிறது.



**ஐ.நா.செயலாளர் செய்தி**

இப்பல்தேச இளைஞர் நாடாளுமன்றம் முதன்முதலில் 2000ஆம் ஆண்டில் கூட்டப்பட்டது. தற்போது கூட்டப்பட்டுள்ள இரண்டாவது அமர்விற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் விடுத்துள்ள செய்தியில் "2004ஆம் ஆண்டின் பல்தேச இளைஞர் நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்விற்கு உலகின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் வருகை தந்திருக்கும் இளம் தலைவர்கள் ஒவ்வொருவரும் தமக்கே தனித்துவமான பங்களிபபைச் செய்யக்கூடியவர்கள்.

அவர்கள் உலகின் பல்வேறுபட்ட மொழி, இன, பண்பாட்டுப் பின்னணியை உடையவர்களாயினும் மனித குலத்திற்குப் பொதுவான உயர் இலட்சியங்களால் ஒன்றுபட்டுள்ளார்கள்.

எமது உலகில் உண்மையான மாற்றங்கள் எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் மாற்றங்களை ஏற்படுத்தும் உன்னத நோக்கத்திற்காக ஒன்றுபட்டுச் செயற்பட இவர்கள் உறுதி பூண்டுள்ளார்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி,ஜூலை11

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்ற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலமொழி அல்லது ஆங்கில இலக்கிய பாடத்தில் திறமைச்சித்தி பெற்று ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கும் அரச சேவையிலிருந்து இளைப்பாறியவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஒ-117)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## பட்டப்பின் படிப்புகள் பீடம்

### குடித்தொகை அபிவிருத்தி கற்கை நெறிக்கான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பீடத்தினால் மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கீழ்குறிப்பிடப்பட்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து 14.08.2004 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான தகைமை:**
பின்வரும் தகைமைகளுள் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்தவர்கள் கற்கைநெறிக்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பின்வரும் பாடத்துறைகளில் யாதேனும் ஒன்றில் பட்டம் பெற்றுள்ளவர்கள். புவியியல், திட்டமிடல், பொருளியல், சமூகவியல், மானிடவியல், உளவியல், அரசியல் விஞ்ஞானம், கணிதம், புள்ளிவிபரவியலும் சமூக சுகாதாரமும்.
2. பின்வரும் அரச அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களுள் ஏதேனும் ஒன்றில் குறைந்தபட்சம் 5 வருடகால அனுபவமுடைய நிர்வாக உத்தியோகத்தர் தரத்தில் பதவி வகிப்போர்.

குடித்தொகை கணிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம், திட்டமிடல் பிரிவுகள், சுகாதாரத் திணைக்களம், சமூகநலன் திணைக்களம், நில அளவைத் திணைக்களம்.

- கற்கைநெறிக் காலம்: இரு பருவங்களைக் கொண்ட ஒருவருட காலம்.
- விரிவுரைகள், வாரநாள்களில் பி.ப.4.00 மணி தொடக்கம் பி.ப. 6.00 மணிவரையிலும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப.1.00 மணிவரையிலும் நடைபெறும்.
- கற்கைநெறிக்கு 35 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.
- போதனாமொழி தமிழ் ஆகும்.
- பயிற்சிக்கட்டணம் - 20,000/=
- விண்ணப்பப்படிவம் - 100/=
- பதிவுக்கட்டணம் - 750/=
- நூலகக் கட்டணம் - 750/=
- நூலக வைப்புப் பணம் - 1000/= (மீளளிப்புக்குரியது)
- விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவுசெய்யப்படுவார்கள்.
- பதிவின்போது பயிற்சிக்கட்டணம் முழுமையாகச் செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற விரும்புவோர் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் ரூ.100/= செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பட்டப்பின் படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் பெறமுடியும்.

வண்ணப்ப்படிவங்களைத் தபாலில்பெற விரும்புவோர் யாழ். பல்கலைகழக நிதியாளரின் பெயரில் எழுதப்பட்ட ரூ.100/=இற்கான காசுக்கட்டளையுடன் ரூ.4.50 பெறுமதியுடைய முத்திரைகள் ஒட்டப்பட்ட சுயவிலாசமிடப்பட்ட 23x10 செ.மீ. அளவிலான தபால் உறையொன்றைப் பட்டபபின் படிப்புகள் பீட அலுவலகத்திற்கு அனுப்புவதன்மூலம் பெற்றுக்கொள்ளமுடியும்.

**துணைவேந்தர்,**
**யாழ். பல்கலைக்கழகம்.** (C/36112)(42-14-19-24)

## ஆசிரியர் போட்டிப்பரீட்சைக்கான இலவச வகுப்புகள்

கரவெட்டி,ஜூலை11

ஆசிரியர் போட்டிப்பரீட்சைக்கான இலவச வகுப்புகள் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் மீண்டும் நடைபெறவுள்ளன என்று கல்லூரி அதிபர் என்.அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் இப்பயிற்சி வகுப்புகளில் கருத்துரை வழங்குவார். இதில் பங்குபற்ற விரும்புவோர் பாடசாலை நேரத்தில் பதி[illegible]களை மேற் கொள்ளலாம் என்றும் அதிபர் அறிவித்துள்ளார். (4-70)

## ஆள் தேவை

*யாழ். நகரிலுள்ள பிரபல்யமான கொமினிகேஷனுக்கு ஆள் தேவை. (பெண்கள் மட்டும விண்ணப்பிக்கவும்) மற்றும் கொமபியூற்றர் இயககுநர் ஒருவரும் தேவை. நல்ல தகைமையுடையோர் மட்டும் விண்ணப்பிக்கவும்.*

தொடர்பு:
விளம்பர இல.2325
மே/பா உதயன், யாழ்ப்பாணம். (#-36297)(37)

## பிரத்தியேக ஆங்கில வகுப்புகள்

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க அடிப்படை அறிவிலிருந்து மூன்று மாதப் பயிற்சி வகுப்புகள் கொழும்பிலிருந்து வந்த பிரபலயமான ஆசிரியரினால் நடத்தப்படுகின்றன.

தொடர்பு: I.B.S. ரியூட்டரி
*கொழும்புத்துறை றோட், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.* (33991)(33)

## காணவில்லை



படத்திலுள்ள 16 வயதுடைய **கனகலிங்கம் பகீரதன்** என்பவரைக் கடந்த 05.07.2004 திங்கட்கிழமை முதல் காணவில்லை. அன்றையதினம் வெள்ளை நிற மேற்சட்டையும், நீலநிறக் காற்சட்டையும் அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தகவல் கொடுத்துதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தா.கனகலிங்கம் (தந்தை)**
முருகன் கோயிலடி,
கிரான்பற்று, பண்டத்தரிப்பு. (33996) (33)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மட்டக்களப்பு குருமண்வெளி சித்திவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகத்தில் பிரதம சிவாச்சாரியர்களில் ஒருவராகக் கலந்துகொண்டு கிரியைகளைச் சிறப்பாகச் செய்து சிறப்பித்தவரான *வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான பிரதம குருக்கள்*

**சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக்குருக்கள் கமல்ராஜ் குருக்கள்**

அவர்களுக்கு அந்த ஆலய பரிபாலன சபையினர் 04.07.2004 ஞாயிற்றுக்கிழமை "சிவாச்சார்ய இளவரசு" எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளமையையிட்டு நாம் குருக்கள் அவர்களை மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அத்துடன், எங்களது குருக்களின் சேவையானது மேன்மேலும் வளர்ந்து சிறப்புற்றுத் தொடர எல்லாம்வல்ல உடுப்பிட்டி வடக்கு நெற்கொழுபதி காளிகாதேவியையும் கெருடையம்பதி தொட்டில் கந்தசுவாமியாரையும் வேண்டிப்பணிகின்றோம். (33994)(37-14-19-24)

**சிவஸ்ரீ ச.இராஜசேகரக்குருக்கள்**
தேவஸ்தான பரிபாலகரும் பிரதமகுருவும்
உடுப்பிட்டி வடக்கு நெற்கொழுபதி காளிகாதேவி தேவஸ்தானம்.
கெருடையம்பதி தொட்டில் கந்தசுவாமியார் தேவஸ்தானம்.

## மறக்கமுடியாத மனம் அழும் 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 17 – 06 – 1926 | | 11 – 06 – 2004 |

அமரர்

## வேலுப்பிள்ளை துரைராஜா


அப்பா! எமையெல்லாம் நல்லறிவு தந்து வளர்த்து நல்ல நிலைக்கு நிலைக்க வழிவகுத்துவிட்டு அதனைக் கண்டுகளிக்கக் காலன் விடவில்லையோ? உங்களை நினைத்து அழும் அம்மாவைத் தேற்ற முடியவில்லை. ஆறு பிள்ளைகளைப் பெற்று அன்பு காட்டி வளர்த்தீர்கள்! இனி எமக்கு அன்பு காட்ட யாரும் இல்லை. அப்பா! பேரப்பிள்ளைகளுக்கும் அப்பாவாக இருந்தீர்கள்! நிச்சயம் கடவுளிடம்தான் போய் இருப்பீர்கள்! ஆத்மா சாந்தி அடையட்டும்!

எமது அப்பாவின் மறைவுச்செய்தி கேட்டு எமக்குப் பல்வேறு வகையில ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடிதங்கள் மூலம் ஆறுதல், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டும் மலர் வளையங்கள் வைத்தும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அப்பாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*"சாந்தா வாசம்",*
*மூளாய் றோட்,*
*வட்டுக்கோட்டை.* (C/36117)(42-14-19-24)

**திருமதி சி.கமலேஸ்வரி,**
**பிள்ளைகள்.**

# மரபணுத் தொழில்நுட்பத்தின் மூலம் இங்கும் விவசாயப் புரட்சி காணலாம்

இன்றைய பிறப்புரிமைப் பொறியியல்துறை அபரிமிதமான வளர்ச்சியை அடைந்துள்ளது. புதிய தாவரங்களை பதியம் வைக்கும் முறையில பெறுவதுபோல மனிதனையும் நகல் எடுத்துவிடலாம் என்ற விஞ்ஞானிகளின் அறிவிப்பு உலகையே ஒரு கலக்கு கலக்கி வருகிறது. மனித 'குளோனிங்' முறைக்குத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையைத் தகர்த்துக்கொண்டு உலகின் மூலைகளில் 'குளோனிங்' குழந்தைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் தகவல்கள் கூறுகின்றன.

இந்த நிலையில்தான், மரபணுத்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி குடாநாட்டிலும் விவசாயப்புரட்சி செய்யலாம் என்கிறார் பேராசிரியர் ஆசி.கந்தராஜா. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தற்போது ஆஸ்திரேலியாவில் வசித்து வருகிறார். மேற்கு சிட்னிப் பல்கலைக் கழகத்தில் இணைப்பேராசிரியராகப் பணிபுரிகிறார். அத்துடன், சென்னைப் பல்கலைக் கழகத்தின் தாவரவியல் உயர்பீடத்தில் வருகை நிலைப் பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். அவருடன் பேசியபோது மரபணுத் தொழில்நுட்பத்தின் ஆச்சரியங்கள் நம்மை அதிசயிக்க வைத்தன. அவற்றின் தொகுப்பே இங்கு விரிகிறது.

உலக சனத்தொகைப் பெருக்கம், யுத்த அனர்த்தங்கள் போன்ற பல காரணங்களால் விவசாய நிலங்களின் விஸ்தீரணம் குறைந்து கொண்டே செல்கிறது. அதேவேளை, சனத்தொகைப் பெருக்கம் காரணமாக உணவுக்கான தேவையும் அதிகரித்துக்கொண்டே உள்ளது.

இந்நிலையில், குறைந்த நிலப்பரப்பில் பெருந்தொகை விவசாய விளைச்சலைப் (Intensive Agriculture) பெறக்கூடியவகையிலான நுட்பங்கள் கண்டறியப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகியுள்ளது. அத்துடன், பெறப்படும் விவசாய விளை பொருள்கள் இயல்பு மாறாதவையாக இருக்கவும் வேண்டும். அதாவது குறித்த தாவரங்களில் உள்ள மரபணுக்கள் மாற்றமடையாமல் பேணப்படவேண்டியது மிகவும் முக்கியமானது. உதாரணமாக தமிழீழத்தின் தேசியப் பூவான கார்த்திகைச் செடி தொடர்ந்தும் பேணப்படவேண்டும்.

அவ்வாறு பேணாவிட்டால் அதன் இயல்பில் மாற்றம் (Genetic Variation) ஏற்பட வாய்ப்புண்டு. வெப்பம் மற்றும் இரசாயனப் பதார்த்தங்களின் தாக்கத்தினால் இம்மாறுதல் ஏற்படலாம்.

### மரபணு மாறுபாடு

யாழ்ப்பாணத்தில் காலங்காலமாகச் சின்ன வெங்காயம் செய்கைபண்ணப்பட்டு வருகிறது. இவ்வாறு விதை மூலம் தொடர்ந்து பயிரிடப்படும்போது சில வருடங்களில் அதன் ஆரம்ப இயல்பில் மாறுதல் ஏற்படக்கூடும். இதனால், உபயோகமான சில மரபணுக்களை இழக்க நேரிடலாம். ஆகவே இந்த மரபணுக்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

இத்தகைய மரபணு வளநிலையம் ஒன்று (Genetic Resource Centre) கன்னறுவாவில் ஜப்பான் அரசின் உதவியுடன் நிறுவப் பட்டு இயங்கிவருகின்றது. அங்கு தென்இலங்கையைச் சேர்ந்த தாவரங்களின் மரபணுப் பதார்த்தங்கள் (Genetic Material) பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

துரதிர்ஷ்ட வசமாக வடக்கு - கிழக்குப் பகுதிக்கே உரிய தாவரங்கள் அங்கு பேணப்படவில்லை. இதுமிகவும் கவலைதரும் விடயமாகும். அத்துடன், எமது பகுதியைச் சேர்ந்த தாவரங்களைப் பேணுவதற்கு நாம்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதனை இது வலியுறுத்துகின்றது.




ஆய்வுகூடத்தில் சகாக்களுடன் பேராசிரியர்

### புதிய தொழில்நுட்பம்

இதற்காக 'ஜேம் பிளாஸ்மா கொன்சவேஷன்' (Germ Plasma Conservation) என்ற உயிரியல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. இந்த முறையின்கீழ் இழையங்களை (Tssue) திரவ நைதரசனில் உறையவைத்து நூறு ஆண்டுகளுக்குக்கூடப் பாதுகாப்பாகப் பேணமுடியும். இந்த நுட்பம் 'கிரியோ பிரிஸவேஷன்' (Cryo Preservation) எனப்படுகின்றது.

இந்த நுட்பத்தைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைக் கொடுக்கும் தாவரங்களையும் நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட தாவரங்களையும் உருவாக்கமுடியும்.



தாவரங்களின் பிறப்புரிமைப் பதார்த்தத்தை பேணிப் பாதுகாக்கின்ற உயிரியல் தொழில்நுட்பம் (Plant Bio Technology), வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

### உயிரியல் நுட்பம் ஆரம்ப நிலையில்

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக் கழகங்களில் கூட இந்தத்துறை விருத்தி செய்யப்படவில்லை. இந்தத்துறை விருத்தி செய்யப்படவேண்டும் என்பதனை நோக்காகக் கொண்டு



மரபணு மாற்றத்தின் மூலம் நிறம் மாற்றப்பட்ட பூக்கள்

வடக்கு - கிழக்கைச் சேர்ந்த துறைசார் நிபுணர்கள் மேற்கு சிட்னிப் பல்கலைக்கழக ஆய்வு கூடத்துக்கு அனுப்பப்பட்டனர். யாழ்.பல்கலைக் கழகத்தில் இருந்து சிரேஷ்ட விரிவுரையாளர் ஜெயராணியும் கிழக்குப் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் இருந்து பேராசிரியர் அருள்நந்தியும் ஆசிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சென்று பயிற்சி பெற்றனர். இந்தத் துறை, வடக்கு - கிழக்கிலே அபிவிருத்தி செய்யப்படவேண்டியதன் அவசியம் அங்கு வலியுறுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்தே மேற்கு சிட்னிப் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் ஆசி. கந்தராஜா யாழ்ப்பாணம் வந்துள்ளார். இதற்கு ஆஸ்திரேலிய அரசு மானியம் வழங்கியுள்ளது. யாழ். பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் இது தொடர்பான பயிற்சிப்

**சந்திப்பு: ராஜபுத்திரன்**

பட்டறைகளை இவர் நடத்தவுள்ளார். அதற்கான முன்னாட்டல் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

இதேபோன்ற பயிற்சிப் பட்டறைகளை உகண்டா, கென்யா, இந்தோனேசியா, தன்சானியா, எதியோப்பியா, சீனா, தென்கொரிய மற்றும் இந்தியா (தமிழ்நாடு) ஆகிய இடங்களிலும் இவர் நடத்தியுள்ளார்.

"பல்வேறு நாடுகளுக்கும் சென்று தாவர உயர் தொழில்நுட்பத்தைப் பற்றி பயிற்சிப் பட்டறைகளை நடத்தினேன். அப்போதெல்லாம் எனது தாய் நாட்டுக்கு இச்சேவையை ஆற்ற முடியவில்லையே என்ற ஏக்கம் எனக்குள் நிறைந்து இருந்தது. இப்போதுதான் அந்தக் குற்ற உணர்வு நீங்கியிருக்கிறது" என்று பேராசிரியர் ஆசி.கந்தராஜா மனம் பூரிக்கக் கூறுகின்றார்.

### எதிர்ப்பும் உண்டு

மரபணு மாற்ற முறைகளின் மூலம் உருவாக்கப்படும் தாவர வகைகளுக்கு உலகெங்கும் சுற்றுச் சூழல் சிந்தனையாளர்கள் தொடர்ந்து

## வளம் மிக்க மண்ணில் விஞ்ஞான விந்தையால் பசுமைப்புரட்சி சாத்தியம் என்கிறார் பேராசிரியர் ஆசி.கந்தராஜா

எதிர்ப்புத் தெரிவித்தே வருகின்றனர். இதே போன்ற எதிர்ப்பு யாழ்ப்பாணத்துக்கு வந்திறங்கியபோது பேராசிரியருக்கு ஆரம்பத்தில் இருந்ததாகவே தெரிகிறது. இந்தவிதமாக உருவாக்கப்படும் உணவு வகையின் (Genetic Modified food) விளைவு குறித்துப் பேராசிரியரிடம் கேட்டோம்.

'தற்போது இதுவொரு செயற்கை அணுகுமுறை. ஆனால், காலங்காலமாக இவ்வாறான தாவர மாற்றங்கள் புதிய தாவரங்களின் உருவாக்கங்கள் என்பன இயற்கையாகவே இடம்பெற்றுவருகின்றன.

மழை, மின்னல், இடி போன்ற இயற்கை நிகழ்வுகளால் ஏற்படுகின்ற இரசாயன மாற்றங்கள் காரணமாக இவை நிகழுகின்றன. அவற்றை மக்கள் அறியாமலே ஏற்றுக்கொண்டு விட்டார்கள். ஆனால், இதனையே நாம் செயற்கையாகச் செய்யும்போது மக்கள் அவற்றைப் பயன்படுத்தத் தயங்குகிறார்கள்'

'உதாரணமாக கீரையில் பல்வேறு வகைகள் இருப்பதைப்போல - மாம்பழத்தில் பல்வேறு வகைகள் இருப்பதைப் போல - ஓர் இனத்தில் பல்வேறு சாதிகள் ஏற்படுவதற்குக் காரணம் இந்த இயற்கை மாற்றங்களே! ஆனால், மரபணு மாற்றப்பட்ட தக்காளியை அமெரிக்காவில் அறிமுகஞ்செய்தபோது அதனைப் பயன்படுத்த மக்கள் அஞ்சினார்கள்.

'இந்த நுட்பமுறையைப் பயன்படுத்தி, அதிக புரதம் கொண்ட உணவுப்பொருள்களை, நோய் எதிர்ப்பு சக்திகொண்ட தாவரங்களை, உவர் நிலங்களில் வளரக்கூடிய தாவரங்களை, அறுவடை செய்யப்பட்ட பின் நீண்ட நாள்களுக்குப் பேணக்கூடிய காய், கறி, பூ, கனிகளை பெற்றுக்கொள்ளமுடியும்.

- இவ்வாறு சமூகத்துக்கு நன்மைதரக்கூடிய பல விளைவுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

'செயற்கை முறையில் தாவரத்தின் தன்மைகளை மாற்றுவதால் நன்மை விளையுமா, தீமை விளையுமா என்பது இந்தத் தொழில் நுட்பத்தை எந்தவகையில் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்தே அமையும்.

'உதாரணத்துக்கு அமெரிக்காவில் உள்ள 'மொன்சான்டோ' நிறுவனத்தினர் சிலவகை விதைகளை உருவாக்கி வருகின்றனர். இவற்றைப் பயிரிடும்போது விளைச்சல் அமோகமாக இருக்கும் ஆனால், இந்த விதைகளை ஒரு தடவைக்கு மேல் பயிரிடுவதற்காக பயன்படுத்த முடியாது. அதாவது, இந்தவிதை வேண்டுமானால் அமெரிக்காவிடம் தான் கேட்கவேண்டும்.

'இந்த வகை விதைகள் பயிரிடப்படுகையில் அயலிலுள்ள ஏனைய தாவரங்களுடன் மகரந்தச் சேர்க்கையை ஏற்படுத்தி அவற்றையும் நாசமாக்கிவிடும் என்ற பயம் நிலவுகின்றது. இது கருத்தில் எடுக்கப்படவேண்டிய ஒன்றுதான்.

'இந்தத் தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி அதிக விளைச்சல் கொண்ட - ஆபத்து இல்லாத - ஒரே மாதிரியான - தாவரங்களை பெருமளவில் உற்பத்திசெய்யமுடியும். விதைகள் இல்லாத பழங்கள், நோயெதிர்ப்புத் தன்மை கொண்ட தாவரங்கள், குறித்த காலத்தினுள் பெருமளவு அறுவடையைப் பெறக்கூடிய தாவரங்கள் என ஏகப்பட்ட நன்மைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்'. எமது பிரதேசத்துக்கு இது மிகவும் அவசியமானதும் கூட.

### பல்கலைக்கழகங்கள் முன்வரவேண்டும்

எமது விவசாயிகளுக்கு இந்தத் தொழில்நுட்பம் குறித்த அறிவையும் பயிற்சியையும் வழங்கவேண்டும்.

## தாயகத்தின் வளத்தையும் மக்கள் வளத்தையும் மேன்மையுறச் செய்ய புதிய துறைகளை நாடுவோம்

இதற்காக, யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்கள் செயற்படவேண்டும். ஆஸ்திரேலிய சிட்னி பல்கலைக்கழக பூங்கனியியல் ஆராய்ச்சி மையம், இதற்கான ஆதரவை வழங்கும் - என்றார் பேராசிரியர் ஆசி.கந்தராஜா.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள பயிற்சிப் பட்டறையைத் தொடர்ந்து இங்கு நிரந்தர ஆய்வுகூடம் அமைக்கப்படவுள்ளது.

பேராசிரியர் ஆசி.கந்தராஜா கைதடியைச் சேர்ந்த சின்னத்தம்பி வாத்தியாரின் மகன். கைதடியில் ஆரம்பக் கல்வியைப் பயின்ற இவர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். இவர் ஓர் உயிரியல் துறை நிபுணர் மட்டுமன்றி சிறந்த தமிழ் ஆர்வலரும் வானொலியாளரும் கூட. 'உயரப்பறக்கும் காகங்கள்', 'பாவனை பேசலன்றி' (இந்தத் தொகுதிக்கு 2001 ஆம் ஆண்டின் சாகித்திய மண்டலப் பரிசுபெற்றது) ஆகிய சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். ஆஸ்திரேலியாவில் ஒலிபரப்பாகி வரும் 'தமிழ் முழக்கம்' என்ற அலைவரிசையை நடத்தி வருகிறார். புலமைப் பரிசில் ஒன்று கிடைத்ததை அடுத்து கிழக்கு ஜேர்மனியில் விலங்கியல் தொழில்நுட்பத்தை இவர் பயின்றார். தொடர்ந்து மேற்கு ஜேர்மனியில் கலாநிதிப் பட்டம்பெற்றார். அங்கு தாவர உயிரியல் தொழில்நுட்பத்தையும் கற்ற பின்னர் ஆஸ்திரேலியாவில் குடியேறினார்.

உயிரியல்துறை ஆராய்ச்சிகள் ஓர் உன்னதமான நிலையை நோக்கி நகர்ந்துகொண்டு இருக்கின்றன. இந்தவேளையில், உயிரியல் தொழில்நுட்பம் குறித்த அறிவை எமது வடக்கு - கிழக்குப் பிரதேசமும் பெற்று அதன் நன்மையான விளைவுகளை அனுபவிக்க வேண்டியது முக்கியமானது' இல்லையா!



எளிதில் அழுகாத தக்காளி

*பழக்கப்பட்டவற்றை மட்டுமே பேணும் செயற்பாட்டுடன் நின்றுவிடாது புதிய தொழில்நுட்பங்களையும் எமது பிரதேசங்களில் அறிமுகப்படுத்த வேண்டிய தேவையும் காலமும் மிகநெருக்கமாக வந்து கொண்டிருக்கின்றன. அத்தகைய ஒரு மாற்றத்தின் முன்னோடிகளில் ஒருவராகப் பேராசிரியர் ஆசி.கந்தராஜா உதவட்டுமே.*

*தாய்நாட்டினர் வளம் நோக்கிய அவரது எண்ணம் நிறைவேறட்டும் எங்கள் மக்களும் புதிய வழி செல்லப் புறப்படட்டும்....*

★

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள றோணியோ (Rex Rotary 450), Laser Printer (Hp 1200) Dotmatric Printer (Epson LQ - 300+) National Double Door குளிர்சாதனப் பெட்டி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 104/4, குறுக்குவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (33993)

நல்ல நிலையிலுள்ள 203 - ஓட்டோ ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: V.கந்தையா T.P. 077 6034082. (33995)

பிறீமா இன சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும 14.07.04 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி T.P. 3529, 2867, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (33760)

புறொயிலர் கல்பேட் இறைச்சிக்கோழி, ஒரு மாதம் நிரம்பிய பேட்டுக்குஞ்சுகளும் சேவல் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு இல.19, புலவனார் வீதி, கல்வியங்காடு (பெற்றோல் செற்றுக்கு அருகில்). (33965)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 19-07-2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் suddi Farm வட்டுக்கோட்டையிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும். க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33931)

## தவறிவிட்டது

கொக்குவில், மஞ்சவனப்பதி முருகன் ஆலய பின் வீதியில் 05.07.2004 அன்று பிற்பகல் Nokia 3310 கையடக்கத் தொலைபேசி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் S.R.துரை 021-222-6206 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது கோயில் நிர்வாகத்துடனோ தொடர்புகொண்டு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.(33969)

## ஜோதிடம்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பிறந்த உங்கள் குழந்தைகளின் ஜாதகங்களைக் கணித்து பலன்கள் கூற, விவாகப் பொருத்தங்கள் பார்க்க, சுபகருமங்களுக்கு நாள் குறிக்க நாடுங்கள்: சோதிடர் எஸ்.சிதம்பரநாதன் 'புங்கடி' புலோலி தெற்கு (மந்திகை ஆஸ்பத்திரி கடந்து கொடிகாமம் றோட்டில் மெதடிஸ்த மிசன் பாடசாலையிலிருந்து 4 ஆவது வீடு). (33892)

## வீடு விற்பனைக்கு

யாழ்.வெலிங்டன் சந்திக்கும், பெருமாள் கோயிலுக்கும் இடையில் மாடிவீடு 7 அறைகளுடன், கீழ் பகுதி களஞ்சிய அறைகளுடன் கூடிய 2 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பொ.சிவராஜரட்ணம், கனக சபை வீதி, மானிப்பாய். T.P. 0776510645, 0112503821. (33936)

யாழ்பல்கலைக்கழகத்திற்கு முன்னால் குமார சாமி வீதியில் 3¾ பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. (Highest Offer) தொடர்பு: K.Suganthan T.P.0112595411, 0714809403 (சி35992)

## காணி விற்பனைக்கு

இலக்கம் 65, கச்சேரி நல்லூர் வீதியில் 2¼ பரப்புக் காணி (கிணற்றுடன்) விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 113, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இலக்கம் 021-222-6240 (33962)

சாவகச்சேரி தபாற்கந்தோருக்கு அருகில் கடையும் வீடும் கட்டக்கூடிய 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: A.S. ஞானம், கட்டட ஆலோசகர், (பழைய நீதிமன்று முன்பாக) கண்டிவீதி, சாவகச்சேரி. (33961)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

இரண்டு மாதம் நிரம்பிய பூச்சி நீக்கப்பட்ட, தடுப்பூசிகள் ஏற்றப்பட்ட நல்லின அல்ஷேசன் ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.சிறி 282, யாழ்வீதி, மானிப்பாய். (சுதுமலை சந்தி அருகில்) (33986)

இல.132, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் ஒரு பரப்பு 6 குழிகாணி விற்பனைக்கு உண்டு. (வேம்படி மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரி அருகில்) (கடை, வைத்திய நிலையங்கள் கட்டுவதற்கு சிறந்தது) தொடர்பு: வே.அருளானந்தம் (அருள்) 27/5புதுவீதி கொய்யாத்தோட்டம்.(33906)

## இலகு திருமண சேவை

1975, மூலம், செவ்வாய் அற்ற கிரகபாவம் கூடிய Acconnfoncy II சித்திபெற்ற கனடா P.R மணமகனுக்கு அழகிய, படித்த உயரமான மணப்பெண் கௌரவ குடும்பத்தில் தேவை. தொடர்பு: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (33987)

1974, சுவாதி, செவ்வாயற்ற, Double degree அழகிய மணப்பெண்ணுக்கு கௌரவ குடும்ப Proffessional உத்தியோக மணமகன் உள்ளூர்/வெளியூரில் தேவை. துரை விமலா நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (33901)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 26 வயது, 4இல் செவ்வாய் (நட்பு) உள்ள அரச திணைக்கள லிகிதருக்குப் பொருத்தமான அழகிய மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இலக்கம் 2324, C/o உதயன், யாழ்ப்பாணம். (33959)

## வீடு வாடகைக்கு

சண்டிலிப்பாயில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: ஆ.பாலசுப்பிரமணியம், டச் வீதி, சீரணிச் சந்திக்கு அருகில், சண்டிலிப்பாய். (33887)


உங்கள் வாழ்நாள் முழுவதும்
நிலைத்து நிற்கக்கூடிய அழகிய நிறங்களுடனும்
பலவித சித்திர வேலைப்பாடுகளுடனும் கூடிய
உயர்ரக சுவர் / தரை ஓடுகள்




.... இன்னும் புல அளவுகளில்!

யாழ் நகரில்
பின்வரும் விற்பனை நிலையங்களில்
பெற்றுக்கொள்ளலாம்.

கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதி

**NEW KAMAAL CERAMICS,**
இல. 37 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2085

**JAFFNA CERAMICS,**
இல. 2C ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3667

**VENKE IMPEX,**
இல. 27/3 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6738

LWL லங்கா வோல்டைல் லிமிரெட்,
2i5, நாவல வீதி, கொழும்பு-5.
தொ.பே: (011) 2 805460/(011) 2 806450

நீடித்து நிலைக்கும் அழகுமயம்


# கண்ணீர் அஞ்சலி



அமைதியான புன்சிரிப்பும்
ஆழ்ந்த அறிவும் கொண்டு
கனிவு மொழி பேசும்
கள்ளமில்லா மனத்தினன்
திறமை காட்டி நின்றாய்

ஊழியராய் வந்தோம்
உன்னுள்ளத்தில் ~ உன்
பிள்ளைகளாய் உறைந்தோம்
தேவையென்று சொல்லுமுன்
தீர்த்து வைப்பாய் தேவைகளை

கண்கள் பல உமைத்தேட
காணாமல் காலனுடன் சென்றதேனோ?
கள்ளமில்லா வெள்ளைமனமும்
புன்னகை பூத்த பொன்முகமும் மறைந்ததேனோ?
கண்களெல்லாம் கடலாய் பொங்க
கலங்கவிட்டு எங்கு சென்றாய்?
அமைதியாய் மரணத் திரையில்
மௌனமாய் மறைந்ததேனோ?

எங்கள் அன்புக்கும் மதிப்புக்குமுரியவரான

அமரர்

## ஆறுமுகம் சிவராஜா

(உரிமையாளர் - மல்லிகா மிக்ஷர் மாளிகை, யாழ்ப்பாணம்)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 20.02.1946 | 07.07.2004 |

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் வருந்தி நிற்கும்:

மல்லிகா மிக்ஷர் தொழிலகம்,
கூளாவடி, ஆனைக்கோட்டை.

ஊழியர்கள்,
மல்லிகா மிக்ஷர் மாளிகை,
குலம் கிறீம் ஹவுஸ் ஸ்தாபனம்.

(34003)(37-19-16)

LIBRARY JAFFNA

மகளிருக்கு ஓர் அரிய வாய்ப்பு

# இலவசக் கருத்தரங்கு

இன்று பிரபல அழகுக்கலை நிபுணர் திருமதி நளினி சிவகுமாரின் (Advance Diploma in Herbal Beauty Culture) அழகுக் கலை பற்றிய கருத்தரங்கு இரண்டு இடங்களில் இடம்பெற இருக்கிறது.

**யாழ்ப்பாணத்தில்**

இடம்: Y.M.C.A. மண்டபம் கச்சேரிக்கு அருகில்
நேரம்: பிற்பகல் 2.00 மணி

**வடமராட்சியில்**

இடம்: ராஜலக்சுமி திரையரங்கு - நெல்லியடி
நேரம்: காலை 9.00 மணி

அழகுக்கலை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பவர் செலுலர் ரேடிங் கொம்பனி**

Office:
185,1st Floor,
Kasthuriyar Rd.,
Jaffna.
Tel/Fax: 021-222 7070

Shop:
205/1, Kasthuriyar Rd.,
Jaffna.
Tel:- 0712 399220

(34013)(29-12-18)

## சிக்கனக் கடன் வழங்கும் சமாசத்திற்கு புதிய தலைவர்

அரியாலை,ஜூலை11

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவு சமாசத்தின் புதிய தலைவராக எஸ்.சிவசுப பிரமணியம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சமாசத்தின் உப தலைவராக ரி.செல்வரத்தினம் தெரிவுசெய்யப்பட்டதுடன் 13 இயக்குநர்களும் தெரிவாகியுள்ளனர்.

புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்டிருக்கும் எஸ். சிவசுப்பிரமணியம் முன்னர் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபையின் செயலாளராக கடமையாற்றி ஓய்வுபெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-17)

**ஆசிரியர் போட்டிப் பரீட்சை**

த.தவசேகர் B.Sc.,P.G.Dip. in Ed.
திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 6.30-7.45 (பு.நே.)
ஆரம்பம்: 12.07.2004
சுப்றா(14) சித்தன்கேணி
(34015)(35)

**வீடு வளவு உடன் விற்பனைக்குண்டு**

கத்தாப்படி வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியில் வீட்டுடன் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
உடன் தொடர்புகளுக்கு:
விக்னேஸ்வரன் (விக்கி)
T.P.: 024- 222 3006
077 6172831
(34017)(29)

**மனநிறைவுடன் மனமார**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்ந்த சிந்தனையும் - வாடிக்கையாளர்
உயர்ச்சியின் முன்னோடி - வழிகாட்டியுமான

## திருவாளர் துரைசிங்கம் ரகு

(ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர்)



தற்போது உதவிப் பிராந்திய முகாமையாளராகப் பதவியேற்றுள்ளதையிட்டு பாராட்டி மனநிறைவடைகின்றோம். அத்துடன், அவர்கள் மேன்மேலும் பல சிறப்புக்களுடன் உயர்வுபெற இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

உரிமையாளர்களும், ஊழியர்களும்

அன்னம்ஸ்,
114, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 2227115.

ஸ்ரீ ராஜன் பன்சி ஹவுஸ்,
இல.65,66, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P:- 077 6003205

(34014)(29-12-18)

**இன்று அரங்கேற்றம் காணும்**

திரு.திருமதி மோகன்ராஜ் - ஜோதினி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரி



## செல்வி அமுதினி

அவர்கள் சகல நலன்களும் பெற்று தில்லை நடராஜப் பெருமான் அருளால் மேன்மேலும் நடனத்தில் சிறப்புற்றுத் திகழ எமது மனமுவந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

மு.கார்த்திகேசு- குஞ்சுத்தாத்தா குடும்பத்தினர்,
யாழ்.சுவை வெதுப்பகம்
முல்லைத்தீவு.

கா.பாஸ்கரன் சித்தப்பா குடும்பத்தினர்,
நிவேதினி வெதுப்பகம்,
யாழ்ப்பாணம்.

(சி-36122)(29-12-18)

**அச்செழு, கொக்கு இருந்தபதி ஸ்ரீ கண்ணகை அம்பாள் என வழங்கும் அருள்மிகு சிவகாமி அம்பாள் திருக்கோயில்**



**வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்-2004**

*அம்பிகை அடியார்களே!*

இன்று (11.07.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு கொடியேற்றம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

2 ஆம் திருவிழா,
3 ஆம் திருவிழா,
4 ஆம் திருவிழா,
5 ஆம் திருவிழா,
6 ஆம் திருவிழா,
7 ஆம் திருவிழா,
} காலை 9.00 மணிக்கு அபிஷேகம் ஆரம்பம், மாலை 5.30 மணிக்கு உற்சவம் ஆரம்பம்.

8 ஆம் திருவிழா -
18.07.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அபிஷேகம் ஆரம்பம். மாலை 5.30 மணிக்கு வேட்டைத்திருவிழா.

9 ஆம் திருவிழா -
19.07.2004 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அபிஷேகம் ஆரம்பம், மாலை 5.30 மணிக்கு சப்பறத் திருவிழா.

10 ஆம் திருவிழா-
20.07.2004 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு தேரில் சாமி ஏற்றல் (ஆரோகணம்).

11 ஆம் திருவிழா -
21.07.2004 புதன்கிழமை காலை 11.00 மணிக்குத் தீர்த்தம.

ஆலய நித்திய பூசகர்:
கு.சிதம்பரேஸ்வரசர்மா,
சி.கிருஸ்ணமூர்த்திசர்மா.

மகோற்சவ குரு:
ஆகம பிரதிஸ்டா வித்வஜோதி,
ஆகமகலாசூரி, கிரியாகலாபமணி,
கிரியாரத்தினம் சிவஞானபாஸ்கரன்
சி.கிருஷ்ணசாமிக்குருக்கள்
(அச்செழு, புன்னாலைக்கட்டுவன்)

*அனைவரும் வருக! அருள் பெறுக!!*

ஆலய பரிபாலன சபையினர்,
அச்செழு.
(34016)(29-12-18)

பலசரக்கு, விவசாய உள்ளீடுகள் இருப்பிடம்
**மாயவன் வர்த்தக நிலையம்,**
அச்செழு. T.P.: 0602213081.

## கண்ணீர் பூக்களால் இதயஅஞ்சலி



ஆறுதல் கூறும்
பூவடிவம் பூமணி

தாயாக, பேர்த்தியாக எனது குடும்பத்திற்கு ஆறுதல் தந்த தாயுள்ளம் எங்களைவிட்டு மறைந்துவிட்டார். அவர் குடும்ப உறவுகளின் தவிப்புடன் நாமும் கலந்து வேதனைகளைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

ஜனனோதயம்,
செல்வராஜா அவனியூ,
அம்மன் வீதி,
திருநெல்வேலி.

செ.சிவலிங்கம்,
(குடும்பம்).

(சி-36120)(29-12-18)

## கண்ணீர் அஞ்சலி



நடராஜா காராளசிங்கம்
அவர்களின் தாயாராகிய

### திருமதி நடராஜா பூமணி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பூங்கனிச்சோலை
உரிமையாளரும், ஊழியர்களும்.

(சி-36122)(29-12-18)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஞானவைரவர் சனசமூக சேவை சங்கத்தின் தொடர் உறுப்பினரும், நிர்வாகியுமாகிய நடராஜா காராளசிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி நடராஜா பூமணி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது சனசமூக சேவை சங்கத்தின் மனம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், இன்று நடைபெறும் இறுதிக கிரியையில் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஞானவைரவர் சனசமூக சேவை சங்கம்,
இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணுலகிற்கு
04 - 08 - 1937



விண்ணுலகிற்கு
11 - 06 - 2004

### அமரர் தில்லையர் குலவீரசிங்கம் (கிரிக்கெட் அங்கிள்)

(ஓய்வுபெற்ற பிரதம இலிகிதர்,
கணக்காய்வாளர், நிர்வாகம், இலங்கை)

நாள்கள் தான் முப்பத்தொன்றாயினும்
ஆறவில்லை எம் துயர்
நீண்டதோர் சோகமாய் நிலைத்திட வைத்தீர்
கொண்டதோர் அன்பால்
புலம்புகின்றோம் நாம் மீண்டும்
எப்போ காண்போம் உங்கள் இனியமுகம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (11.07.2004) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

'பெரியமதவடி'
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

மனைவி, மகள்,
மருமகன், பேரப்பிள்ளை.

(34012)(29-12-18)

**நாகம்ஸ் சுன்னாகம்**

இன்று மட்டும் மாதவன், அமோகா, பூஜா, நாமு நடித்த



**ஜேஜே**
தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
12.07.2004 முதல்
துள்ளாத மனமும் துள்ளும்
(C/35739)(37)

**ராஜா யாழ்ப்பாணம்**

அர்ஜுன், அபிராமி, மணிவண்ணன், பிரகாஸ்ராஜ் நடித்த
**விரனவில்** (ரீஸ்ஸ்)
இன்னும் சில தினங்கள் மட்டுமே!
தினசரி: 10.30,2.30,6.30,9.30 (பு.நே)

**நிறைஞ்சனாஸ் சங்கானை**

விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த



**கில்லி**
தினசரி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
SHE (இரவு 8.45)
(C-35653)(37)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை குமாரசாமி



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை குமாரசாமி அவர்கள் 07.07.2004 புதன்கிழமை இரவு இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னப்பு தம்பதிகளின் அருமை மருமகனும் கனகாம்பிகையின் அன்புக் கணவரும் உதயகுமார் (பிரான்ஸ்), நித்தியகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் உதயரஞ்சினி, சுரேஸ்குமார் (இணைப்பாளர்,முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மாலினி (பிரான்ஸ்), விஜயராணி (பிரான்ஸ்), கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மாறன், மதுமிதா, மதுமதி, ஆதவன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பூமணியின் அன்புச் சகோதரனும் கிருஷ்ணமூர்த்தியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைப்பள்ளத்தில் அமைந்துள்ள இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி-336119)(29-12-18)

# காவல்துறை செயலமர்வு

விபத்துக்கள் ஏற்படாதவாறு வீதியை சாரதிகள் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது தொடர்பான செயலமர்வு ஒன்றைத் தமிழீழக் காவல்துறையினர் நேற்றுக் கிளிநொச்சியில் நடத்தினர்.

காவல்துறையின் நடுவப் பணியகத்தில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் தமிழீழப் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த சாரதிகள், தனியார் வாகனச் சாரதிகள் கலந்துகொண்டனர். தமிழீழ கவல்துறை உதவிப் பொறுப்பாளர் சி.மாதவன் தலைமையில் செயலமர்வு இடம்பெற்றது. போக்குவரத்துப் பிரிவு கண்காணிப்பாளர் கு.கனகலிங்கம் விரிவுரைகளை நிகழ்த்தினார். விபத்துக்கள் ஏற்படாதவாறு வாகனங்களை எபபடி ஓடுவது, எப்படிப் பாதையைப் பயன்படுத்துவது என்பன தொடர்பாக விளக்கங்கள் அளிக்கப்பட்டன. (ஜ-3)

## புத்தளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீ மூட்டிக் கொலை செய்துள்ளனர். இந்தச் சம்பவத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. புத்தளம் பொலீஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஜ-3)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேல் மாகாணத்தில் 35 சதவீதமானவர்களே வாக்களித்தனர். மத்திய, தென் மாகாணங்களில் ஓரளவு சுமாராக வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது. பெரிய அளவில் வன்செயல் சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தகவல் இல்லை என்றும் - கெக்கிராவவில் மட்டும் நேற்று மாலை சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகவும் - பொலீஸ் தலைமையகம் தெரிவித்தது.

இச்சம்பவத்தில் அரச ஆதரவாளர்கள் மீது ஐ.தே.க. ஆதரவாளர்கள் சுட்டனர் என்றும் - இதில் ஐவர் காயமடைந்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

தற்போது நாட்டில் உருவாகியுள்ள ஸ்திரமற்ற நிலையால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தி, பொருளாதார நெருக்கடி ஆகிய காரணங்களால் மக்கள் தேர்தலில் ஆர்வம் காட்டவில்லை என்று அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நேற்று நள்ளிரவு வரை வெளியான முடிவுக்ளின்படி தபால் மூல வாக்களிப்பில் ஆளும் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு பல மாவட்டங்களில் முன்னணியில் இருந்தது.

தொகுதி ரீதியான முடிவுகளில் முதலில் வெளியாகிய கொழும்பு மேற்கு தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டியிருந்தது.

வாக்கு எண்ணிக்கை வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ ஐ.தே.கட்சி | - | 7,622 |
| ★ ஐ.சு.கூட்டமைப்பு | - | 2,632 |
| ★ மே.மா.ஐ.மு. | - | 997 |
| ★ முஸ்லிம் காங்கிரஸ் | - | 995 |

## சமாதானத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமைகளைப் பேணிக்காப்பது உட்பட இலங்கையிலுள்ள சகல சமூகங்களினதும் அபிலாஷைகளையும் பூர்த்திசெய்யும் வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஐரோப்பிய ஒன்றியம் பூரண ஆதரவை வழங்கும் என்றும் உறுதியளித்துள்ளது. (ஜ-13-6)

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் பொய்யான செய்திகளை ஒலிபரப்புவதும் சமாதானத்தைப் பாதிக்கச் செய்துள்ளது.

09.07.2004 வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு கல்லடியில் ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட கிராமசேவகர் குஞ்சித்தம்பி சிவராசாவை புலிகள்தான் சுட்டுக்கொன்றார்கள் என ரி.பி.சி. சேவையூடாகப் பொய்யான செய்தியினை வெளியிட்டதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அண்மைக்கால படுகொலைகளும், துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இடம்பெற்றுவருகின்றன. கிராமசேவகரது படுகொலையும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இடம்பெற்றுள்ளது. இவ்வாறான சம்பவங்களுக்கு சிறிலங்கா இராணுவமே பொறுப்பேற்கவேண்டும். இதேவேளை, உண்மைக்குப் புறம்பான செய்திகளை ஒலிபரப்புச் செய்யும் ரி.பி.சி. போன்ற சேவைகள் சிறிலங்கா அரசு தமது ஊடகங்கள் ஊடாக ஒலிபரப்பு செய்து தமிழ் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும் சம்பவங்களை நிறுத்துமாறும் நாம் வேண்டுகோள் விடுப்பதுடன் தினமும் தமிழ்த் தேசியத்திற்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய செய்திகளைத் தென்றல் செய்தியூடாக ரி.பி.சி. மூலம் ஒலிபரப்புச் செய்வதை உடன் நிறுத்துமாறும் சிறிலங்கா அரசுக்குக் கோரிக்கை விடுக்கின்றோம்.

இது தொடர்பாக சிறிலங்கா ஊடகத்துறை அமைச்சு கவனத்தில் எடுத்து சமாதானத்தை முன்னெடுப்பதற்கான சூழலை ஏற்படுத்துமாறும் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-3)

## கல்வியங்காட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. உடனடியாக 'ஹலோரஸ்ட்' கண்ணி அகற்றும் நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் வந்து கிரனேட்டை மீட்டு பாதுகாப்பாக வெடிக்கவைத்தனர்.

வெடிக்க வைக்கப்பட்ட கிரனேட் அப்பகுதியில் நீண்ட காலமாக மறைந்து கிடந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஜ-6)

## கனடாவிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவில் அண்மையில் வெளியிடப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புக்கள் பொதுமக்களின் உரிமைகளை வலியுறுத்தியிருந்த போதிலும் அமெரிக்க அதிகாரிகளின் இந்நடவடிக்கை குறித்து கனேடியத் தமிழர்கள் கடும் விசனம் வெளிப் படுத்தியுள்ளனர்.

இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவர்களில் பலர் நீண்டகாலமாக கனடாவில் வாழும் தமிழர்கள் என்பதும் அவர்கள் கனேடியக் குடியுரிமை பெற்றவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

- இவ்வாறு அந்த இணையத்தள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-3)

# மரண அறிவித்தல்கள்

## பத்மநாதன் பத்மாவதி



டச்சு றோட், மானிப்பாயைச் சேர்ந்த பத்மநாதன் பத்மாவதி அவர்கள் 08.07.2004 அன்று அகால மரணமானார்.

அன்னார் பத்மநாதனின் அருமை மனைவியும் காலஞ்சென்ற சுசீதா, சுகிர்தரன் (Norway), சுபாஜினி (Norway) ஆகியோரின் அன்புத் தாயாரும் கருணாநிதி (வவுனியா), சாந்தி (Norway), கண்ணன் (Norway) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருத்திகா, விந்துஜா ஆகியோரின அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2004) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்ருக்கும் அறியத்தருகின்றோம்.

*டச்சு றோட்,*
*மானிப்பாய்.* (சி-36124)(12-18)

தகவல்:
க.பத்மநாதன்
(கணவர்).

## திருமதி நடராசா பூமணி



இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, முடமாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா பூமணி 08.07.2004 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா நடராசாவின் அன்பு மனைவியும் குலவீரசிங்கம் (பிரான்ஸ்), குணபாலசிங்கம (பிரான்ஸ்), புஸ்பராணி (நோர்வே), பூபாலசிங்கம் (பிரான்ஸ்), காராளசிங்கம் (நல்லூர் ப.நோ.கூட்டுறவுச் சங்கம்), ஜெயராணி, தேவாணந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராதாராணி (பிரான்ஸ்), புவனமகாதேவி (பிரான்ஸ்), சர்வேந்திரன் (நோர்வே), மகாலட்சுமி (பிரான்ஸ்), லிங்கமலர், குகாநந்தராஜா (மக்கள் போக்குவரத்துச் சபை, வவுனியா), வனஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜீவிதா, தெய்விதா (பிரான்ஸ்), மயூரி, மயூரன், மதுமிதன (பிரான்ஸ்), கார்த்திகா, குமரன், நிருஷன் (நோர்வே), லக்மன், லக்ஷனா, சம்மியா (பிரான்ஸ்), மந்தாகினி, லவாகர், கம்ஷாயினி (யாழ்பபாணம்), ராதிகா, பூவாரகா, தாட்ஷாயினி (யாழ்ப்பாணம்), சங்கிதன், சாம்பிகா, சாகித்தியன் (பிரான்ஸ்) மற்றும் ஸ்ரீரஞ்சன் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2004) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மாலை 5.00 மணிக்கு செம்பாடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராமலிங்கம் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*முடமாவடி, யாழ்ப்பாணம்.* (சி-36123)(12-18)

தகவல்:
பிள்ளைகள், காராளசிங்கம் (மகன் - குட்டி).

## கதிர்காமு செல்லம்மா



இணுவில், மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு செல்லம்மா அவர்கள் நேற்று (10.07.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமுவின் அன்பு மனைவியும் தியாகராசா, பாலசுந்தரம், மணிவண்ணன், மதிவண்ணன், சிவலிங்கம், வரதராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தா, விமலாதேவி, சாரதாதேவி, இந்திரா, நாகசோவிதா, ஜீவமதி ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரபாலினி, பிரதீபா, பிரசாந்தி, விதுசிகா, கோபிகா, சுஜிதா, கஜந்தன், அபிராமி, மயூரதன், யாழினி, தர்சிகா, மதிவாணி, மதிவதனி, மதுசன், சுஜீபா, சுஜீபன், யஸ்பிகா, சோபிதா, தக்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2004) ஞாயிற்றுக்கிழமை பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மஞ்சத்தடி,*
*இணுவில்.* (சி-36126)(12-18)

தகவல்:
க.சிவலிங்கம் (மகன்).

# மரண அறிவித்தல்கள்

## திருமதி திருநாவுக்கரசு தவமணி



ஆனைக்கோட்டை, சோமசுந்தரம் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி திருநாவுக்கரவு தவமணி 09.07.2004 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் இராசதுரை வியாழாச்சியின் அன்பு மகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் சொக்கலிங்கம், இராசம்மாவின் மருமகளும் பஞ்சலிங்கம், சரஸ்வதி, மகாலிங்கம், கணேசலிங்கம் (சுவிஸ்), யோகேஸ்வரி (டென்மார்க்), சாந்தி, ராணி (பிரான்ஸ்) சாந்தலிங்கம், சத்தியலிங்கம் (கனடா), தனலட்சுமி, தவபாக்கியலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் பவானி, பசுங்கிளி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சௌந்தரராஜன், பாலகிருஷ்ணன் (டென்மார்க்), நடேஸ்வரன் (பிரான்ஸ்), கந்தசாமி (குவைத்), அம்பிகைபாலன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பாலசுந்தரம், கதிரவேலு, நவமணி, லட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும துரைஐயா, மனோன்மணி, கமலாதேவி, சரோஜினிதேவி, விமலாதேவி, நாகேஸ்வரி, சகுந்தலாதேவி, மகேஸ்வரி, பூமணி, நவசோதி, ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2004) ஞாயிற்றுக்கிழமை 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக கிரியைக்காக கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சோமசுந்தரம் வீதி,*
*ஆனைக்கோட்டை.* (34019)(12-18)

தகவல்:
தி.பஞ்சலிங்கம் (மகன்).

## திருமதி வேலுப்பிள்ளை பாக்கியலெட்சுமி

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை பாக்கியலெட்சுமி 10.07.2004 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி வேலுப்பிள்ளை (முன்னாள ஊர்.ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் சாரதாதேவி, இந்திராணி, சிவபாதசுந்தரம், வள்ளிநாயகி (கிளை முகாமையாளர் ஊர்.ப.நோ.கூ.சங்கம்), கிருபாதேவி, காலஞ்சென்ற சந்திரபாலா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கையிலாயபிள்ளை மற்றும் பூமணி, கோபாலகிருஷ்ணன், புஸ்பவேணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கதிரேசு மற்றும் கேதாரநாதன், சரோஜா, சிவனேசகுகன், கனகரெத்தினம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நாரந்தனை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாரந்தனை வடக்கு,*
*ஊர்காவற்றுறை.* (34020)(12-18)

தகவல்:
கே.இந்திராணி (மகள்).

## திருமதி கந்தையா தவமணி

சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி கந்தையா தவமணி அவர்கள் நேற்று (10.07.2004) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பூதப்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான பூமணி - சபாபதி, சதாசிவரத்தினம் (முன்னாள் நீதிபதி), செல்வரத்தினம் ஆகியோரின் அன்பான சகோதரியும் மோகனரூபராணி, சந்திரமோகனதாஸ் (முன்னாள் மீன்பிடி கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அருமைத் தாயாரும் த.திருஞானசுந்தரம் (முன்னாள் சிங்கர் கொம்பனி கொழும்பு), ச.அமராவதி ஆகியோரின் அன்பான மாமியாரும் காலஞ்சென்றவர்களான சீனி சபாபதி, ச.ஞானமணி (ஆசிரியை) ஆகியோரின் பிரியமான மைத்துனியும் பத்மினி துரைசிங்கம், ஷாந்தினி, சுப்பிறா சுவர்ணன், சுந்தரவதனி, ஹர்ஜினி அனுரா, ரமேஸ் (கொழும்பு-திறந்த பல்கலைக்கழகம்), சுரேஸ் (ஆசிரியர் - யாழ். மத்திய கல்லூரி), சதீஸ் (பேராதனைப் பல்கலைககழகம்), சர்மினி (பேராதனைப் பல்கலைக கழகம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மதுஸா, ரணிஸ, ஹரிஸ் ஆகியோரின் பாட்டியும ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2004) ஞாயிறு பிற்பகல் 4.00 மணிக்கு சுன்னாகத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துசசெல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பஸ் நிலையம் முன்பாக,*
*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.* (C/36125)(35-12-18)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்

ஆரம்பம்
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS.
(33927)

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
A/L 2005
பௌதிகம், மின்னியல்.
By: ஜெயசீலன்
ஆரம்பம்: 12.07.2004 Mon. 4.30
இரசாயனவியல்
PAPER CLASS
By: செல்வா
ஆரம்பம்: 14.07.2004 Wed. 3.00 p.m.
(34010)





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தேசியசாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

11-07-2004

# தேய்கின்றது சமாதானம்

உப குழுக்களில் தொடங்கிய சமாதான முயற்சிகள் கருணா விவகாரமாகத் தேய்ந்து போயுள்ளது. இராணுவ விவகாரங்கள், புனர்வாழ்வு, மீள்குடியேற்ற விடயங்கள் ஆகியனவற்றை கையாள்வதற்கு விடுதலைப் புலிகளும் அரச இராணுவத்தினரும் அங்கம் வகிக்கும் உப குழுக்கள் அமைக்கப்பட்டு செயற்படத் தொடங்கியிருந்தன. ஆனால், இராணுவ விவகாரங்கள் நிரந்தரமான இறுதித்தீர்வுடன் சம்பந்தப்பட்டது என்றும் வலிகாமம் வடக்கு போன்ற உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களின் மீள் குடியேற்றம் போன்ற விடயங்களும் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய சிக்கலான விடயங்கள் என்றும் இராணுவத் தளபதிகள் வலியுறுத்தினர். விடுதலைப் புலிகள் தாம் தமது மக்களின் மனிதாபிமான விடயங்களை முக்கியப்படுத்துவப்படுத்துவதாகத் தெரிவித்து விவகாரங்களையும் விடயங்களையும் மக்களின் நலன்கள் சார்ந்து சிந்திக்குமாறு அரச இராணுவத் தளபதிகளையும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளையும் கேட்டவண்ணமிருந்தனர். விடுதலைப் புலிகளின் கனரக ஆயுத வலிமைகளைச் சுட்டிக்காட்டிய சரத் பொன்சேகா போன்ற இராணுவ அதிகாரிகள் மீள் குடியேற்றம் போன்ற விவகாரங்கள், இராணுவத்தின் நலன்கள், தேசிய பாதுகாப்பு சம்பந்தமான சிக்கலான விடயங்கள் எனத் தீவிரமாக வாதாடினர். இவ்வாறான எதிரும் புதிருமான சூழலில் புரிந்துணர்வு, சமரசம் என்பன உப குழுக்களின் பிரதிநிதிகளுக்கிடையில் நிலவாத நிலையில் அக்குழுக்கள் தோற்றன.

ஓர் இடைக்கால ஏற்பாடாக அமைக்கப்பட்ட சிரான் (SIHRN) என்ற அமைப்பு இயங்கமுடியாமல் போனது. சிரான் மூலமாகவே புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், மீள் குடியேற்றம், அபிவிருத்தி என்பன வடக்கு - கிழக்கில்

**- டன்ஸ்ரன் லூயிஸ் -**

மேற்கொள்ளப்படவிருந்தன. உரிய முறையிலான நிர்வாகக் கட்டமைப்பாக செயற்படுவதற்கு, சிரானுக்குரிய நிதி முகாமைத்துவ அதிகாரங்கள் தேவையாக இருந்தன. இந்த நிதிக் கையாளுகை அதிகாரங்கள் திறைசேரிக்கு ஊடாகவே கையாளப்படலாம் என்ற நிலைமை தோன்றியபொழுது அமைக்கப்பட்ட நோக்கத்தை சிரான் அமைப்பு அடையமுடியாத நிலைமை எழுந்தது. இதனால், சிரான் அமைப்பும் இயங்குநிலையற்று முடங்கியது.

## கடற்பரப்பில் கடும் பிரயத்தனம்!

உபகுழுக்களும் சிரானும் தோல்வியுற்ற நிலைமையொருபுறமிருக்க விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைக் கடற்படையினருக்குமிடையில் கடற்பரப்பில் மோதல்கள் நடந்தவண்ணமே இருந்தன. விடுதலைப் புலிகளுக்கும் ரணில் அரசுக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கடற்பரப்பு சார்ந்த போர்நிறுத்த விடயத்திலும் போதிய உடன்பாட்டைக் கண்டிருக்கவில்லை என்பதால் விடுதலைப் புலிகள் - நடைமுறையில் மதித்து நடக்கவே முற்பட்டனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகம் இவ்விடயத்தில் கையாலாகாத் தனங்களுடன் கைகள் கட்டப்பட்ட நிலைமைக்கு தள்ளப்பட்டிருந்தது.

உப குழுக்களும் சிரானும் தோல்வியுற்ற நிலையில் வெளிநாடுகளின் நகரங்களில் தொடர்ந்து பல சுற்றுக்களாக நடைபெற்ற பேச்சுக்களின் அத்தனை பயன்களும் இல்லாமற்போயின; வீண் முயற்சிகளாயின. அதேவேளையில் கடலில் நிலவிவரும் குரோத சூழலும் தரையில் ஆங்காங்கு நிலவிய அசம்பாவித சம்பவங்களும புரிந்துணர்வு உடன்படிக்கைக்கும் அதன் வழியாக போர்நிறுத்தத்துக்கும் நீடித்த பயங்கர சவால்களாகவே இருந்தன.

## எச்சரிக்கையூட்டல்கள்!

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் தமது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை (ISGA) யோசனைகளை முன்வைத்தனர். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவினால் அதனையிட்டு உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியவில்லை. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியையோ, நடைமுறையிலிருக்கும் அரசியல் யாப்பையோ, ரணில் உதறித்தள்ளிவிட்டு விடுதலைப் புலிகளுக்குத் தன்னாட்சி அதிகாரசபையை வழங்கிவிடும் சூழல் எள்ளளவும் இருக்கவில்லை. அதேவேளை, ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற தீவிர சிங்கள அமைப்புக்கள் விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் ஆபத்தானவை. பிரிவினைக்கு இட்டுச்செல்லும் என்ற அடிப்படையில் சிங்கள மக்களை எச்சரிக்கையடையச் செய்யத் தொடங்கின.

## சமாதான நூலும் தீர்மானிக்கும காரணிகளும்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பி. புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு வந்ததும் தன்னாட்சி அதிகாரசபையைப் பற்றி மட்டுமல்ல நிரந்தரமான அரசியல் தீர்வைப் பற்றியும் சம காலத்தில் பேசி முடிவுக்கு வரவேண்டும் என்கிறார். ஜே.வி.பி., ஜனாதிபதி ஆகியோரின் நிலைப்பாடுகளுடன் விடுதலைப் புலிகள் உடன்படமாட்டார்கள் என்பது எவரும் விளங்கிக்கொள்ளக்கூடிய விடயங்கள் ஆகும். அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இயலுமான அளவுக்குச் சமாதான நூலில் இன்றுவரை தொடந்து தொங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்றால் உள்நாட்டு அரசியல், இராணுவக் காரணிகள் அதற்குக் காரணங்களாக அமையமுடியாது. நிச்சயமாக



# காத்திருக்கிறது நெருக்கடி...

சர்வதேச அரசியல், பொருளாதார, இராணுவக் காரணிகள் இலங்கைச் சமாதானத்தைத் தீர்மானிக்கும் காரணிகளாக (Deciding Factors) மாறியுள்ளன என்பதே அதற்கான ஒரே காரணமாக இருக்க முடியும் என்று பெரும்பாலான ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## குற்றச்சாட்டும் மறுப்பும்

இந்நிலையில் விடுதலைப் புலிகளின்மீது மேலுமொரு குற்றச்சாட்டுகை எழுந்துள்ளது. கடந்த வாரம் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் நடந்த தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதல் தொடர்பாகவே அந்தக்குற்றச்சாட்டை இலங்கை அரசின் தமிழ் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா உட்படப் பலர் தெரிவித்துள்ளனர். கொழும்பில் சிங்கள, ஆங்கில ஊடகங்களின் ஆசிரியர் பீடங்கள் விடுதலைப் புலிகள்தான் இத்தற்கொலைத் தாக்குதலுக்குப் பொறுப்பாளிகள் என்று அடித்துச் சொல்கின்றன. ஆனால், விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஒருவர் தமக்கும் கொள்ளுப்பிட்டித் தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது' என்று தெரிவித்துள்ளார். தம்மீதான குற்றச்சாட்டுக்களை விடுதலைப் புலிகள் திட்டவட்டமாகவே மறுத்துள்ளனர்.

## இரத்தமும் கண்ணீரும் நரகமும்

குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுவதும் மறுக்கப்படுவதும் ஆய்வுக்குரிய விடயங்களல்ல என்று ஒதுக்கிவிடுவோம். ஆனால், சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவது தொடர்ந்தும் தாமதிக்கப்பட்டால், புதிய புதிய சிக்கல்களும், இராணுவ நெருக்கடிகளும் எழுந்து போர்நிறுத்தம் உடைந்து இலங்கை மக்களின் வாழ்வு இரத்தமும் கண்ணீரும் தோய்ந்து நரகமாகிவிடும். இதனையிட்டு ஏற்கனவே தீவிரபாதிப்புக்குள்ளாகி ஊனமடைந்து, உறவுகளைக் காவுகொடுத்து, அகதிநிலை வாழ்வுடன் பசி பட்டிணியுடன் நோயாளிகளாகி முடங்கிக் கிடக்கும் தமிழ்ச் சமூகம் கடும் கவலையடைந்துள்ளது.

கடற்படை மோதல்களில், கடற்படையினருக்கு சந்தர்ப்பங்கள் சாதகமாக அமைந்திருந்தன. தரையில் ஆங்காங்கு சிறுசிறு சம்பவங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தாலும் இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்தத்தைப் பெரும்பாலும் கடைப்பிடித்தனர்; கடைப்பிடித்து வருகின்றனர் என்பது போலவே தோன்றியது. ஆனால் கடலில் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஒரு வித்தியாசமான குரோத சூழலே காணப்பட்டது. தரையைவிட கடலில்தான் போர்நிறுத்தத்தைக் கண்காணிப்பதில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு (SLMM) கடுமையாகப் பிரயத்தனம் செய்தது.

## பயன்கள் அற்ற வீண் முயற்சிகள்!

இலங்கையின் அரசமைப்பின்படி முப்படைகளின் தளபதி ஜனாதிபதியென்பதும் போரையும் சமாதானத்தையும் பிரகடனப்படுத்துவதும் ஜனாதிபதிதான் என்றும் சொல்லப்பட்டிருப்பதைக் கடற்படைத் தளபதியும், கடற்படை அதிகாரிகளும் இராணுவத் தளபதியும், இராணுவ அதிகாரிகளும், விமானப்படையினரும், பொலீஸ மா அதிபரும் ஜனாதிபதி 12 ஆவது நாடாளுமன்றத்தை கலைத்து 13 ஆவது நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரில் ஸ்ரீலங்கா.சு.க., ஜே.வி.பி., ஒருசில இடதுசாரிக் கட்சிகள் என்பன கூட்டாக ஆட்சியமைத்து சில மாதங்கள் கழிந்துள்ளன. ஜே.வி.பி. ஒற்றையாட்சி முறையில் விடாப்பிடியாக உள்ளது. விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்லர் என்றும் ஜே.வி.பி. வலியுறுத்துகிறது. இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அமைப்பதிலும் (அதனையிட்டுப் பேசுவதிலும் கூட) ஜே.வி.பி. தனக்குச் சிறிதுகூட உடன்பாடு இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொண்டிருக்கிறது. ஜனாதிபதி இடைக்காலத்

கருணா விவகாரத்துக்குத் தீர்வுகாணும் வரை பேச்சு இல்லை என்று கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தன்னைச் சந்தித்த எரிக்சொல்ஹெய்மிடம் அடித்துச் சொல்லியுள்ளார் என்று ஊடகங்கள் தெரிவித்தன. இது மற்றுமொரு சிக்கல்.

சமாதான முயற்சிகள் அனாதைக் குழந்தையாகி விட்டதுமட்டுமல்ல சம்பந்தப்பட்டோர்-சலிப்படைந்தும் விட்டனர் போலத்தான் உள்ளது. அனாதைத் தனமும் சலிப்பும் இலங்கைத் தீவைக் காப்பாற்றப் போவதில்லை! ★

# வீதியும் விதியும்

**3**

வீதியை கடக்க முற்படும்போது அரிவரிப் பாடத்தில் படித்தவை சுடுகாடு வரைக்கும் மறக்கக் கூடாது.

வீதியோரம் நில்லுங்கள். முதலில் வலப்புறம் பாருங்கள் (ஏன்?) – பாதை தெளிவாக வாகனம் அற்று இருந்தால் பின்னர் இடப்புறம் பாருங்கள். (முதலில் வலப்புறம் பார்த்தால் என்ன?) பாதை தெளிவாக வாகனம் அற்று இருந்தால் மீண்டும் வலப்புறம் பாருங்கள். வாகனம் வரும் தூரம், வேகம் என்பவற்றைக் கணித்து அவகாசம் தாராளமாக இருந்தால் கடவுங்கள். கடக்கும்போதும் வாகனங்களையிட்டு விழிப்பாக இருங்கள். வீதிகளை ஓடிக் கடக்கக் கூடாது. ஓடும்போது விழுந்துவிட்டால் கடக்க எடுக்கும் நேரக் கணிப்பு பிசகிவிடும். அருகில் வளைவுகள், மறைவுகள், சந்திகள் இருப்பின் கடப்பது ஆபத்தானது. மஞ்சள் கோடு இல்லாத இடங்களில் வாகனங்களுக்கு முன்னுரிமை கொடுங்கள். பஸ்களாலோ வாகனங்களாலோ இறங்கியதும் மறுபக்கம் கடக்கக்கூடாது.

மஞ்சள் கோடிட்ட இடங்களில் பாதசாரிகளுக்கு முன்னுரிமை என்றுவிட்டு குறுக்கே பாயக்கூடாது. அவ்விடங்களில் பொலீஸார், சாரணர், மாணவர்கள் கடமையில் இருந்தால் அவர்களது சமிக்ஞைகளுக்கே முன்னுரிமை கொடுங்கள் அவசரப் படாதீர்கள்.



இரவில் வீதியில் நடமாடுபவர்கள் வாகனங்களையிட்டு மிக மிக அவதானமாக இருத்தல் அவசியமாகிறது. **Wear white at Night** என்று பிரிட்டனில் ஒரு வாசகம் பிரபல்யமானது. வாகனங்களின் மங்கலான ஒளியில்கூட பிரகாசமாக படத்தக்க ஆடைகள் இரவில் வீதிக்கு வரும்போது அவசியமானவை.

சாரதிகளே!

பெரும்பாலும் உங்கள் தவறுகளால் ஏற்படும் விபத்துக்களின் முக்கிய காரணங்கள் என்று சொல்லப்போனால் அவசரம், மதுபோதை, களைப்பு என்கின்ற மூன்றும் முக்கிய இடம் பிடிக்கின்றன. அதிவேகம் என்பதற்கும் அவசரம் என்பதற்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுகிறது. அவசரம் உங்கள் மனதைப் பொறுத்தது. அது பொலீஸாரால் கண்டுபிடிக்க இயலாதது. நீங்கள் 20 இலும் அவசரப்பட்டு விபத்தில் சிக்கலாம். அதிவேகத்திலும் அவசரம் விபத்தாகலாம். மது அருந்தியபின் அதிவேகம் இதமாக இருக்கும். மயக்கக் கலக்கத்தில் கனவில்த்தான் வாகனம் ஓடும். நிதானம் இருக்காது. அதிகதூரம் வாகன மோட்டியக ளைப்பும் தூக்கமின்றி வாகனமோட்டிய அலுப்பும் கண்களைத் தானாக மூடவைக்கும். சாரதியின் அருகில் இருப்பவர்கள் தாங்கள் முதலில் தூங்கக்கூடாது. அடுத்து சாரதியை தூங்கவிடக் கூடாது. அதற்காக கதைகொடுத்து கவனத்தை கெடுக்கவும் கூடாது.

சாரதிகளை செல்போன்கள் படுத்துகிறபாடு சொல்லிமாளாது. ஒற்றைக்கையால் வாகனமோட்ட வைப்பது மட்டுமன்றி சரியான நேரத்தில் கியர்மாற்ற அவகாசம் இல்லாமல் போய்விடுகிறது. கேட்டல் சக்தி நூறுவீதமும் செல்போனுக்குள் அடங்கிவிடுகிறது. அதில் கிடைக்கும் தகவல்கள் அதிர்ச்சியாகவோ அவசரமாகவோ அல்லது மகிழ்ச்சியாகவோகூட இருந்தாலும் ஆபத்து ஆபத்துத்தான். ஒரு யார் போய்க்கொண்டிருக்கும்போது செல்போனில் அடுத்த யார் பற்றி கதைபடுகிறது. தரித்து நின்று கதைத்துவிட்டால் கதை தெளிவாகவும் இருக்கும் விரைவிலும் முடிந்துவிடும்.

தரித்து நிற்கும் உங்கள் வாகனம் புறப்பட ஆயத்தமாகும்போது சகலருக்கும் விட்டுக் கொடுத்து சமயம் வரும்வரை காத்திருந்து கிளம்புவது தான் முறை. பின்னாலிருந்தோ முன்னாலேயோ வருபவர்கள் கடந்த பின்பு பாதை தெளிவாக வெளிப்பாக இருந்தால் மட்டுமே கிளச்சை ரிலீஸ் பண்ணலாம்.

ஒரு சம்பவத்தில் நெடுஞ்சாலையில் வேகமாக வந்து கொண்டிருந்த பிக்கப்பிற்கு முன்னே ஓரமாக நின்றிருந்த முச்சக்கர வண்டியொன்று சடாரென U வடிவில் சுழன்று திரும்பியது. இரண்டு வாகனங்களும் தப்பியதோ அதிசயத்தில் அதிசயம். இனியென்ன இரண்டு சாரதிகளுக்குமிடையில வாக்குவாதம் வலுத்தது. முச்சக்கர வண்டியிலிருந்த பதினாறு வயதுப் பையன் சொன்னதோ "நான் சிக்னல் போட்டுத்தானே திருப்பினேன்". தம்பி கெட்டிக்காரன் என்று பாராட்டினார் பிக்கப் சாரதி. வேறெதை சொல்ல இயலும்?

சிக்னலை போட்டுவிட்டால் வீதி சொந்தம் என நினைப்பவர்களை விதிதான் காப்பாற்ற வேண்டும். கண்ணாடியில் தெரிவதைவிட அருகில்தான் பின்னால் வரும் வாகனம் உண்மையில் வருகிறது என்கிற உண்மை பல சாரதிகளுக்கு தெரிவதில்லை. குவிவில்லை, குழிவில்லை விம்பத்தூரம் பொருள்தூரம் என்றெல்லாம் படித்துப் பட்டம் பெற்றவர்களும் கூட இந்தக் கணிப்பை கோட்டைவிட்டு விடுகிறார்கள். சந்தேகம் உள்ளவர்கள் கண்ணாடிகளை மற்றாக நம்பாது வெறுங் கண்களாலும் ஒருமுறை பார்த்தால் வெட்கமாகாது. இந்தியத் தயாரிப்பு மோட்டார்சைக்கிள் கண்ணாடிகளில் ***OBJECTS IN THE MIRROR ARE CLOSER THAN THEY APPEAR*** என்ற எச்சரிக்கை வாசகம் பொறிக்கப்பட்டிருப்பதை பெரும்பாலும் காணலாம். இப்படி சொல்லித்தான் தெரியவேண்டுமானால் வாகனங்கள் முழுவதும் வாசகங்களால் நிரம்பிவிடும்.

இலங்கையில் A ரக சாரதி அனுமதிப் பத்திரம் இருந்தால் எந்தப்பெரிய வாகனத்தையும் செலுத்தலாம். நீளமான மற்றும் கனரக வாகனங்கள் அதிகரித்து வருகின்றன. அவற்றுக்கென தனியான வீதிகள் இங்கு கிடையாது. அவை வீதிகளை ஆக்கிரமித்து அசுர வேகத்தில் பல வாகனங்களுடனும் கலந்து பயணிக்கின்றன. டிராக்டர்கள் கற்களையும் மண்ணையும் ஏற்றிய காலம் போய் டிப்பர்கள் களத்தில் இறங்கியிருக்கின்றன. டிராக்டர்களைவிட பலமடங்கு பாரத்தை பலமடங்கு வேகத்தில் இவை நகர்த்தும் வலுவுள்ளன. அவற்றிலும் அளவுக்கு அதிகமான சுமை ஏற்றப்படுவது ஆபத்தானது. இவற்றை பொலீஸார் கண்டுகொள்ளவேண்டும்.

டிப்பர்களில் இருந்து கல்விழுந்து பின்னால் வரும் வாகனங்களின் கண்ணாடிகள் நொருங்குகின்றன. இப்போதெல்லாம் டிப்பர்களை கண்டு ஏனைய சாரதிகள் கலங்கும் நிலைமை உருவாகி வருகிறது. பள்ளம்விழுந்த பாதைகளில் பாரம் ஏற்றி வருபவர்கள் மெதுவாக ஊர்ந்துதான் வரல்வேண்டும். அவசரப்படுவதால் வாகனம் கட்டுப்பாடின்றி எத்தும்போது கற்கள் பறக்கின்றன. மணல் ஏற்றிவரும் வாகனங்கள் மணலை மழையாக சொரிவதனால் திறந்த வாகனங்களில் வருபவர்கள் திணறிப் போய் விபத்தில் சிக்குகிறார்கள். இத்தகைய பொருள்களை ஏற்றிச் செல்பவர்கள் படங்குகளால் மூடிக்கட்டிக்கொண்டே வீதிக்கு வரல் வேண்டும் என்கின்ற சட்டம் அவசியமாகிறது. கல், மண், [illegible]ரிய மரக்குற்றிகள், பரல்கள் போன்றவற்றை ஏற்றிவரும் வாகனங்களை நெருக்கமாக தொடர்வதையும் சீரற்ற பாதைகளில் முந்த்து விலத்துவதையும் மற்றையவர்கள் தவிர்த்தாக வேண்டும்.

சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளை நடத்துபவர்கள் வாங்குகிற கட்டணத்திற்கு துரோகம் செய்யாமல் ஒருமாதிரி வாகனம் ஓட்ட வைத்து பரீட்சையில் பாஸ் பண்ண வைத்துவிடுகிறார்கள். ஒ[illegible] வாகனத்தில் ஒரே மாதிரி திரும்பத் திரும்ப பழக்கி பரீட்சை நடை பெறும் இடத்திலேயே ஓடவிட்டு அதே வாகனத்தில் அதேமாதிரி பரீட்சையும் முடிந்துவிடும். இந்த இருபது நாள் பயிற்சியும் பரீட்சையும் முடிந்து அனுமதிப் பத்திரத்துடன் வாகனம் ஏறுபவர் தனது ஆற்றலுக்கு ஏற்பத்தான் மிகுதிக் காலத்தை ஓட்டவேண்டும்.

அண்மையில் தென்னாபிரிக்கா அமுல்செய்த கடுமையான சட்டங்கள் அனுமதிப்பத்திரத்தில் துளைபோடும் முறை என்பன பலநாடுகளில் வரவேற்கப்படுகின்றன. வீட்டில் அனுமதிப்பத்திரத்தை வைத்துவிட்டு வாகனத்தில் ஏறுவதுகூட பாரதூரமானதாக கருதப்படுகிறது. வாகனத்தில் சமிக்ஞை விளக்குகள் சிவர வேலை

(IV ஆம் பக்கம் பார்க்க)

**மு. சிவநேசன்**

---

# இதுவுமொரு 'மச்ச' விவகாரம்தான்

*மாணிப்பாய் இந்துக் கல்லூரியில்எமக்குத்தமிழ், சமயம் கற்பித்த ஆசிரியர்களில் ஒருவர் திரு.ச. இராஜநாயகம் அவர்கள்; அமரராகி விட்டார். இரண்டிலுமே ஆழ்ந்த புலமை மிக்கவர். சுவையான எடுத்துக்காட்டுக்கள், கதைகள், சம்பவங்களை தமது கற்பித்தலின் ஊடாகச் சொல்வார். அவர் சில வேளைகளில் சில பக்திப் பழங்களின் பகல் வேடத்தை இப்படித் தோலுரித்து காட்டுபவர்.*

*அவர் நீராடிவிட்டு நித்திய வழிபாட்டுக்காக ஆசார சீலராக சுவாமிப்படத்துக்கு முன்னே அமர்ந்து கொள்கின்றார். திருநீற்றைக் குழைந்து மந்திரங்களை ஓதியவாறு குறியிடுவதற்கு ஆயத்தமாகிறார். வழிபாட்டுக்குப் பின்னர் "வயிற்றுப்பூசை"யல்லவா? அந்த நினைப்பு இடையில் வந்துவிடுகின்றது...*

*சமையலறையில் அலுவலாக இருந்த மனையாளுக்குக் கேட்கக்கூடியதாக "என்னப்பா எல்லாம் ஆச்சுதா?" (மந்திரம் ஓதப்படுகிறது)*

*பதில்: ஓம்... ஓம்...*

*அவர்: ஓம்... சிவாய நம... (மந்திரம் ஓதப்படுகின்றது; குறி இட்டுக்கொள்கிறார்) "என்ன பண்ணியிருக்கிறாய்?" (மந்திரம் ஓதப்படுகின்றது அடுத்த குறி இட்டுக்கொள்கிறார்.)*

*பதில்: அன்றைய உணவு விபரம் ஒப்பிக்கப்படுகின்றது.*

*அவர்: தினமும் அதுதானா (மந்திரம்...குறி.)*

*அன்றைய சமையலில் மச்சக் கறி எதுவும் இடம்பெறாதது குறித்துக் கழிவிரக்கப்படுகிறார். அதற்காக மனைவி மீது வேறு அர்ச்சனை...!*

*"கொல்லான் புலாலை மறுத்தானை எல்லா உயிரும் கைகூப்பித் தொழும்" என்ற வள்ளுவம் இந்துக்கள் சிலருக்கே எவ்வளவு ஒவ்வாமைக்குரியதாகவுள்ளது என்பதை விளக்கவே அவர் இதனைச் சொல்லுவார்.*

*அப்பொழுதெல்லாம் (இப்பொழுது என்று சொன்னால் எனக்குப் பிரச்சினை) பெரிய கோவில் உற்சவங்கள் முடிந்த கையோடு வேறு ஏதாவது கோவில்களில் வேள்விகள் நடப்பதுண்டு. அப்படி இல்லாவிட்டால் யாராவது ஒரு பிரமுகர் வீட்டுக் கோடியில் 'மினி' வேள்வி ஒன்று நடக்கும். அது பற்றிய 'பங்குப்' பரிவர்த்தனை "அமைதிப்பேச்சு"க்கள் குறிப்பிட்ட கோயில் தேர், தீர்த்தக் காலத்திலே, கோவில் வீதியிலே - மடத்திலேயே கூட நடப்பதுண்டு.*




*எம்மவர்கள் மத்தியிலே மரக்கறி வகைகளை 'தீயகறி' என்று சொல்வதுண்டல்லவா? உச்சவ காலத்திலே 'தீய' 'மையாக்கறி' (மரக்கறிக்கு அப்படியும் ஒரு பெயராம்) வகைகளோடு நின்றவர்களுக்கு அதை ஈடுசெய்வதற்கு உண்மையான மையக் கறி (ஆட்டுக்கறி) சாப்பிட்டால்தானாம் 'கொஞ்சம்' தீரும்போலிருக்கிறது. விரதத்தின் மகத்துவம் அதன் பயன்கள் இதனால் பாதிக்கப்படலாம் என்பதை அவர்கள் எண்ணுவதில்லை.*

*இக்காலத்தின் சில திருவிழாக்களிலும் இப்படியானதோர் ஆபாசம் வேறு உருவில் புகுந்து விடுகின்றது; அல்லது புகுத்தப் பட்டு விடுகின்றது. எல்லாத் திருவிழாக்களையும் ஓரளவுக்காவது ஒழுங்காகவும் ஆசாரத்துடனும் நடத்தி வந்தவர்கள், அது கடைசிதானே என்றோ என்னவோ பூங்காவனத் திருவிழா ஏனோ தானோ என்று நடத்தி விடுகிறார்கள். அல்லது நடத்த விட்டு விடுகிறார்கள். இன்னும் கேட்டால் "கொடி ஏற்றி இறக்கியாச்சுத் தானே" என்ற அலட்சிய மனோபாவம் வேறு!*

*இன்னொரு காரணமும் சொல்லப்படுவதுண்டு. அதெல்லாம் இளைஞர்கள் நடத்துகின்ற விழா அல்லது வெளிநாட்டு இளைஞர்கள் அனுப்புகின்ற பணத்தைக் கொண்டு நடத்தப்படுகின்ற விழா. அதை நிர்வாகமோ பெரியவர்களோ தட்டிக்கேட்க முடியாது; தட்டிக்கேட்கும் துணிவும் அவர்களுக்குக் கிடையாதே! அப்படிக் கேட்க, வெளிக்கிட்டுச் சில இடங்களில் 'பிரச்சினை'கள் வளர்ந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.*

*இனித்திருவிழாவை இவர்கள் எப்படி மச்சமாக்குகிறார்கள் என்பதற்கு ஒரு சிறு எடுத்துக்காட்டு...*

*விழாவிற்கு மாசு கற்பிக்கும் வகையில் முதற்படியாகத் தேவைக்கு அதிகமான ஒலிபெருக்கிகளைத் தேவையற்ற இடங்களில் எல்லாம் கட்டிக்களியாட்டம் ஆடுகிறார்கள். 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பதுபோல, இந்த ஒலிபெருக்கிக்குப் பின்னால் 'கரும்புத் தோட்டத்திலே யானை புகுந்தாற்போல' கோவில் சூழலிலே ஒலிக்கக் கூடாத இசைகளும் ராகங்களும் புகுந்து விடிய விடிய ஆடாத ஆட்டங்கள் எல்லாம் நடந்துவிடுகின்றன.*

*அண்மையில் எனக்குத் தெரிந்த ஒரு கிராமத்துச் சிறிய கோவில் பூங்காவனத்தின் போது, மூன்று கூட்டம் ஒலிபெருக்கிகாரர்களைப் பிடித்து அறுபது ஒலிபெருக்கிகள் பூட்டப்பட்டதாகப் பெருமையாகச் சொல்லப்பட்டது.! அப்படியானால் அந்தக் கிராமத்து மக்களின் இயல்பு வாழ்க்கை? மதுரைக்கு வந்த சோதனையைவிட பெரியதாகத்தான் இருந்திருக்கும். இதைவிட அக்கிராமத்தின் மீது ஒரு குண்டு விழுந்தால் கூட அதன் பாதிப்புக் குறைவாகத்தான் இருக்கும்....*

*இந்த மச்ச மயத்துக்கும் கலாசாரச் சீரழிவுக்கும் இளைஞர்கள தான் காரணம் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சமய அறிவு மிக்கவர்கள், கோவில்களில் ஆசாரம் பேணப்பட வேண்டும், அங்கு ஒழுங்கும், ஒழுக்கமும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பவர்களும் அவர்கள் தானே? ஆனால், சில இடங்களில் அத்தகையவர்களின் கரங்கள் தாழ்ந்தும் ஏனையவர்களின் கைகள் ஓங்கியும் இருக்கலாம். அத்தகைய சில இடங்களிலுள்ள சில கோவில்களில்தான் நான் மேலே சொன்ன 'மச்ச' விவகாரங்கள் .....*

**- சண் அங்கிள் -**

JAFFNA



# மீன்பிடித் தொழில் மீண்டும் புத்துயிர் பெறுமா?



இலங்கையின் மிக முக்கிய பொருளாதார வளங்களில் ஒன்றாக மீன்பிடித்தொழில் விளங்குகின்றது.

இலங்கையில் சுமார் 2லட்சம் மக்கள் ஆயிரத்து 50 கிராமங்களில் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

மிக முக்கிய பொருளாதார வளமாக விளங்கிய போதிலும் சமீபகாலமாக மீன்பிடித்தொழில் வளமானது பின்நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது. குறிப்பாக வடக்கு-கிழக்குப் பிரதேசத்திலேயே இது மிக மோசமான நிலையை எட்டியுள்ளது.

இனவாத முரண்பாடுகளினால் அதிகளவு பாதிப்பை எதிர்கொண்டதும் அழிவடைந்ததுமான ஒரு துறையாக மீன்பிடிக்கைத்தொழில் துறையையே நாம் குறிப்பிடவேண்டும்.

வடக்கு-கிழக்கில் கோர யுத்தத்தினால் தொழில்களை இழந்து. தொழில் உபகரணங்களை இழந்து. வசித்த வீடு வாசல்களை இழந்து மக்கள் இடம் பெயர நேர்ந்ததால் மீன்பிடிப் பொருளாதாரம் 95 வீதம் அழிவை எதிர்கொண்டது.

**கடற்றொழிலாளர் அடைந்த நட்டம்**

1985ஆம் ஆண்டுவரை உச்சப்பயனை அரசு இந்தத் துறைமூலம் பெற்று வந்துள்ளது. வடக்கு-கிழக்குப்பிரதேசமும் பாரிய முன்னேற்றத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

ஆனால் 1985 ஆம் ஆண்டுக்குப்பின்னர் ஏற்பட்ட போக்குவரத்து இடையூறுகளினால் மீனைச் சந்தைப்படுத்துவதில் கஷ்டம் ஏற்பட்டது. தரகர்கள் மூலமே ஏற்றுமதி செய்ய வேண்டியேற்பட்டதால் தரகர்கள் பெரிதும் நன்மையடைந்தனர். ஆனால் தொழிலாளர்கள் நஷ்டம் அடைந்தனர்.

ஐஸ் தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் மீனைப் பதப்படுத்துவதற்குரிய ஏற்றவசதி வாய்ப்புக்கள் இல்லாது மீன்களை வீணாகப்பழுதடையச்செய்து கொட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது.

குறிப்பிட்ட பிரதேசங்களில் மட்டுமே மீன் பிடித் தொழிலை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால் வளத்தின் உச்சப் பயனை தொழிலாளர்களால் அனுபவிக்க முடியாமல் போய்விட்டது. அவர்கள் மனம் சோர்ந்தும். தளர்ந்தும் போனார்கள்.

2002ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்குப்பின் ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின் ஏற்றுமதிப்பிரச்சினை ஓரளவு தீர்க்கப்பட்டாலும் இன்னும் பல குறைகள் இந்தத் தொழில்சார் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்து வருகின்றன.

**மிகப்பெரிய தடை**

வடக்கில் மீன்பிடிக் கைத்தொழில் துறையின் முன்னேற்றத்திற்கு மிகப் பெரும் தடையாக இருப்பது அதியுயர்பாதுகாப்பு வலயம். இந்த வலயத்தினுள் பெரும்பாலும் அடைக்கப்பட்டிருக்கும் பிரதேசம் கரையோரக் குடியிருப்புக்களும். கடற்கரைகளுமே. இதனால் கரையோரக்குடியிருப்பு மக்கள் வாழ்விடம் தேடி வேறு பிரதேசங்களுக்குச் சென்றுள்ளார்கள். இதனால் தமது தொழிலை நிறைவாகச் செய்ய முடியாத நிலையும். வேறு தொழிலை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இடப்பெயர்வின் மூலம் தொழில்களையும். தொழில் உபகரணங்களையும் இழந்ததால் மீண்டும் தமக்கு வேண்டிய தொழில் உபகரணங்களைக் கொள்வனவு செய்து தொழிலில் ஈடுபட இந்த மக்கள் மிகவும் பின்னிற்கின்றார்கள். மீண்டும் இழப்பு ஏற்படுமோ என்ற ஏக்கம் அவர்களை குழப்புகின்றது.

கடற்கரைகளை முற்றுமுழுதாக ஆக்கிரமித்துள்ள இராணுவம் குறிப்பிட்ட சில பகுதியூடாக மட்டுமே கடலுக்குள் மீனவர்களைச் செல்ல அனுமதிக்கின்றது. அது மட்டுமல்லாது அந்நிய நாட்டுக்குள் செல்வதற்கு கட்டாயம் வைத்திருக்க வேண்டிய கடவுச்சீட்டுகள் போல அவர்கள் தமது சொந்தக் கடலுக்குள் தாம் நீந்தி விளையாடிக்களித்த கடலுக்குள் செல்ல 'பாஸ்' எடுக்க வேண்டும்.

இந்தப் பாஸ் பெறுவதற்கு விண்ணப்பித்து 3 மாதங்கள் வரை காத்திருந்து கிடைத்ததும் ஒவ்வொருநாளும் அடையாள அட்டையையும் பாஸையும் காட்டினால் மட்டுமே கடலுக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

தொழிலுக்காகக் கடலுக்குச் செல்லும் போதும் மீண்டும் கரைக்கு வரும் போதும் சுமந்து வரும் பொருள்கள். மீன்கள் என்பவற்றை அவர்கள் முன் பரப்பி சோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

இப்படியான செயற்பாடுகளால் மீனவர்கள் பெருமளவு சோர்வுற்ற நிலையிலேயே தொழிலை மேற்கொள்கின்றார்கள். இது இந்த மீன்பிடிக்கைத்தொழில் துறையின் மிக மோசமான வீழ்ச்சிக்குக் காரணமாக அமைகின்றது. யாழ்.குடாநாட்டின் பெரும்பாலான துறைமுகங்கள் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருப்பதால் இந்தத்துறைமுகங்களை முழுமையாக பயன்பாட்டிற்கு ஈடுபடுத்தமுடியாத நிலை மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

**தீபா**

இராணுவம் கடற்கரைகளை மட்டுமல்லாது கடலையும் தனது ஆதிக்கத்தின் கீழ் பாதுகாப்பு என்ற பெயரில் கட்டுப்படுத்தி வருகிறது. தாம் குறிப்பிடும் சில பிரதேசங்களில் சில மீற்றர் தூரத்திற்குள் மட்டுமே மீன்பிடிக்க மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது.

மீன் வளத்தை உச்சப்பயனாகப் பெறக்கூடிய பல கடல்பிரதேசங்கள் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பிரதேசமாகவே காணப்படுகின்றன. இதனால் மீன்பிடிக்கைத்தொழில்துறையின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

**சந்தை வாய்ப்பு**

இன்னுமொரு முக்கிய பிரச்சினையாக இருப்பது சந்தை வாய்ப்பு. குடாநாட்டு மீனவர்கள் ஒவ்வொருவரின் மனதிலும் சந்தைப்படுத்தல் என்பது பிரச்சினைக்குரிய விடயமாகவே இருந்து வருகின்றது.

ஏ-9 பாதை திறந்து ஏற்றுமதி செய்து நடைமுறைப்படுத்தப்பட்டாலும் அது போதிய அளவாக இல்லை. பெருமளவிலான முதலீட்டை ஒரு சேர முடக்கி பலர் இந்தத் தொழிலை நடத்துகின்றனர். ஆயினும். பலருக்குக் போதியளவான வருமானம் சந்தைப்படுத்தலில் கிடைப்பதில்லை.

விலை - கேள்வி - எதிர்பார்த்த அளவுக்குக் கிடைப்பதில்லை என மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

**மீனவர் பாதுகாப்பு**

மீனவர்களுக்கு காப்புறுதி. பாதுகாப்பு என்பன மிகக் குறைவாகவே உள்ளன. மீனவர்களும் காப்புறுதியில் அதிக அக்கறை எடுப்பதில்லை. பாதுகாப்பு தொடர்பாக எந்தவித முன் ஆயத்தங்களிலும் மீனவர்கள் ஈடுபடுவதில்லை.

வெளிநாட்டுத் தொழிலாளர்களின் அத்துமீறிய வருகையும். தொழிற்பாடும் மீன்பிடித் தொழிலை இங்கு பெருமளவில் பாதித்துள்ளது.

இந்திய 'றோலர்' எனப்படும் படகுகள் இலங்கையின் கரையோரங்களை நாடி இலங்கையின் பொருளாதார வளத்தைச் சுரண்டிக் கொண்டு செல்வதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மீனவர்களின் முதலீடான தொழில் உபகரணங்களை (கம்பு. வலை) சேதமாக்கி விட்டுச்சென்று விடுகின்றார்கள். இதனால்தொழிலாளர்கள் பாரிய நஷ்டத்தைச் சந்திக்கின்றார்கள்.

**அரசின் கடமை**

இந்த நிலையிலிருந்து இந்த மக்களை கைதூக்கி விடவேண்டிய கடமையும். பொறுப்பும் அரசிற்குரியதாகும்.

அரசு இதில் செய்யக்கூடிய முதல் வேலைத்திட்டம் இராணுவத்தை உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்தும். கடற்கரைப் பிரதேசத்திலிருந்தும் அகற்றி மீனவர்களைச் சுயமாகவும். சுதந்திரமாகவும் செயற்பட்டுத் தமது தொழிலை மேற்கொள்ள வழி செய்து கொடுப்பதாகும்.

குறிப்பிட்ட தூரம் மட்டும் என்றில்லாமல் இலங்கையின் கரையோரம். கடல் என வரையறுத்துள்ள பிரதேசம் முழுவதும் சென்று தொழில் செய்ய அனுமதி வழங்க வேண்டும்.

வெளிநாட்டு மீனவர்களின் செயற்பாடு குறித்து அக்கறை எடுத்து அதன் விளைவுகளை உணர்ந்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசின் இன்னுமொரு முக்கிய பங்கு மீனை சந்தைப்படுத்தல். ஏற்றுமதி செய்தல் தொடர்பாக கூடிய கவனம் எடுத்தலாகும்.

நாட்டின் பொருளாதார வளத்தோடு மீன்பிடிக் கைத்தொழில் துறையினதும். மீனவக்குடும்பங்களினதும் பொருளாதார வளத்தை மேம்படுத்த உதவி செய்யக்கூடிய திட்டங்களை வகுத்து செயற்படுத்தல் வேண்டும்.

இலங்கையின் பொருளாதார வளத்திற்கு மீன்பிடிக் கைத்தொழிற்துறையின் பங்களிப்பு எப்பொழுதுமே மகத்தானதாகவே இருந்து வந்துள்ளது. அதனை முறையாகப்பேணுவதன் மூலம் நாட்டின் பொருளாதார வளத்தை மேம்படுத்துவது ஒரு புறமிருக்க இந்த நாட்டின் கடல்சார் தொழில்களில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த அரசும் பல்வேறு நிறுவனங்களும் முன் வரவேண்டும். ★

# "...முஸ்லிம்கள் - தமிழர்கள் இடையே பழைய நல்லுறவு இல்லைத்தான்..."

- கவிஞர் இக்பால் அலி

**நேர்காணல் - இயல்வாணன்**

மட்டக்களப்பு கல்முனையில் பிறந்து கண்டியில் வதிபவர் இக்பால் அலி. கவிதை, சிறுவர் இலக்கியம் ஆகிய துறைகளில் படைப்பாக்கம் செய்துவரும் இவர், தனது கவிதை நூலுக்காக இலங்கை இலக்கியப் பேரவை பரிசினைப் பெறுவதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவருடனான நேர்காணல் இது.

***கே:*** உங்களை அறிமுகம் செய்யுங்கள்.

***ப:*** நான் கல்முனையில் பிறந்தேன். கல்முனை ஸாகிரா கல்லூரியில் கல்வி கற்றேன் அதன் பின் கண்டிக்கு வந்தோம். எனது வாழ்வின் பெரும் பகுதி, கண்டியிலேயே கழிந்தது. அரபுப் பாடசாலையொன்றில் பணியாற்றுகிறேன்

***கே:*** படைப்புத்துறைக்குள் எவ்வாறு ஈர்க்கப் பட்டீர்கள்?

***ப:*** கண்டியில் மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் என்ற அமைப்பு உள்ளது. இரா அ. இராமன் அதன் தலைவராக இருக்கிறார். கண்டியின் பொதுவாக மலையகத்தின் கலை இலக்கிய மேம்பாட்டிற்காக இந்த அமைப்பு மகத்தான பங்கினை ஆற்றி வருகிறது. பல நூல்களை வெளியிட்டும் உள்ளது. இந்த அமைப்பில் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இதுவே எனது இலக்கிய பிரவேசத்துக்கும் உதவி புரிந்தது. மலையகத்தின் ஏனைய படைப்பாளிகளும் எனக்கு வழிகாட்டிகளாக இருந்துள்ளனர்.

***கே:*** உங்களது படைப்புக்கள் நூல்களாக வெளிவந்துள்ளன. அது பற்றிக் கூறுங்கள்.

***ப:*** எனது முதலாவது நூல் 'முற்றத்துக்கு வாருங்கள்' கவிதைத் தொகுதி. அந்த நூலுக்குக் கிடைத்த நல்ல வரவேற்புக் காரணமாக 'ஞானம்' சஞ்சிகை ஆசிரியர் எனது அடுத்த கவிதைத் தொகுதியான 'புள்ளிகளில் சில புள்ளிகள்' நூலை வெளியிட்டார். இந்நூலுக்கே இலக்கிய பேரவை, பரிசு வழங்கி கௌரவித்துள்ளது.

சிறுவர் இலக்கியத் துறையிலும் எனது மூன்று நூல்கள் வெளிவந்துள்ளன. 'நான் மூன்று சக்கரக்காரன்', 'அன்பு பெருக' ஆகிய இரு சிறுவர் பாடல் தொகுதிகளையும், 'நல்லதொரு பயணம்' என்ற சிறுவர் கதைத் தொகுதியையும் எழுதி வெளியிட்டுள்ளேன்

***கே:*** உங்களது நூலுக்கு பரிசு கிடைத்து, யாழ்ப்பாணம் வந்தமை தொடர்பாக எத்தகைய உணர்வை எய்தியுள்ளீர்கள்?

***ப:*** எங்கு பரிசு கிடைப்பதைக் காட்டிலும் யாழ்ப்பாணத்தில் கிடைப்பது பெருமையானது. எனவே இங்கு வந்தமை இரட்டிப்பான மகிழ்வைத் தருகிறது. யாழ்ப்பாணம், கல்விமான்களும், முதிர்ச்சி பெற்ற இலக்கியவாதிகளும் வாழும் மண். அவர்களைச் சந்தித்ததும், பரிசு பெற்றதும் மகிழ்வைத் தருகிறது. யாழ்ப்பாணத்தவர்களது விருந்தோம்பும் பண்பையும் இங்கு பார்க்க முடிந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக இன ஒட்டுறவுக்குச் சந்தர்ப்பம் தந்த நிகழ்வாகவும் இந்தப் பயணம் அமைந்தது.

***கே:*** நீங்கள் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு படைப்பாளி. அண்மைக் காலத்தில் தமிழ் முஸ்லிம் உறவில் சிறுசிறு விரிசல்களும் நேர்ந்துள்ளன. இது தொடர்பான உங்கள் கருத்தென்ன? எதிர்காலத்தில் இத்தகைய உறவு எவ்வாறிருக்குமென கருதுகிறீர்கள்?

***ப:*** பழைய நல்லுறவு இன்று இல்லைத்தான். கிழக்கிலங்கையில் இவ்வாறானதொரு நிலை உள்ளது. மீண்டும் நல்லுறவு தோன்றுமா என்பதில் நிறைய ஐயப்பாடுகளும் உள்ளன. எனினும், புதிய தலைமுறையினரிடத்து நல்லுறவை ஏற்படுத்த வேண்டுமென ஆர்வம் உள்ளது. அவ்வாறு ஏற்படுவதற்கான ஒளிக்கீற்றும் தெரிகிறது. தமிழர்களும் முஸ்லிம்களும் சந்தித்து விருந்தோம்பி வாழும் சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது நல்லறவை நல்ல முறையில் கட்டியெழுப்பலாம். ★


தேர்தல் ஆண்டு... தேர்தல் ஆண்டு... தேர்தல் ஆண்டு...

# உலகெங்கும் மக்கள் வாக்களிக்கும் ஆண்டு

**2004**-இது தேர்தல் ஆண்டு. இந்த வருடம் உலகச் சனத்தொகையில் அரைவாசி எண்ணிக்கையிலான மக்கள் தத்தமது நாடுகளில் பொதுத்தேர்தலில் வாக்களிக்க அழைக்கப்படுகின்றார்கள். உலக நாகரிக வரலாற்றில் இவ்வாறு அதிகளவில் பொது மக்கள் ஒரே ஆண்டில் தமது ஜனநாயக உரிமையை உபயோகிப்பது இவ்வருடத்திற்கேயான சிறப்பாகும்.

நவம்பர் மாதம் அமெரிக்கர்கள் தமது தலைமைத் தலைவிதியை மீண்டும் ஒரு முறை நிர்ணயிக்கப்போகின்றனர். அமெரிக்கா தற்போது தன்னை ஈடுபடுத்தியிருக்கும் யுத்தங்களைவிட அமெரிக்காவின் பொருளாதார நிலையே இத்தேர்தலின் முடிவை தீர்மானிக்கும் காரணியாக அமையும் என்பது திண்ணமே. இத்தேர்தலில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டாலும், ஏற்படாமல் விட்டாலும் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை பெரிய அளவில் மாறும் என உலகம் எதிர்பார்க்கமுடியாது.

2004ஆம் ஆண்டின தேர்தல் திருவிழாக் கொண்டாட்டத்தில் உலகின் கண்களை இரண்டு நாடுகளின் பொதுத்தேர்தல் ஈர்த்துச் செல்கின்றது. இதில் முதலாவது இந்தியா மற்றையது ஈராக். உலகின் அதிகளவு சனத்தொகையைக் கொண்டுள்ள முதலாவது ஜனநாயக நாடான பாரதத்தின் பிள்ளைகள் தமது தலைமையைத் தீர்மானிக்கும்போது சீனாவுடன் இணைந்து ஆசியக்கண்டத்தில் வளர்ந்துவரும் உலகப் பொருளாதார வல்லரசாகத் தம்மை மாற்ற வேண்டிய கடப்பாட்டை மனதில் நிலைநிறுத்திக்கொள்ள வேண்டியவர்களாக இருந்தார்கள். அதில் ஓரளவு அவர்கள் வெற்றி கண்டுள்ளார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது.



அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளினால் விடுதலை பெற்றுக்கொடுக்கப்பட்ட ஈராக்கும் பொதுத்தேர்தல் ஒன்றை சந்திப்பதன் மூலம் அரபு நாடுகளில் ஜனநாயக மரபுகளைத் தழுவும் முதல் நாடாக உலகிற்கு தன்னை அடையாளப் படுத்திக் கொள்ளும். ஜனநாயகம் நோக்கிய ஈராக்கின் இந்தப் பயணமானது உலகின் மற்றைய முஸ்லிம் நாடுகளுக்கு ஓர் ஆணித்தரமான கருத்தை உரைத்துச் செல்லும்.

இலங்கைத்தீவோ நம்பிக்கை தந்த சமாதான முன்னெடுப்புகளைத் தொலைத்து விட்டு தேர்தலுக்கு மீண்டும் அவசரத் தந்தி கொடுத்தது. ஏப்ரல் இரண்டில் அரங்கேறிய தேர்தல் நாடகமானது கடந்த நான்கு ஆண்டுகளில் மேடையேறும் மூன்றாவது தோல்விப் படைப்பாகும். இரு அரசியல் அதிகார தலைமையின் கீழ் தமிழர்களின் நீண்டகால கனவுகள் மறைந்துகொண்டே செல்வதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

தமிழர்கள் அதிகளவில் புலம்பெயர்ந்து வாழும் கனடாவிலும் 34ஆவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல்கள் நடைபெற்று முடிவுகளும் வெளியாகியுள்ளன. குறிப்பாக இலங்கைத்தீவின் இனப்பிரச்சினை காரணமாக தமிழர்கள் புலம்பெயர்ந்தபோது அவர்கள் தெரிவுசெய்த நாடுகளில் முதலிடம் பெற்றது கனடா.

பரப்பளவில் உலகில் இரண்டாவது பெரிய நாடு கனடாவே. கனடாவின் மொத்த பரப்பளவு 9.97 மில்லியன் சதுரக் கிலோமீற்றராகும். இங்குள்ள மக்கள் தொகை 30.1 மில்லியனாகும். இவர்களில் 22.7 மில்லியன் மக்கள் இம்முறை வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்ததாக தேர்தல் திணைக்களம் அறிவித்திருந்தது. 2000ஆம் ஆண்டு கனடாவில் தேர்தல் நடைபெற்றபோது 61 சதவீதத்திற்கும் சற்று அதிகமானவர்களே வாக்களித்திருந்தனர். கனடாவில் வரலாற்றில் இதுவே அதிகுறைந்த வாக்களிப்பு வீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவில் தலைநகர் ஒட்டாவாவில் உள்ள நாடாளுமன்றத்திற்கான தேர்தல் அழைப்பு விடுக்கப்பட்டபோது லிபரல் கட்சிக்கு 168, கனடிய பழமைவாதக் கட்சி 73, கியூபெக் கட்சி 33, புதிய மக்களாட்சிக் கட்சி 14, சுயேட்சைகள் 9 என ஆசனங்கள் நிறைந்திருக்க 4 ஆசனங்கள் வெற்றிடமாக இருந்தன. இதுவரை காலமும் 301 ஆக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்கள், இம்முறை தேர்தலுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் தொகுதிகளில் மீள்வரைவின் பின்னர் 308 ஆக அதிகரித்திருந்தது

1993, 1997, 2000 என நடைபெற்ற கடந்த மூன்று தேர்தல்களிலும் லிபரல் கட்சியே பெருன்பான்மைப் பலத்துடன் முன்னாள் பிரதமர் ஜீன் கிரிச்சியன் தலைமையில் ஆட்சிப் பொறுப்பை வெற்றி பெற்றது.

ஜூன் மாதம் 28ஆம் திகதி கனடாவின் 34ஆவது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதற்கான அறிவிப்பை லிபரல் கட்சியின் தலைவரும், பிரதமருமான போல் மாட்டின் மே 23ஆம் திகதி வெளியிட்டிருந்தார். 36 நாள்கள் தொடர்ந்த கடுமையான பிரசாரத்தின் பின்னர் நடைபெற்ற தேர்தலில் கனடியர்கள் மீண்டும் லிபரல் கட்சிக்கு ஆட்சியமைக்கும் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளனர். ஆனாலும் 168 ஆசனங்களுடனும் பெரும்பான்மைப் பலத்துடன் தேர்தலை எதிர்கொண்ட லிபரல் கட்சி, தனது பெரும்பான்மையை இழந்ததுடன் 135 ஆசனங்களை மாத்திரமே இம்முறை பெறமுடிந்தது.

2000ஆம் ஆண்டு மூன்றாவது தடவையாக பெரும்பான்மை பலத்தை பெற்று நாடாளுமன்றத்தில் ஆட்சியைப் பிடித்தவர் ஜீன் கிரிச்சியன். கடந்த வருடம் டிசம்பர் மாதம் 12ஆம் திகதி அவர் பிரதமர் பதவியை பரிமாறிக்கொண்டு சென்றுவிட, லிபரல் கட்சியின் தலைவர் என்ற முறையில் மீதமிருந்த ஆட்சிக்காலத்தை நிரப்புவதற்காக எதிர்காலப் பிரதமர் என்ற அடைமொழியோடு ஆட்டத்திற்கு வந்தவர் முன்னாள் நிதி அமைச்சர் போல் மாட்டின்.

ஆட்டத்தை ஆரம்பித்த வேகத்திலேயே போல் மாட்டினின் ஆடுகளத்தில் ஊழல் பந்தும் வீச்சலாக வீசியது. இதுவே இம்முறை தேர்தலின்போது அவரது நாடாளுமன்ற ஆசனங்களில இழப்பிற்கு முக்கிய காரணியாகவும் அமைந்தது. ஆனாலும் அவர் தனது கட்சி மட்டத்தில் கொண்டுவந்த சில மாற்றங்கள், பத்து ஆண்டுகளுக்கு மேலாக நீடித்த பெரும்பான்மை லிபரல் ஆட்சியிலிருந்து கனேடியர்கள் எதிர்பார்த்த ஒரு மாற்றம், மற்றும் இடதுசாரிகளான லிபரல் கட்சியின் ஆட்சியை உடைத்தெறியும் பலம் பெறுவதற்காக கைகோத்த இரண்டு வலதுசாரிக் கட்சிகள் என வேறு சில காரணங்களும் இங்கே கவனத்தில் கொள்ளப்[illegible] வேண்டியது. தேர்தல் அறிவிப்பு வெளிய[illegible] நிமிடத்தில் இருந்தே லிபரல் கட்சி தோல்வி முகம் நோக்கிச் சென்றுகொண்டிருந்ததை பல கருத்துக் கணிப்புக்களும் சுட்டிக்காட்டியிருந்தன.

இவ்வாறான பல கண்டங்களையும் தாண்டி, பல கருத்துக் கணிப்புக்களையும் பொய்யாக்கி எவ்வாறு லிபரல் கட்சி மீண்டும் ஆட்சி அமைப்பதற்கு தேவையான ஆசனங்களைப் பெற்றது.

*நன்றி:தமிழ்நாதம்*

---

## வீதியும் விதியும்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யாதபோதுகூட அனுமதிப் பத் திரத்தில் துளைகள் விழத் தொடங்கும். ஆசனப் பட்டிகளை அனைவரும் போட்டாக வேண்டும்.

வீதி ஒழுங்கு சட்டப் புத்தகத்தை முழுவதும் இக் கட்டுரையில் அடக்கிவி டல் சாத்தியமாகாது. எழுத்தில் உள்ள விடயங்களை மட்டும் வைத்துக்கொண்டு வீதியில் சமாளிக்கவும் இயலாது. நீச்சல் பற்றி ஆயிரம் பக்கங்கள் வாசித்தாலும் தண்ணீரில் குதிக்காமல் நீந்தமுடியுமா?

சாரதிகளின் உத்திகள் மற்றும் திடீர் நிலைமைகளை சமாளிக்கும் திறன் என்பன இடத்துக்கிடம் வித்தியாசமானதாக அமையவேண்டிய நிலைமை. [illegible] விடயங்களை அனுபவப்பட்டே அறிய வேண்டியதாக உள்ளதும் உண்மை. இவற்றையெல்லாம் வாசிக்கும் ஆர்வம் கூட பலருக்குக் கிடையாது. ஆர்வம் இருந்தாலும் அவகாசம் கிடையாது. விபத்துச் செய்திகளையும் படங்களையும் ஆர்வமாக வாசிப்பவர்கள்கூட அவற் றின் பின்னணி பற்றியும் தவிர்ப்பு பற்றியும் சிந்திக்க மறக்கிறார்கள்.

வீதிக்கு வரும் அப்பாவிகளே நீங்கள் யாராக இருந்தாலும் எதில் [illegible]ந்தாலும் அவதானமாக இருங்கள். உங்கள் பயணம் எவ்வளவு முக்கியமானது என உங்களுக்குத்தான் தெரியும். அது தடைப்பட்டால் எத்தனையோ சிக்கல்கள் எழலாம். எனவே பயணத்தை [illegible]க்குவமாகத் திட்டமிடுங்கள். நெருக்கடி குறைந்த நேரங்களை இயன்றவரை பயணத்திற்[illegible]. வீதியில் வைத்து விதி விளையாட இ[illegible]தீர்கள். சுகமாகவும் உற்சாகமாகவும் உங்கள் [illegible]யணத்தை தொடருங்கள்.

(முற்றும்)

---

## யூலிய்...! நாயல்ல நீ

*உன்னில் சாவுச் சிலந்தி வலைபின்னி*
*உயிர் உறுஞ்சக் கிடக்கிறாய்.*
*வாழ்வின் இறுதிக் கணத்தை*
*எப்படி எதிர்கொள்வாயோ?*
*ஒட்டி உலர்ந்து விலா எலும்பு துருத்த*
*இன்னுமென்னில் உயிரிருப்பதாகச் சொல்லி*
*மூச்சுவிடுகிறாய்*
*ஏது செய்ய இயலும் என்னால்?*
*ஊனுருக உள்ளே அழுதபடி*
*உன்னருகில் உள்ளேன்.*
*என்னை மன்னித்தருள்க.*
*பஞ்சுப் பொதியாய் என் வீடு புகுந்த அன்று*
*உன்னைக் கொஞ்சாதார் எவர்?*
*இன்று நாராய்க் கிழிந்து கிடக்கிறாய்.*
*உனக்கான மருந்தேதும் இல்லையாம்*
*நான் என்ன செய்ய?*
*துடித்துக்கொண்டிருக்காதே*
*கடைசி மூச்சை வெளியேவீசிக் கண்களை மூடிவிடு*
*குழிவெட்டிப் புதைத்துவிடுகிறேன்.*
*இம்மண்ணில் மனிதர்கள் மட்டுமல்ல*
*மிருகங்களும் வாழமுடியாதென்று*
*சொல்லிப்போகிறாய்*
*போ என் பிரிய சகியே.*
*யூலிய்! நாயல்ல நீ*
*எனக்குத் தோழி.*
*மனைவிக்குச் சோதரி.*
*பிள்ளைக்குச் சித்தி.*
*சேலைகட்டிப் படியிறங்குவாள் மனைவி*
*வாசல்வரை வந்து வழியனுப்புவாய்.*
*திரும்பி வீடுவர*
*ஓடிவந்து இடுப்பைக் கட்டி*
*முகத்தை வயிற்றிலுரஞ்சி மகிழ்வாய்.*
*மீனறுக்கும் போது*
*காகங்களுக்குக் காவலிருப்பாய்.*
*நள்ளிரவு கடந்து நான் வீடுதிரும்பும்வரை*
*வாசலிலென் வரவுபார்த்துக் காத்திருப்பாய்.*
*கண்டபின்பே உன் மனம் ஆறும்.*
*வாய்பேசா ஜீவனெனினும்*
*உன் உள்ளுணர்வை உணரமுடிந்தது எம்மால்.*
*நாம் சயனிக்கும் அறையின் சாளரங்களை*
*மூடாதிருக்க வேண்டும் என்பது உன் கட்டளை.*
*உள்ளே விளக்கெரிய வேண்டும்.*
*இது உன் உத்தரவு.*
*மணிக்கொரு தடவை யன்னலால் எட்டிப்பார்ப்பாய்*
*எண்ணிக் கணக்கிட்டும் இருப்பாயோ?*
*நாங்கள் உறக்கத்திலிருந்தால் உனக்குத் திருப்தி.*
*என் காவலிலிவர்கள் என்பதில்*
*உனக்கொரு கிறுக்கு*
*குளிரெனினும் சாளரம் சாத்தவிடாய்*
*காலால் விறாண்டித் திறவென்பாய்.*
*திறக்காதிருந்தால் குரைப்பாய்.*
*பனியெனினும் யன்னல் மூடாதிருக்கப் பணித்தாய்*
*உன் அன்புணர்ந்து ஒழுகினோம்.*
*இன்று நோயால் நொடிந்து கிடக்கிறாய்.*
*யூலி!*
*உயிரைத் தூக்கியெறிந்து இறந்துபடு.*
*அரக்கமனமல்ல எனக்கு*
*இரக்கமனம்.*
*நீ துடித்துக் கிடப்பதை*
*பார்த்திருக்க ஒப்பவில்லை என்நெஞ்சு.*
*வந்தாய்.*
*எம்மிற் கலந்து வாழ்ந்தாய்.*
*போகிறாய்.*
*போ தாயே.*
*மீண்டும் சந்திப்போமா?*
*சந்திக்க வேண்டும் சகியே.*
*யூலி!*
*ஆசையாய் ஒருமுறை அழைக்கிறேன்*
*என் குரலை உள்ளே வைத்தபடி*
*செத்துவிடு.*

- புதுவை இரத்தினதுரை

*குறிப்பு: அன்புடன் வளர்த்த நாய் அகாலமாய் இறந்தபோது எழுதியது.*

நன்றி:வெளிச்சம்

---

## தலைமுறை உணவு

"மில்லிலே குற்றுவதால்
வீணாகும் தவிடென்று,
கையில் உலக்கை கொண்டென்
காரிகையாள் கறுப்பனின
நெல்குற்றி மாவிடித்து,
நீண்ட குழற் பிட்டவித்து,
முற்றிப் பழுத்த
கப்பற் பழம் வைத்து,
முக்கால் அடி உயர
மூக்கு வைத்த பேணியிலே,
கெட்டிப்பாற் கோப்பிதந்தாள்
கெட்டிபெற்ற தென்னுடம்பு

இருவருமே வேலைசெய்யும்
இளைய தலைமுறையின்
அதிவேக உணவுமுறை
அந்தோ! பரிதாபம்
சிறிய ரண்டு கல்பணிசும்
சீராக முற்றாத
கதலிப் பழமொன்றும்
கலப்படத்தில் பேர்போன
கடைப்பாலில் ஒரு "கப்"பும்
காலை உணவானால்
உடலிற் பலமேது;
கடமைதனில் கருத்தேது?

- புத்தூர் வே.இளையகுட்டி..

பெயாரோஸ் சுபமாங்கல்யம்



## விரைவில் நீங்கள் திருமணம் செய்து கொள்வதாயின் திருமணத்திற்கான செலவுகளை நாம் ஏற்போம்

2005ம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்பு திருமணம் செய்து கொள்ளவிருக்கும் ஒரு இளம் பெண் தனக்குப் பிடித்த இடத்தில் திருமணத்தைச் செய்து கொள்ள நாம் உதவி செய்வோம். இதற்கான பெயாரோஸ் சுபமாங்கல்யம் 2004ம் ஆண்டு ஆரம்பித்துவிட்டது.

மணப்பெண்ணின் புடவை, தங்கச் சங்கிலி, பாதணிகள், தோழியர் இருவரின் புடவைகள், ஆபரணங்கள், பாதணிகள், முக அலங்காரம், தலையலங்கார ஆலோசனைகள், மலர் அலங்காரம், மணமேடை அலங்காரம், மேசை அலங்காரம், திருமண கேக், திருமண ஸ்ரக்சர் கேக், திருமண அழைப்பிதழ்/கேக் பெட்டிகள், DJ இசை, புகைப்படங்கள்/வீடியோ படங்கள், 150 பேருக்கான விருந்துபசாரத்துடனான மண்டபச் செலவுகள் இவை அனைத்தையும் வழங்க நாம் தயாராக உள்ளோம்.

**ஆறுதல் பரிசாக 10 தங்க நாணயங்கள்.**

**நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்**

உங்கள் வருங்கால துணைவருக்கும் உங்களுக்கும் இடையில் நடந்த மறக்க முடியாத சம்பவத்தை சுவைபட எழுதி, இருவரும் சேர்ந்து அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிட்டு 25கி அல்லது 50கி பெயாரோஸ் வெற்று உறை அல்லது சஷே உறையை இணைத்து இன்றே எமக்கு அனுப்பி வையுங்கள்.

முடிவுத் திகதி 2004 ஜூலை 31.

பெயாரோஸ் சுபமாங்கல்யம்,
**ஹேமாஸ் மார்க்கட்டிங் (பிரைவட்) லிமிட்டட்,**
36, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01.

நிலங்கா, துஷார்
(2003/2004 பெயாரோஸ் சுபமாங்கல்யம் வெற்றியாளர்)

FairRose
Fairness Cream
With Rosewater & Sandalwood Paste



மலர் அலங்கார அனுசரணையாளர்
Sterling Flowers (Pvt) Ltd.,

சிகை அலங்கார அனுசரணையாளர்
Salon Nayana

தங்க நகைகளுக்கான அனுசரணை

புடவைக்கான அனுசரணை
SAREE MANDIR

மென்மையான சருமத்திற்கு
வெண்மையான முகத்திற்கு

PHOENIX O&M 0147 Licence No.: C/38/2003




புதிய சிங்கர் தையல் மெஷின் 390 வரையிலான பல்வகை தையல் டிசைன்களைக் கொண்டது. உங்கள் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் திறமையான தையலுக்கு, நீங்களும் சிங்கர் தையல் மெஷின் ஒன்றை வாங்குங்கள்.



SINGER
உலகெங்கும் இல்லம் தோறும்

150 வருட அனுபவம் • பலதரப்பட்ட தையல் வகைகள் • விற்பனையின் பின்னர் சிறந்த சேவை • நாடெங்கிலும் உதிரிப்பாகங்கள் • சிங்கர் - அதி விசேட நம்பிக்கை

PHOENIX O&M 0830

PUBLIC LIBRARY
JAFFNA



# வடபகுதி வார்ப்புப் பட்டறை அபிவிருத்திக்காக யாழ். பொறியியலாளருக்கு விசேட பயிற்சி

இலங்கையிலுள்ள ஜேர்மனியின் பிரெட்ரிக் நவுமான் மன்றத்தினதும் (**Friedrich Naumann Stiftung-FNSt**) இலங்கை வர்த்தகக் கைத்தொழில் சபைகளின் சம்மேளனத்தினதும் (**FCCISL**) கூட்டுத் திட்டமான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்தியாளர் (**Small & Medium Enterprise Developers - SMED**) அமைப்பு அண்மையில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் பிரிவில் பொறியியல் பட்டப் படிப்பை முடித்துள்ள - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த - செல்வி கவிதா சபாரட்ணத்துக்கு விசேட பயிற்சித் திட்டத்தினை ஒழுங்குபடுத்தியுள்ளது.

பித்தளை, அலுமினியம் போன்ற கைத்தொழில் துறைகளை யாழ். குடாநாட்டில் அபிவிருத்தி செய்வதே இப்பயிற்சித் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டமானது தேசிய தூய உற்பத்தி நிலையத்துடன் (**National Cleaner Production Centre - NCPC**) இணைந்தே நடத்தப்படுகின்றது. இந்நிறுவனத்தின் ஸ்தாபக நிறுவனமான **SMED** யாழ்ப்பாணம் வர்த்தகக் கைத்தொழில் மன்றத்திற்கு (**Chamber of Commerce & Industry of Yarlpanam - CCIY**) இத்துறையினை வினைத்திறன் மிக்கதாகவும் குறைந்த மூலப்பொருள் மற்றும் சக்தி விரயத்துடன் பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் அபிவிருத்தி செய்யவும் உதவிகளை வழங்கும்.

மாவனல்லையிலுள்ள 'செலகல பித்தளை தனியார் நிறுவனத்தின்' முகாமைத்துவ இயக்குநர் ஆனந்த குலரத்ன இப்பயிற்சியினை வழங்குவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தார். மற்றும் அக்ரோரெக்னிக்கா நிறுவனத்தின் முகாமையாளரும், வார்ப்புப் பட்டறைகளின் அபிவிருத்திச் சங்கத் (**FDA**) தலைவருமான மெல்வின் சமரசிங்கவும் உதவி நல்கினார்.

**SMED**இன் ஸ்தாபக நிறுவனமான **FNSt** சமாதானத்தை மலரச் செய்தல் மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றைத் தனது முக்கிய இலக்குகளாகக் கொண்டு இயங்கி வருகின்றது.

**FNSt** நிறுவனமும் அதன் சக நிறுவனமான **FCCISL**வும் இணைந்து திறந்த பொருளாதார மற்றும் சந்தைப்படுத்தற் கொள்கைகளை நடைமுறைப் படுத்தி வருகின்றன. **FCCISL** மற்றும் **SMED** ஆகிய நிறுவனங்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையினை உற்பத்தித் திறனுள்ளதாகவும், போட்டியிடக் கூடியதாகவும், அதிக வேலை வாய்ப்பு, திறந்த சந்தை ஆகியவற்றைக் கொண்ட ஒரு துறையாகவும் உருவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

ஜேர்மனால் ஸ்தாபிக்கப்பட்ட **FNSt** நிறுவனம் சுதந்திரமான சூழலிலுள்ள ஓர் சர்வதேச சமூகத்துக்கிடையிலான அனைத்து கொடுக்கல் - வாங்கல்கள், பல்வேறுபட்ட மக்களுக்கிடையிலான கூட்டுறவு, போட்டித்தன்மை, கலாசாரங்கள் போன்றவற்றை தனது நோக்கில் உள்ளடக்கியுள்ளது.



ஆனந்த குலரட்ண அவர்கள் செல்வி கவிதா சபாரட்ணம் அவர்களுக்கு வார்ப்பு சம்பந்தமாக விளக்கமளிப்பதைப் படத்தில் காணலாம்.




## 22 லட்சம் ரூபா பெறுமதி வீடு பேபி ஷெரமி தரும் விசேட பரிசு!

பேபி ஷெரமி, வெறுமனே குழந்தைகளுக்கான உற்பத்திகளை மாத்திரம் தயாரித்து விநியோகிக்கவில்லை. அது குழந்தைகளின் பாசத்தை மதித்து அவர்களின் எதிர்காலத் தேவைகளை உணர்ந்து செயலாற்றி வருகிறது. கடந்த வருடத்திற்கு முன்னரான இரு வருடங்கள், பேபி ஷெரமி 65 லட்சம் ரூபா பெறுமதியான செலான் சேமிப்புச் சான்றிதழ்களைக் குழந்தைகளுக்கு அன்பளிப்பாக வழங்கியது.

அதுபோல கடந்த வருடம் பேபி ஷெரமி சுவசிங்கிதி அதிர்ஷ்டப் போட்டியை மிக வெற்றிகரமாக நடத்தியது. அப்போட்டியில் கலந்துகொள்ள 18,000 நுழைவுக் கூப்பன்கள் வந்து குவிந்தன.

சென்ற வருடம் முதற்பரிசாக 20 லட்சம் ரூபா பெறுமதியான புத்தம் புதிய வீட்டை அதிர்ஷ்டசாலியான பெண் குழந்தை ஒன்று வென்றெடுத்தது.

22 லட்சம் ரூபா பெறுமதியான புத்தம் புதிய வீட்டை முதற்பரிசாக வழங்கவுள்ள பேபி ஷெரமி சுவசிங்கிதி அதிர்ஷ்டப் போட்டி - 2 இப்போது ஆரம்பமாகி விட்டது.

இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் பரிசாக மொத்தம் 12 லட்சம் ரூபா பெறுமதியான செலான் சேமிப்புச் சான்றிதழ்கள் இம்முறை வழங்கப்படும். இறுதித் தேர்வில் கலந்துகொள்ளத் தெரிவாகும் 60 குழந்தைகளுக்குத் தலா ஒன்று வீதம் 60 தங்கப் பவுண்கள் பரிசாக வழங்கப்படும்.

நாடு முழுவதிலும் இருந்து கடந்த வருடம் கிடைக்கப் பெற்ற நுழைவுக் கூப்பன்களுக்கு ஏற்ப போட்டிகள் ஆறு பிராந்திய நிலையங்களில் மட்டுமே நடைபெற்றன. இம்முறை இவை 12ஆக விஸ்தரிக்கப்பட்டுள்ளன. கொழும்பு, காலி, கண்டி, பதுளை, அநுராதபுரம், புத்தளம், வவுனியா, திருகோணமலை, அம்பாறை, குருநாகல், திஸ்ஸமஹராம, இரத்தினபுரி ஆகிய இடங்களில் 2004 ஓகஸ்ட் முதல் ஒக்டோபர் வரையான காலத்தினுள் இம்முறை போட்டிகள் நடைபெறும்.

பெறப்பட்ட மொத்த நுழைவுக் கூப்பன்களிலிருந்து ஒவ்வொரு பிராந்தியப் போட்டிக்கும் என ஐம்பது குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்கள் பங்குபற்றும் அரை இறுதிப் போட்டியில் பிராந்தியத்திலிருந்து ஐந்து குழந் தைகள் என மொத்தம் அறுபது குழந்தைகள் இறுதிப் போட்டிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுவர். இறுதிப் போட்டி 2004 ஒக்டோபரில் கொழும்பில் நடைபெறும்.

15 ஜனவரி 2003 - 15 ஜனவரி 2004 வரையான காலத்தினுள் பிறந்த குழந்தைகளே இம்முறை போட்டியில் கலந்துகொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட நுழைவுக் கூப்பன்கள், பெற்றோர்/பாதுகாவலரால் கையொப்பம் இடப்பட்டு, குழந்தையின் அழகிய படம், நோய்த் தடுப்பு மருந்தூட்டல் பதிவேடு/ சுகாதாரப் பருவப் பதிவேடு மற்றும் பிறப்புச் சான்றிதழ் என்பனவற்றின் பிரதிகளுடன் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

குழந்தையின் ஆரோக்கியம், மருத்துவ மதிப்பீடு, தோற்றம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்படுவர். அரசாங்க வைத்தியர்கள் உள்ளடக்கிய நடுவர் குழுவே தேர்வுகளை மேற்கொள்ளும்.

பேபி ஷெரமி சுவசிங்கிதி அதிர்ஷ்டப் போட்டியின் முழுமையான விவரங்களும் நுழைவுக் கூப்பன்களும் இப்போது பத்திரிகைகளில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

